சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 18 3[illegible]-5-'42 Price 2 Annas

இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விருப்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

டம் கொடுத்து 'உடம்பு சரியானதும் உன் சித்தி கட்டிக்கச் சொன்னாள்' என்று சொல்லுங்கள்'' என்றாள்.

அந்த மனிதனுடைய கண்களில் கண்ணீர் நிரம்பி விட்டது. அரைமணி சம்பாஷணைக்குள் அறிமுகம் ஆகாத மனிதன் ஒருவனுடைய நோய் வாய்ப்பட்ட ஒரு பெண்ணுக்கு இப்படி விலையுயர்ந்த வஸ்துவைப் பரிசாகக் கொடுப்பதைப் போன்றச் செய்கையை வாழ்க்கையில் அவர் அதற்கு முன் பார்த்ததே இல்லை போலும்!

''அவள் பிழைத்து எழுந்திருக்க வேண்டும் என்று ஆசிர்வாதம் செய்யுங்கள் அம்மா, போதும். ஏழை வீட்டில் விலையுயர்ந்ததைக் கொண்டு போய் என்ன செய்வேன்? அதை எடுத்து வையுங்கள்'' என்று சொல்லி அந்த மனிதன் என் பக்கம் பார்த்தார்.

''அவள் கட்டிக்கொள்ள வேண்டும் என்று அவள் சித்தி கொடுக்கும் பொழுது நீங்கள் தட்டாமல் கொண்டு போவது தான் உசிதம்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே ''ஸரளா பாக்கியம் செய்தவள். எங்களுக்கு இந்த மாதிரி சித்தி அத்தை இருந்து விட்டால் போதுமே ஐயா! இனி மேல் உங்கள் பெண் சட்படென்று பிழைத்தெழுந்து விடுவாள்'' என்றேன்.

அவருடைய முகததில் பூராவும் நன்றியறிவு பொங்கி நின்றது. அதற்கு மேல் அவர் ஒன்றும் ஆட்சேபணை செய்யாமல் புடவையை எடுத்துக்கொண்டார். மறுபடியும் இருவரும் பேசத்தொடங்கினார்கள். வாழ்க்கை, சமூகம், சுக துக்கம்,—என்னவெல்லாமோ பேச்சு. நான் மட்டும் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தேன். 'இந்த யாத்திரையின முடிவு எங்கே?' என்ற கேள்வி அந்தச் சிறு சம்பவததிலிருந்து கிளம்பி என் மனத்தில் உழன்று கொண்டிருந்தது.

பத்துப் பனிரண்டு ரூபாய் விலையுள்ள ஒரு புடவையைத் தானம் செய்வதென்பது ராஜலக்ஷ்மிக்குப் பெரிய விஷயமும் அல்ல; புதிதும் அல்ல. அவளுடைய வேலைக்காரர்கள் யாராவது இருந்தால் நான் இதைப் பற்றி இவ்வளவு கூட யோசித்திருக்கமாட்டேன். ஆனால் என் யோசனை வேறு. அவள் தானம செய்கிற வகையில் இது ஒரு கணக்குக் கூட இல்லை என்பது எனக்குத் தெரியும்: ஆனால் அவளுடைய ஹிருதயத்தின்பெருக்கு. எந்த திக்கை நோக்கிப் பாய்ந்து தன்னை வற்றவடையச் செய்ததோ, அதன் முடிவு எங்கே, எப்படி என்பதைப் பற்றித்தான் யோசித்துக்கொண்டிருந்தேன்.

மாஸ்கோவின் புதிய பிரிட்டிஷ் ஸ்தானீகர் ஸர் ஆர்ச்சி பால்ட் க்ளார்க் கெர் (இ. என். பி.)

எல்லா ஸ்திரீகளுடைய உள்ளத்திலும் பெண் அம்சம் இருக்கிறதா இல்லையா என்பதை நிச்சயமாகக் கூறுவது என்பது மிக்க அசட்டுத் தைரியம். ஆனால் பெண்ணினுடைய முடிவான பொலிவு, பூராவும் தாய் உணர்ச்சியில்தான் இருக்கிறது, என்ற விஷயத்தை தொண்டையைக் கிழித்துக் கொண்டு பிரசாரம் செய்ய வேண்டும்.

ராஜலக்ஷ்மியை எனக்கு நன்றாகத் தெரியும். அவளுடைய பாயிஜீ வாழ்க்கையை அவளுடைய களங்கமற்ற யௌவனம், முற்றிலும் ஆட்சேபித்து, ஒவ்வொரு நிமிஷமும் அவளை மாய்த்துக்கொண்டிருந்தது என்பதை, நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். இன்று அவள் அந்தப் பெயரை உச்சரித்த மாத்திரத்திலேயே, லஜ்ஜையால் மண்ணோடு மண்ணாகி விடுகிறாள். என்னுடைய பிரச்னையும் அதேதான்!

'எல்லாவற்றையும் கொடுத்து அதே ஆழ்ந்த வேகம் இன்று அவளிடத்தில் இல்லை. இப்பொழுது அவள் சாந்தமாகவும் திடமாகவும் இருக்கிறாள். இருக்கின்றனவா இல்லையா என்று சந்தேகப்படுகின்ற அவளுடைய ஆசைகளும், பாசங்களும் அப்படி அடங்கிப்போய்விட்டன. ஆகையால் இந்த சாமானியமான சம்பவத்தைப் பார்த்ததும் எனக்கு மறுபடியும் நினைப்பு வந்தது. அவளுடைய பக்குவமான யௌவனத்தின் ஆழ்ந்த தரைமட்டத்திலிருந்து தாய் உணர்ச்சி இன்று திடீரென்று தலை தூக்கி வெளியே வந்தது. அப்பொழுதுதான் விழித்துக் கொண்ட கும்பகர்ணனுடைய பயங்கரமான பசியைப்போன்ற அந்த வேட்கைக்கு ஆகாரம் எங்கே கிடைக்கப்போகிறது? சொந்தமாகக் குழந்தைகள் இருந்தால், எந்தப்பசி சகஜமாகவும் சுபாவமாகவும் இருந்து விடுகிறதோ, அது குழந்தைகள் இன்மையால் பெருத்த சிக்கல் / பிரச்னையாக மாறிவிடுகிறது.

அன்று பாட்னாவில் அவள் உள்ளத்தில் தோன்றின. தாய் வேட்கையைக் கண்டு நான் மோகித்துப்போனேன். இன்று அதே உருவத்தை நினைத்துப் பார்த்த பொழுது, பெருத்த வேதனையுடன் மனதில் இது தான் தோன்றிற்று. அவ்வளவு பெரிய நெருப்பு கொஞ்சத்தில், அணையாது என்று தான் அவள் இன்று, பிறர் குழந்தைகளைத் தன் குழந்தைகளாகப் பாவித்து குழந்தை விளையாட்டு விளையாடுகிறாளோ? ராஜலக்ஷ்மியினுடைய உள்ளப்பசி அப்படியெல்லாம் அடங்குவதா? ஆகையால்தான் இன்று ஒரு பங்கு மட்டும் தனியாக அவளிடத்தில் வியாபித்து நிற்கவில்லை. இன்று உலகத்தில் எங்கெங்கு எவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனவோ, அதன் எல்லாவற்றினுடைய சுகதுக்கங்களும், அவளுடைய ஹிருதயத்தை ஆட்டிவைத்துக் கொண்டிருந்தன.

வாத்தமானத்தில் அந்த மனிதன் இறங்கிப் போனதும், ராஜலக்ஷ்மி வெகுநேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். நான் ஜன்னலிருந்து பார்வையைத் திருப்பி ''இந்த அழுகை யாருக்கு நல்லதாகப் போகிறது? ஸரளாவுக்கா அவள் தாயாருக்கா?'' என்றேன்.

ராஜலக்ஷ்மி முகத்தைத் தூக்கி ''இவ்வளவு நேரம் எங்கள் பேச்சைக்கேட்டுக் கொண்டு தானே இருந்தாய்?'' என்று கேட்டாள்.

''நன்றாகக் கேட்டுக்கொண்டு இருந்தேன். மனிதன் தானே பேசாவிட்டாலும் பிறர் பேசுவது அவன் காதில் நன்றாகப் படுகிறது. வாழ்க்கையில் அதிகம் பேசாதவர்களுக்குக் கடவுள் இந்த தண்டனையை விதித்திருக்கிறார். இதிலிருந்து தப்புவதற்கு யாதொரு வழியும் இல்லை. அது கிடக்கட்டும். கண்ணீர் யாருக்காகப் பெருகிற்று? அதை நான் அறியலாமா?''

''என்னுடைய கண்ணீர் யாருக்காகப் பெருகிற்று என்பதைக் கேட்பதில் உனக்கு ஒன்றும் லாபமில்லை!''

''லாபம் ஒன்றுக்கும் நான் ஆசைப்படவில்லை, நஷ்டம் என்ன என்பதைத்தான் அறிய விரும்புகிறேன். ஸரளாவோ அல்லது அவள் தாயோ—அவர்களுக்காகக் கண்ணீர் பெருகுவதைப் பற்றி அறிய எனக்குஆவலில்லை. ஆனால் ஸரளாவினுடைய தகப்பனுக்காகவா இந்தக் கண்ணீர் என்பதை அறிய விருமபுகிறேன்.''

ராஜலக்ஷ்மி ''ஹூ!'' என்று மாத்திரம் சொல்லி விட்டு ஜன்னலுக்கு வெளியே பார்க்க ஆரம்பித்தாள்.

இந்த விளையாட்டு முற்றிலும் வீணாகப் போகாது: இதனால் பல அடைபட்ட உணர்ச்சி துவாரங்கள் திறக்கும் என்று எண்ணினேன். ஆனால் அப்படி ஒன்றும் ஆகாமல் இந்த நிமிஷம் நான் எந்த திக்கு திறபடவேண்டுமென்று எண்ணினேனோ, அது முற்றிலும் அடைபட்டு விட்டது.

ஆனால் வெகு நேரம் மௌனமாக இருந்தேன். பேசவேண்டுமென்று ஏதோ ஒரு ஆவல் உள்ளிலிருந்து பொங்கி எழுந்தது. ஆகையால் அதற்கு மேலும் மௌனமாக இருக்க முடியவில்லை. மறுபடியும பேச ஆரம்பித்தேன்.

''வர்த்தமானத்திலிருந்து ஆகாரத்திற்கு ஏதாவது வாங்கிக் கொண்டு போனால் நன்றாக இருக்கும்.''

ராஜலக்ஷ்மி ஒன்றும் பதில் சொல்லவில்லை. முன் போலவே தான் இருந்தாள்.

''பிறருடைய கஷ்டத்தைக் கண்டு இப்படிக் கதறுகிறாய்? வீட்டிலிருக்கிறவர்கள் கஷ்டத்தைக் காது கொடுத்தும் கேட்பதில்லை. அந்தக் கடனிலிருந்து தப்பும வித்தையை எங்கே கற்றுக் கொண்டாய்?''

ராஜலக்ஷ்மி இந்தத் தடவை மெதுவாக ''கடனிலிருந்து தப்பித்துக் கொள்வதில் உனக்கு மிகவும் நம்பிக்கை இருக்கிறது என்று தெரிகிறது. ஆமாம் அவர்கள் அந்த நமபிக்கைக்குப் பாத்திரமானால்......'' என்றாள். என்னை மறைமுகமாக அவாகள் என்று சிரித்தாள்.

''ஏன் அவர்கள் உனக்கு என்ன செய்தார்கள்?''

''இப்பொழுது ஒன்றும் செய்யவில்லை. பின்பு ஏதாவது செய்வார்களோ என்ற பயத்தால் முன்னதாகவே அதில் இவ்வளவு பக்தி.''

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு ''நீங்கள் சொல்லுவது அநியாயம். நீங்கள் அவர்களை சிறு கூட்டத்திலிருந்தும் ஜாதியிலிருந்தும் சமூகத்திலிருந்தும்—எல்லா பக்கத்திலிருந்தும் பகிஷ்காரம் செய்து விட்டீர்கள். ஆகையால்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

உங்கள்
அபிமானம் பெற்ற கடை
வெள்ளி சாமான்கள்

* சமீபத்திய மோஸ்தர்
* ரகம்
* விலைக்கு
உத்திரவாதம்.

ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனா பஜார், மதராஸ்.
போன் : 3268.

ஸங்கீத சிந்தாமணி	...	ரூ. 3
திராவிட கானம்	...	ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை		ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனாம். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்.

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

சுதேசமித்திரன்

31-5-1942

சென்றவார நிகழ்ச்சிகள்

சென்னைப் பள்ளிக்கூடங்கள்

விடுமுறைக்குப் பிறகு நகரத்திலுள்ள எல்லா கல்வி ஸ்தாபனங்களும் குறித்த தேதிகளில் திறக்கப்பட வேண்டுமென சென்னை சர்க்கார் விரும்புகிறார்கள். நகரிலிருந்து வெளியூர்களுக்கு பெற்றோர்கள் அனுப்ப முடியாத குழந்தைகளின் கல்விக்கு பாதகமேற்படக்கூடாதென்பதே சர்க்கார் கருத்து. இதனால் சென்னைக்கு எதிரி ஆபத்து நீங்கிவிட்டதாக அர்த்தமில்லை.

அவ்வாபத்து இன்னும் இருக்கிறது. சென்னை மாணவர்கள், தற்போது வெளியூர்களில் உள்ளவர்கள். அங்குள்ள பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சேர விரும்பினால் அதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அங்ஙனமே ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. வெளியூர்களிலுள்ள கல்வி ஸ்தாபனங்கள் குறித்த தேதிகளில் திறக்கப்படும்.

* * * *

சிந்துவில் கொள்ளைக்காரர்

மீர்ப்பூர்-கிப்ரோ ரஸ்தாவில் இம்மாதம் 20-ந் தேதி காலை 13-பஸ் பிரயாணிகள் ''ஹர்'' கொள்ளைக்காரர்களால் கொல்லப்பட்டனர்.

பிரயாணிகளுடன் கூடிய பஸ் ஒன்று காலை கிப்ரோவிலிருந்து மிர்புர்க்காஸுக்கு சென்று கொண்டிருந்தபொழுது ஆயுதபாணிகளான ''ஹர்'' கொள்ளைக்காரர்கள் பஸ்ஸை நிறுத்தி அதிலுள்ள பிரயாணிகளில், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அவருடைய சிப்பந்தி இருவர் உள்பட 13-பேர்களைக் கொலை செய்தும், நான்கு பேர்களுக்குக் காயம் உண்டாக்கியதாகவும் உத்தியோக தோரணையில் அறிவிக்கப்படுகிறது. பஸ் நெருப்பு வைக்கப்பட்டது.

''எதிரிகளைத் தாக்கவிருக்கும் ஒரு ராணுவப்படை தாக்கும் முறைகளை முன்னாலேயே வெளியிடுவது வழக்கமில்லை'' என்று ஸிந்து கவர்னர் ஹர் கொள்ளைக்காரர்களின் அட்டகாஸத்தைப் பற்றி பேட்டி கண்டு பேசிய பொழுது சொன்னார். கவர்னர் மேலே பேசுகையில் கூறியதாவது:—

'ஹர்' கொள்ளைக்காரர்களின் பிரச்னை மிகவும் சிக்கலாகவே இருக்கிறது. ஆயினும் அக்கொள்ளைக் கூட்டத்தினரின் அட்டூழியங்களை அடக்குவதில் கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள், கூடிய சிக்கிரம் இந்த அபாயம் மாகாணத்திலிருந்து விலகிவிடும் என்பதில் சந்தேகமே இல்லை.

லாகூர் மெயில் கவிழ்க்கப்பட்ட பிறகு ''ஹர்'' கொள்ளைக்காரர்கள் பல விடங்களில் பொது மக்களைப் பயமுறுத்தி வருவதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஸர்ஹாத்-கோத்கி ஸ்டேஷன்களுக்கு இடையில் ரயில்வே லயனை உடைத்து அதிலுள்ள பிளேட்டுகளைக் கழற்றி விட்டிருந்ததாகவும், ஒரு கூட்ஸ் வண்டு அந்த லயனில் சென்றபொழுது டிரைவர் இஞ்ஜினிலிருந்து லயனைப் பார்த்து அது சீர்கெட்டிருப்பதை அறிந்து வண்டியைத் திடீரென்று நிறுத்தி அபாயத்தைத் தவிர்த்ததாகவும் கூறப்படுகிறது.

சுக்கூர் ஜில்லாவில் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன வென்றும் தந்தி இலாகா அதிகாரிகள் கம்பிகளைச் சீர்படுத்தி வருகிறார்களென்றும் சொல்லப்படுகிறது.

அஸ்ஸாமில் குண்டு வீச்சு

இம்மாதம் 18-ந் தேதி கிழக்கு அஸ்ஸாமிலுள்ள கிராமம் ஒன்றில் அமைதியுடனிருந்த ஜனங்களிடையே குண்டுகள் வீசப்பட்டன. உயிர்ச்சேதமும் சொற்பம், சொத்துக்களுக்கு நஷ்டம் குறைவே. கிராம ஜனங்கள் தைரியமாகவே இருந்தனர் என்று ஒரு சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

ஐரோப்பியச் செய்திகள்

இந்தியா மந்திரி பிரசங்கம்

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தினத்தை முன்னிட்டு செய்த ரேடியோப் பிரசங்கத்தில் இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரி பின் கண்ட விதம் பேசினார்:—

மனிதர்களால் அமைக்கப்பட்ட ஸ்தாபனங்களெல்லாவற்றிலுமே குற்றங்குறைகளிருப்பது சகஜம். ஆதலால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் குறைகளிருப்பது வியப்பல்ல, சுதந்திரம், நியாயம், இவற்றைப் பரவச் செய்ய உலகம் முழுவதிலும் பிரிட்டிஷ் சாம்ராஜயத்தை விடச் சிறந்த ஸ்தாபனமே கிடையாதென்பதே என் கருத்து. தற்போதுள்ள கஷ்டங்களிடையேயும், புனருத்தாரணத்திலுள்ள இடைஞ்சல்களுக்கிடையேயும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய முறையிலுள்ள நமது நம்பிக்கை சிறிதும் குறையக் கூடாது. சென்ற யுத்தம் முடிந்த பின் நெருக்கடியான வருஷங்களில் நமது நம்பிக்கை குறைந்ததாலேயே இப்போது நமக்குப் பேராபத்து நேர்ந்திருக்கிறது,

ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா என்ற வார்த்தைகளைக்கேட்கையிலேயே மனம் புண்படுகிறது. அந்நாட்டு மக்கள் நம்மிடம் விச்வாஸக் குறைவு கொண்டதாலோ நமது அதிகார வர்க்கத்தினர் அந்த ஜனங்களிடம் அனுதாபத்துடன் நடந்துகொள்ளாததாலோ மலேயா முதலிய பிரதேசங்கள் எதிரி வசமாகிவிடவில்லை. பிரிட்டிஷ் கடற்படை இருக்கும் வரை அப்பிரதேசங்களுக்கு பயமில்லையென்ற நமது நம்பிக்கை பாழானதாலேயே எதிரிகள் அப்பகுதிகளைக் கைப்பற்றினர்.

மலேயா முதலிய பிரதேசங்களிலும், பர்மாவிலும் அந்நாட்டு மக்களுக்கு நாம் ராணுவ பயிற்சியளிக்கவில்லை: நம் ராணுவச் செலவிற்காக அவர்களிடம் வரி வசூலிக்கவுமில்லை. பர்மா அதிகாரிகள் தம் கடமையைச் செய்தனர். பர்மிய ஜனங்களில் பெரும்பான்மையோர் நம்மிடம் கொண்டுள்ள விச்வாஸத்திற்கும் குறைவில்லை. ஆனால் எதிரி படையெடுத்தபோது அவர்கள் நிராதரவாயினர்,

எதிர் காலத்தில் இந்தியா சுதந்திரம் பெறுவது சம்பந்தமான பிரிட்டிஷ் நல்லெண்ணத்தைச்சந்தேகமின்றி நிரூபிக்கவே ஸர் க்ரிப்ஸ் இந்தியாவுக்குச் சென்றார். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள மற்ற நாடுகளுக்குச் சமமாக இந்தியாவும் கௌரவமான சுதந்திரமான அந்தஸ்துப் பெற வேண்டுமென்ற நமது திட்டமான கருத்து. ஸர் க்ரிப்ஸ் திட்டம் நிராகரிக்கப்பட்டதால் சிறிதும் குறையவில்லை.

* * * *

ஸர் க்ரிப்ஸ் பதில்

யுத்த நிலைமைப்பற்றி, காமன்ஸில் சென்ற வாரம் விவாதம் நடந்தது. மிஸ்டர் ஷின்வெல் (தொழிற்கக்ஷி) கீழே குறிப்பிட்ட கேள்வியை அச்சமயம் கேட்டார்:—

இந்தியாவில் நடந்த சமரஸப் பேச்சுகள் பலன் பெறவில்லை. மீண்டும் சமரஸப்பேச்சுகள் ஆரம்பிப்பதில்லை யெனச் சர்க்கார் தீர்மானித்து விட்டனரா? அல்லது இந்திய மக்கள் நம்மை யாதரிக்க மற்றொரு முயற்சி செய்யப்படுமா?

இதற்கு ஸர் கிரிப்ஸ் சர்க்கார் சார்பாக அளித்த பதில் பின் வருமாறு:—

'இந்தியா சம்பந்தமாகப் பிரிட்டிஷ் சர்க்கார் மீண்டும் ஆலோசிக்கத் தயார். அப்பிரச்னை தீர வேண்டுமென்பதே சர்க்காரின் கவலை. தாம் வெளியிட்ட திட்டமே நன்றாயிருப்பதாகக் கருதுவதால் சர்க்கார்

(28-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

★

காகிதக்கட்டுப்பாடு

★

பத்திரிகைகளுக்குத் தேவையான காகிதம் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகி வந்தது. யுத்த நிலைமையில், கப்பல் வசதி வர வரக்குறைந்துவிட்டதால், இறக்குமதிக் கட்டுப்பாடு வலுத்து, நிர்ப்பந்தங்கள் மேன் மேலும் முளைத்து வருகின்றன. ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து, தினசரிப் பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும், இன்ன விலைக்கு விற்றால் இவ்வளவு பக்கங்கள் தான் போடலாம் என்று இந்தியா ஸர்க்கார் வரையறுத்து விட்டனர். ''மித்திரன்'' வாரப்பதிப்பு இதுவரை இரண்டு அணாவுக்கு 32 பக்கங்கள் அடங்கிய சஞ்சிகையாக வெளி வந்து கொண்டிருந்தது: ஜூன் மாதம் முதல் தேதிக்குப் பிறகு, 32 பக்கங்கள் வெளியிடுவதானால் சஞ்சிகையின் விலையை 4 அணாவாக உயர்த்தவேண்டியதாகிறது. விலையை உயர்த்தாமல் வெளியிடுவதானால் 16 பக்கங்களுக்கு மேல் வெளியிட முடியாது. இன்றைய நிலைமையில் விலையை உயர்த்துவது உசிதமாகத் தோன்றவில்லை. இரண்டு அணாவுக்கு 16 பக்கங்கள் வெளியிட்டு, இயன்றவளவுக்கு, இதுவரையில் செய்துவந்த சேவைக்குப் பங்கமில்லாமல் செய்யலாம் என்றே தீர்மானித்திருக்கிறோம். மக்களுடைய ஆதரவும் குறையாமல் திரண்டு நிற்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

★

உத்தமர் நினைவு நாள்

மயிலாப்பூர் ஒய். எம். ஐ. ஏ. கிளை ஆதரவில் சென்ற 19-ம் தேதி 'மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தலைமையில் "ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் தினம்" அனுஷ்டிக்கப்பட்டது.

★



வாதமும் வசையும்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

ராஜாஜி சில தினங்களாக தமிழ்நாட்டில் பிரசாரம் செய்து வருகிறார். தமிழ் நாட்டில் பிறந்தவர். தமிழ் மக்களை நன்றாய் அறிவார். நியாயம் எடுத்துச் சொன்னால், கேட்பர் என்ற தைர்யம் அவருக்கு; பிரசாரத்தில் இறங்கிய காரணம் இதுதான். நம்பிக்கையும் வீண் போகவில்லை. ஒவ்வொரு ஊரிலும் பெரும் கூட்டங்கள் கூடிக் கேட்கின்றன. சந்தேகங்களுக்கெல்லாம் சமாதானம் கூறி வருகிறார். சந்தேகம் கொள்வது சகஜம்: தீர்ப்பது கடமை; தீர்க்கத் தயங்கவில்லை. பிரதி ஊரிலும் மாலையில் கூட்டங்கள்; பகலெல்லாம் சிரத்தையுள்ளவர்களுடன் சம்பாஷணை; பகலில் எழுப்பப்படும் பிரச்னைகளை அஸ்திவாரமாகக் கொண்டு மாலையில் பிரசங்கம் செய்கிறார். நான்கிடங்களில் பேசினால் கேட்கக் கூடிய கேள்விகளெல்லாம் அற்றுப்போய்விடும். கேள்விகளுக்கு பதில் சொல்லலாம். கேள்வியின் நோக்கம் வேறாயிருந்தால்? பதில் என்ன சொன்னாலும் ஏறாது. விளக்கம் பெறுவது நோக்கமல்ல; விஷமமே நோக்கம். ஆயிரம்பேர் அடங்கிய கூட்டத்தை ஐந்துபேர் கலைக்கத் தீர்மானிக்கின்றனர். கேள்வி கேட்கப் புறப்படுகின்றனர். கூச்சலிடுகின்றனர்; குழப்பமூட்டுகின்றனர்: கல்லெறியவும் கை கலக்கவும் தயார்! தீய முறை இது; தீண்ட விடுவது தவறு; தமிழ்மக்கள் இடங் கொடுக்கலாகாது.

ராஜாஜியின் யோசனை புரட்சிகரமாயிருக்கலாம். சதியில் அவர் இறங்கவில்லை. திரை மறைவில் வேலை செய்யவில்லை. பகிரங்கமாகப் பேசுகிறார். காரண கார்யத்தை எடுத்துக் கூறுகிறார். பத்தியமாய் பட்டால் கேளுங்கள்; இல்லாவிட்டால் விடுங்கள்; நிர்ப்பந்தமில்லை. வழி காட்டுவது தலைவரின் கடமை. எதிர்ப்பு இருந்தும் வழி காட்டத் துணிவது தன்னலமற்ற சேவையின் சீரிய லக்ஷணம். சேவைக்கு தியாகத்தை உரைகல்லாக விதித்தார் மகாத்மா. தியாகிகள் மக்களின் மதிப்புக்குப் பாத்திரமாயினர். தியாகத்திற்கு எல்லை ஏது? அந்த மதிப்பையும் தியாகம் செய்ய ஒருவர் முன் வருவாரானால் அவருடைய அந்தரங்க சுத்திக்கு வேறு பிரமாணம் தேவையில்லை.

காது கொடுத்துக் கேளுங்கள். எதிர்வாதம் புரிவோர் வாத லக்ஷணத்தை அநுசரித்தால் நலமுண்டு. வாதத்திற்கு வாதமே விடை; வசையல்ல. வாதம் வித்தையின் தெளிவு வசை வித்தையின் கழிவு. வாதம் குறைய வசை கூடுவது அநுபவம். முறை தவறிப் பேசுவதும் நடப்பதும் எதிர்வாதத்தை எடுப்பிலேயே பலஹீனப்படுத்தி விடும்.

ராஜாஜி பாகிஸ்தான் திட்டத்தை ஆதரிக்கவில்லை. ஒரு முறைக்கு பலமுறை சொல்வது பொருந்தும்: உண்மை அது. இந்தியா ஒரு தேசம். இயற்கை வடிவே அதற்கு பிரமாணம். சரித்திரம் எவ்வாறாயிருப்பினும் பிரிட்டிஷ் ஆட்சியில் கண்ட நன்மை அது ஒன்று தான். நாட்டின் சுதந்திரத்தை நாடுவோர் நாட்டை துண்டிக்க இஷ்டப்படமாட்டார்கள். ராஜாஜியும் இஷ்டப்படவில்லை. தவிர்க்க இயன்றதெல்லாம் செய்வார். பெரும்பாலோர் ஒரு பிரதேசத்தில் பிடிவாதமாகப் பிரிந்து நிற்கப் பிரியப்பட்டால், அவர்களை நிர்ப்பந்திக்க முடியுமா? முடியாதென்று காங்கிரஸ் தலைவர்கள், மகாத்மா உள்பட, ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஒப்புக்கொள்வதை தரவாரியாகப் பிரித்துப்பேசுகிறார்கள். பிரிவினை பாவம். என்கிறார் இன்று மகாத்மா. பாவம் செய்யத் துணிந்தவனை அடக்க வழியில்லையென்று வாளாயிருந்தால் பொறுப்பு கழிந்து விடுமா? ராஜாஜி சொல்வது என்ன? பிரிப்பது தவறு; இன்று அவசரத்திலும் ஆத்திரத்திலும் முடிவு செய்யவேண்டாம்: நம்பிக்கை பிறக்கவும் நல்லெண்ணம் ஓங்கவும் முதலில் முற்படுவோம்; என்ன சொல்லியும் என்ன செய்தும் பிரிக்க வேண்டுமென்றால் மறுக்க முடியாது; மறுக்கவில்லை என்கிறார். அதனால் பிரிவினைக்குப் பொறுப்பு ஏற்பட்டுவிடுமா? இரண்டுக்குமுள்ள வித்தியாசம் வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ளதல்ல. வெண்ணெய்க்கும் நெய்க்கும் உள்ள வித்தியாசமே.

ராஜாஜி 'ஒற்றுமை வேண்டுமென்கிறார். இன்றைய நெருக்கடியைச் சமாளிக்க அது அவசியம். பிரிட்டிஷார் விலகும் வரையில் ஒற்றுமை ஏற்படாதென்கிறார் மகாத்மா. ஒற்றுமை ஏற்படும் வரையில் பிரிட்டிஷார்

சமீபத்தில் தமது தமிழ்நாட்டு சுற்றுப்பிரயாணத்தில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் திருநெல்வேலி வந்து சேர்ந்த போது அவருக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரையும கனம புலு* சாம்பமூர்த்தியையும் ஜனாப் ஸையது ஆமத் முதலிய பலர் ஸ்டேஷனில் எதிர்கொண்டழைத்தனர்.

விலகமாட்டார் என்கிறார் ராஜாஜி. கேட்கப் புதிர் போலிருக்கிறது; அவிழ்ப்பது சிரமமல்ல இரண்டும் உண்மைகள். உண்மை ஒன்றானாலும் பலமுகங்கொண்டவை. ஒவ்வொருவருக்கு ஓரோர் முகம் புலப்படுகிறது. நிரந்தர ஒற்றுமையை மகாத்மா குறிப்பிடுகிறார். நிரந்தர ஒற்றுமை முடிவில ஏற்படத் தற்கால ஒற்றுமை முதலில் ஏற்படவேண்டும். அதையே ராஜாஜி குறிப்பிடுகிறார். முதல படி ஏறியே இரண்டாம் படி ஏறவேண்டும். தீர்க்கதரிசி லக்ஷிய சித்தியில் கருத்தைச் செலுத்துகிறார். கர்மவீரன் கார்யசித்தியில் கவனத்தைச் செலுத்துகிறார். விஷயம் அவ்வளவு தான். வாதத்தை வளர்த்து வீணில் வருந்தத் தேவையில்லை. காங்கிரஸுக்கு பலம் தேடியவரே காங்கிரஸைப் பலஹீனப் படுத்தமாட்டார். காங்கிரஸுக்கு தன் லக்ஷியத்தை அடைய இன்னும் பலம் தேவை. அதைத் தேடவே பாடுபடுகிறார் ராஜாஜி.

"எங்கள் வித்தியாசம்"

"பம்பாயில் பத்திரிகைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசுகையில் முஸ்லீம்களுடன் போராடத் தயாராகவிருந்தாலொழிய முஸ்லீம்கள் கோருவதை அடையவொட்டாமல் அவர்களை ஒருவரும் தடுக்க முடியாது என்று மீண்டும் கூறியிருக்கிறீர்களே! அப்படியானால் தங்கள் கருத்துக்கும் ராஜாஜியின் மனப்பான்மைக்கும் உள்ள வித்தியாசமென்ன?"— என்று ஒருவர் கேட்டதற்கு மகாத்மா "ஹரிஜன்" பத்திரிகையில் பதில் எழுதியிருக்கிறார்.

"ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவருக்கு ஆதரவாக நான் சொல்லுவதை எடுத்துக் காட்டினாலும் எனக்கும் அவருக்கும் உள்ள வித்தியாசம் சுண்ணாம்புக்கும் வெண்ணெய்க்கும் உள்ள வித்தியாசம் போலத்தானிருக்கிறது. ஜப்பானியரைத் தடுக்க, அவர் ஒற்றுமையைக் கோருகிறார். அந்த ஒற்றுமையை வாங்குவதற்கு, அவர் விலகி நிற்கும் உரிமையை பிறருக்கு அளிக்க முற்படுகிறார். இந்தியாவைத் துண்டாடுவது பாவகரமான காரியமாகும்.

என் அடுத்த வீட்டுக்காரன் பாவ காரியத்தைச் செய்தே தீருவேன் என்றால் நான் அதைத்தடுக்க முடியாது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அந்த பாவ காரியத்துக்கு ஒரு துணையாகவிருப்பார். 'இதைத்தான் நான் சொன்னேன். மூன்றாவது மனிதர் இங்கிருந்து தடை செய்துகொண்டிருக்கையில் ஒற்றுமை என்பது எப்போதும் ஏற்படாது என்பதே என் உறுதியான நம்பிக்கை; அந்த மூன்றாவது மனிதன் செயற்கையாக ஒரு பிரிவினையை உண்டுபண்ணி அதை நிலைக்கச் செய்யப்பார்க்கிறான்.

இவ்வித நிலையில் சில ஹிந்துக்களும், முஸ்லீம்களும், கருத்து வேறுபாடுடைய சுயநலக்காரர்களும். சாதகமடையப் பார்ப்பார்கள். அவர்கள் முயற்சி பலிப்பதும் நிச்சயம். அவர்கள் தங்களுடைய நன்மையே இந்நாட்டின் சுதந்தரத்தையும் விடமேலானது என எண்ணுகிறார்கள். உடனே ஒற்றுமையில்லாவிட்டால் சுதந்தரமேது என என்னைத் திருப்பிக் கேட்கக் கூடாது. நான் கூறியவற்றில் ஒரு வார்த்தையையும் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்போவதில்லை.

நான் கூறுவது ஒப்புக்கொள்ளத் தகுந்த ஒரு உண்மையாகும். இந்த உண்மையை அறிந்து தான், நான் பிரிட்டிஷாரை விலகிப்போகும்படிச் சொல்லுகிறேன். அவர்கள் விலகி விடுவதாலேயே சுயேச்சை வந்து விடாது. அப்போது ஒற்றுமைக்கு வழி பிறக்கும். அல்லது குழப்பத்துக்காவது இடமேற்படும். இடையில் காலியான ஸ்திதி ஏற்பட்டால் வேறு ஒரு சர்க்கார் நுழையக்கூடிய ஒரு அபாயமும் இருக்கிறது. ஆனால் பிரிட்டிஷார் மட்டும் ஒழுங்காகத் தாங்களாகவே விலகிக் கொள்ளும் பட்சத்தில் பிரிட்டிஷாரின் மதிப்பு அதிகரிக்கும்: பெரிய தேசத்தின் நட்பையும்பெற முடியும். அந்நியர் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழிக்க எல்லோரும் கருத்து வேறுபாடின்றி உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவர்கள் ஒத்துப் போகாவிட்டால். இவர்களை நம்பி காரியம் செய்வது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு ஒப்பாகும்; ஜப்பானியர் வந்து விடுவார்கள் என்றபயத்தால் ராஜாஜி உண்மையை மறந்துவிட்டார். அந்த பயம் அவர் கண்ணை மறைத்துவிட்டது; சுயேச்சை இருந்தாலே எல்லா பயமும் தானாக பறந்தோடும். ஜப்பானியர் படையெடுப்புப் பயமும் சரி. அராஜகப் பயமும் சரி, பிரிட்டிஷ் சிங்கம் கோபங் கொண்டு உறுமி எழுந்தாலும் சரியே, யாவும் அதன் முன் மறைந்து விடும்.



சமீபத்தில் ஆண்ட்ரூஸ் ஞாபகார்த்த நிதி வசூல் விஷயமாக மஹாத்மாஜி பம்பாய் சென்றார். மஹாத்மாஜி மஹாதேவ தேஸாய், மிஸ் சரளா முன்ஷி இவர்கள் முன்னிலையில் ஜனாப் வாலி மஹம்மது ஸொருவாலாவுடன்வேடிக்கையாக சம்பாஷிக்கிறார் ஜனாப் வாலிமஹம்மது மஹாத்மா திரட்டிவரும் நிதிக்காக ரூ 5000 நன் கொடை கொடுத்தார். (என். என். பி. எஸ்.)

க்ரிப்ஸ் திட்டம்

★

கேள்விக்கு காந்திஜி பதில்

★

"காங்கிரஸுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் ஸமரஸம் ஏற்படாமலிருக்கும் பொழுது ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்ன செய்திருக்க முடியுமென்று சில பத்திரிகை நிருபர்கள் என்னை பம்பாயில் கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொன்னேன். அது எங்காவது பிரசுரமாயிற்றோ என்னவோ தெரியாது. எப்படியாயினும் அந்தக் கேள்விக்கு நான் கொடுத்த பதிலை பொது மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்" என்று மகாத்மா காந்தி 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதுகிறார். விவரம் பின்வருமாறு;—

"ஸர் ஸ்டாபோர்டு காங்கிரஸையோ அல்லது முஸ்லிம் லீக்கையோ பிரத்யேகமாக மந்திரி சபையை அமைக்கும்படி கேட்டிருக்கலாம். அப்படி அவர் கேட்டிருந்தால் அரசியல் பொறுப்பை வகிக்க இஷ்டமுள்ள கக்ஷியார், எதிர் கக்ஷியினரையும் தம்முடன் சேர்ந்து ஒத்துழைக்கும்படி செய்திருக்கக்கூடும். சர்க்காரும் தமது ஆட்களை நியமிப்பதற்குப் பதிலாக ஒரு கக்ஷியின் வாஸ்தவமான பிரதிநிதிகளைக் கொண்டே காரியங்களை நடத்தி இருக்கக்கூடும்.

காங்கிரஸையாவது முஸ்லீம் லீக்கையாவது ஸர் ஸ்டாபோர்டு அவ்விதம் கேட்டாரோ என்னமோ எனக்குத்தெரியாது. க்ரிப்ஸ் திட்டம் தோல்வியுற்றதற்குக் காரணம் காங்கிரஸுக்கும் லீக்குக்கும் இருக்கும் அபிப்பிராயபேதமல்ல என்றும் யுத்தகாலத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் எந்தெந்த அதிகாரங்களை விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற விஷயங்களில் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதங்கள் தான் காரணமென்பது பொது மக்களுக்கு நன்ருகத் தெரியும்"

* * * *

ஸ்ரீ ஸி. ஆர். திட்டம்

பண்டித நேருவின் கண்டனம்

"ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் புதிய திட்டம் தேச நன்மைக்கு விரோதம். சென்ற 23 வருஷங்களாக எவ்வளவோ தியாகங்கள் செய்து காங்கிரஸ் தயாரித்த ஆயுதத்தை ராஜாஜி உடைத்து துண்டாடிவிடுவார் போலிருக்கிறது" என்று பண்டித ஜவஹர்லால் நேரு லாகூரில் ஒரு கூட்டத்தில் பேசிய பொழுது குறிப்பிட்டார்.

பண்டித நேரு பேசியதன் சாரம் வருமாறு:-காங்கிரஸின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் தமது அபிப்பிராயத்தை வெளியிட உரிமை உண்டு. ஆனல் விஷயம் முடிவு செய்யப்பட்டவுடன் அம்முடிவை எல்லோரும் ஆதரித்தாக வேண்டும். காங்கிரஸ்காரர்கள் இக்கொள்கையை மீறினல் காங்கிரஸ் நசித்து விடும்.

நமது கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு ராஜாஜி ஒரு திட்டத்தைச் சொன்னார். அது அபாயகரமானது. நாம் சென்ற 22 வருஷங்களாக சிரமப்பட்டு செய்து வந்த வேலைகளை அத்திட்டம் கெடுத்துவிடும். சென்னையில் 'ஜனநாயக' அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று ராஜாஜி சொல்லுகிருர். இப்பொழுது காலப்போக்கில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை அவர் கவனிக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசாட்சிக்கு உட்பட்டு நாம் சர்க்காரை அமைக்க ஒப்புக்கொண்டால் பிரிட்டிஷ் அரசாட்சியையும் நாம் ஒப்புக்கொண்டதாக ஆகிவிடும். எனக்கு அப்படி ஒப்புக்கொள்ள ஒருபொழுதும் இஷ்டமில்லை. ராஜாஜி காங்கிரஸில் பிளவு ஏற்படுத்த விரும்புகிருர் என்று நான் சொல்ல விரும்பவில்லை 'காங்கிரஸில் அவருக்கு ஆதரவு இல்லை என்பதுமட்டும் உண்மையான விஷயம்.

பண்டித நேரு மேலே பேசுகையில் இந்தியாவைப் பிரிக்கக் கூடாதென்றும் இந்தியா, சீனு, ஆப்கானிஸ்தான், இரான் இவை ஒன்றுசேர்ந்து ஒரு சமஷ்டி தேசமாக அமைக்கப்படவேண்டுமென்பதே தமது விருப்பமென்றும் கூறினர். அவர் பேசியதாவது:—

இந்தியாவை ஒரு பொழுதும் பிரிக்கவே கூடாது. பிரிவினைப் பிரச்னையை நான் பூரா பலத்துடனும் எதிர்க்கப்போகிறேன். பலாத்காரத்தினல் எந்த மனிதனையும் நம்முடன் சேர்ந்திருக்கும்படி வற்புறுத்த முடியாதென்பதையும் நான் நன்கு அறிவேன். ஒரு பிரதேசத்தில் பெரும்பான்மையாராக விருக்கும் மக்கள் பிரிந்து செல்ல விரும்பினல் அதை ஒருவராலும் தடுக்க முடியாது.

இது விஷயத்தில் எனக்கும் ராஜாஜிக்கும் வலுத்த அபிப்பிராய பேதம் இருக்கிறது. பிரிவினையைத் தடுப்பதற்கு என்னல் முடிந்த வரையில் பாடுபடப் போகிறேன்.

* * * *

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் காக்ஸ்டன் ஹாலில் யுவர்கள் கூட்டத்தில் பேசினர்.

காரியம் கைகூட வழி

ஸ்ரீ ஸி. ஆர். அளித்த பதில்

ராஜாஜி தமது யோசனையைப் பண்டிதஜவஹர் குறை கூறியிருப்பதற்கு பதில் சொல்லியிருக்கிருர்.

"காங்கிரஸ்-லீக் சமரஸம் ஏற்படுவதற்கு நான் வெளியிட்ட யோசனை நாட்டின் நன்மைக்கு விரோதமாக விருப்பதாகப் பண்டித ஜவஹர் கூறினர். அவர் அவ்விதம் அபிப்பிராயப்பட்டிராவிட்டால் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலேயே எனது யோசனையை மனப்பூர்வமாக ஆதரித்திருப்பார். சென்ற 22-வருஷங்களாகக் காங்கிரஸ் பல அரிய தியாகங்களைச் செய்து காங்கிரஸ் இந்த உயரிய நிலையை அடைந்திருப்பதாக அவர் கூறுகிருர். அது முற்றிலும் உண்மை. அதனல் தான் இந்த நெருக்கடி காலத்தில் காங்கிரஸ் வாளா விருப்பது கூடாதென நான் சொல்லுகிறேன். இந்த சமயத்தில் கை கட்டிக்கொண்டு சும்மா நடப்பனதைப் பார்த்துக் கொண்டிருப்பது மிக்க கொடுமையான காரியமல்லவா?

எனது யோசனையை ஏற்றுக்கொண்டால், பண்டித ஜவஹர் எதைப் பெரிதும் விரும்புகிருரோ அது கைகூடியிருக்கும். இப்போது நம்மை நெருங்கி வந்துள்ள ஆபத்தைத் தவிர்க்க நாம் ஒன்று பட்டுழைக்கவும் வழி பிறக்கும். இந்த ஆபத்தை இப்போது நாம் தவிர்க்காவிட்டால் நாம் அழிவது நிச்சயம். பிறகு நமது எண்ணம் எப்போதுமே ஈடேருது.

ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பெரும் பகுதியினர் பிரிந்து போக விரும்பினல் சுதந்தரம் பெற்ற இந்தியா அதைத் தடுக்க முடியாது என்றுதான் காந்திஜியும், ஜவஹரும், காங்கிரஸ்காரர்களும் ஒருதரமல்ல, பல தடவை சொல்லியிருக்கிருர்கள். பிரிந்து போக விரும்புகிறவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடக்கவே யாவரும் சித்தமாக விருக்கிருேம். அவ்விஷயத்தில் ஒருவரும் குறுக்கிடவில்லை. அந்தத் துறையிலேயே எல்லோரும் உழைப்பார்கள் பலவந்தத்துடன் ஒற்றுமைக்கு வழி தேடுவதில்லையென உறுதி கூறிய பின் இந்தியாவுக்கு அபாயம் நீங்கும் வரையில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்பதைத்தான் அனைவரும் வற்புறுத்துவார்கள். யுத்தத்திற்குப் பின் அவரவர்கள் சுதந்தரப்படி அரசியலை அமைத்துக்கொள்ளும் காலம் வரும். எனது யோசனைப்படி எப்போதும் நாம் ஒன்றுபட்டிருக்க வேண்டிய அவசியமில்லையென்றே அவ்வழியில் முயற்சி செய்யக்கூடாதென்ருே அர்த்தமில்லை. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ளவர்களின் கருத்துக்கு மீறி காரியம் நடக்க இடம் சற்றுமிருக்கக்கூடாதென்றே நான் வற்புறுத்துகிறேன்."

குஷ்டரோகமும் அதன் பராமரிப்பும்

★

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றனர் எல்லாமறிந்த பெரியோர். நம் நகரத்தில் குஷ்ட ரோகம் அதிகரித்து வருவதைக் கண்டு மனம் வருந்தாதவர் இருக்க முடியாது. — இந்த வியாசத்தில் வைத்ய ரத்ன பண்டிட் எம். துரைசாமி அய்யங்காருடைய படிப்பின் விஸ்தரிப்பையும் அனுபவத்தின் மேம்பாட்டையும் வாசகர்கள் அறிய முடியும். விரிவடைந்த இவரது விஷய ஞானம் பிறருக்கும் பயன்படுவதே கடமையாகும்: ஆகையால் இந்த பிரயோஜனகரமான வைத்தியக் கட்டுரையைப்பற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

நோயற்ற வாழ்வு

★

வைத்ய ரத்ன எம். துரைசாமி அய்யங்கார் எழுதியது

"மிகக் கோரமானவியாதி"

குஷ்டம் என்பது மிகவும் கோரமான வியாதி. சிரங்குப் புண்களைப் போல் ஆரம்பித்து, சர்மத்தின் மேற்பாகத்தைத் தடிப்பாகவும் வறட்சியுள்ளதாகவும் செய்யும். இதன் ஆரம்பத்தில் உடலில் கொதிப்புண்டாய் ஜ்வர வேக்காடு இருந்து வரும். ஸாதாரண மருந்துகளால் தணிக்க முடியாத பலமான புண்களாக விருத்தியாகும். கிரமக் கிரமமாகத் தசைகளைத் தின்றுவரும். கடைசியில் அம்மனிதனுருவத்தைப் பார்க்க வழங்காதபடி அருவருக்கக் கூடியதாகவும் இகழ்ந்து வெறுக்கத் தகுந்ததாகவும் செய்து விடுகிறது. ஆகவே இவ்வியாதி உற்பத்தியாவதையும், இதைத் தடுத்துப் பரிஹரிக்கக்கூடிய உபாயங்களையும் அனைவரும் அறிந்து கொள்வது மிகவும் அவசியம். இதற்குப் பரிஹாரம் உண்டா என்று பலர் கேட்பதால் இக் கட்டுரை எழுதுகிறேன்.

இக் கொடிய நோய் உண்டாவதற்கு ஆஹாரவகைகளிலும் ஆசாரங்களிலும் உள்ள பல வேறு தோஷங்கள் காரணமாகுமென்று ஆயுர்வேத நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக எச்சிலும் வேறு அநேகவித அசுத்தமும் அடங்கிய ஆகாரங்களும், அசுத்தமான ஆசாரமும், கச்மலமான வாஸபூமியும் இக் கச்மலமான வியாதிக்கு விசேஷமாக இடம் தருகின்றன. ஒரு குலத்தில் எவனுவது இவ் வியாதிக்கு ஆளாயிருந்திருந்தால், அக்குலத்திற் பிறகு பிறப்பவனுக்கும் இது தொடருவதுண்டு. இது ஸாங்கிராமிக (ஒட்டுவாரொட்டி) வியாதியாகவே ஆயுர்வேத கொள்கை. பார்ப்பதற்கு அஸங்க்யமாயிருந்த போதிலும், அதன் விகாரத்திற்கு ஏற்றவாறு அவ்வளவு கடுமையான தொத்து வியாதியல்லவென்று சிலர் கருதுவர்: எப்படியும் இவ்வியாதிக்ரஸ்தரை மற்றவருடன் அணுகாது விலக்கிவைப்பது அவசியம்.

பலவிதப்பட்டவை

ஆரம்பத்தில் உண்டான கள் செதிள் செதிளாக விருத்தியடையும். இப் புண்களால் ஏற்படும் அறிப்பும் தினவும் தாங்கவியலாததாயிருக்கும்.

குஷ்டத்தில் பன்னிரண்டு வகையான 'க்ஷுத்ர குஷ்டங்கள்' என்பவையும், ஏழு வகையான "மஹாகுஷ்டங்கள்" என்பவையும் உண்டு. ஆயுர்வேத நூல்களில் விவரித்துள்ள இப் பத்தொன்பது விதமான குஷ்டங்களையும் இங்கு விரித்துரைக்க இடமில்லை. தத்ரு மண்டலம் என்னும் படைபோன்ற வியாதி பாமா என்னும் சிரங்கு, கச்சு என்னும் சொறி, முதலிய க்ஷுத்ர குஷ்டங்கள் உண்மையில் மஹா குஷ்டங்களைப்போல் கொடியவைகளல்ல, இவை எளிதில் தீர்க்கக்கூடிய ரோகங்களே. ஆகவே அவற்றைபற்றி இங்கே ஒன்றும் விவரிக்கவில்லை.

தோற்றமும் விசேஷமும்

மஹா குஷ்டங்களுள் "மண்டல குஷ்டம்" என்பது ஒன்று. இதில் வட்டமான அதைப்பு அல்லது வரம்பும், பெரிதும் வெண் சிகப்பாய் ஒருவாறு சேப்பு நிறமும் பெற்று, ஒன்று அல்லது பல படைகள் சேர்ந்தாற் போல் தோன்றும். செப்பு நிறம் கால வளவில ஒருவாறு வெளிறி மங்கலாகும். அவ் விடங்களில் உணர்ச்சியிராது. தேஹத்தில் எவ்விடத்திலேனும் இது உண்டாகும். வாததோஷம் அதிகரித்த இவ்வியாதி சர்மத்திற் பரவியுள்ள நரம்பு மண்டலத்தைத் தின்று விடுவதால் அவ்விடங்கள் உணர்ச்சியற்றுப் போகின்றன. இது சிலருக்குக் கை விரல்களிலும், கால் விரல்களிலும், மூக்கியமாகவும், தேஹத்தில் சில விடங்களிலும் முகத்திலுங்கூட காணும். "ஔதும்பரம்" என்பது மற்றொன்று. இதையே ஒத்ததே "காகணம்" என்பதுகூட. உருண்டை வடிவமாய் கிரந்திகளைப் போல் தோன்றுவது இவ்வியாதி. காகணம் என்கிற குன்று மணி அளவு முதல், உதும்பரம் என்கிற அத்திக்காய் அளவு வரையில் இதன் பருமன் பலவாறு வித்தியாஸப்படும். அதாவது சிறிய கிரந்தியாகத் தோன்றி கிரமமாகப் பெரிய கிரந்திகளாக வளரும். பிறகு காலக்கிரமத்தில் இக் கிரந்திகள் போன்ற விரணங்களுண்டான பாகங்கள் விரணங்களால் அரிக்கப்பட்டுச் சிதைந்து அழிந்துவிடும். தசையும் எலும்பும் வியாதி தின்றுவிட மிகக் குறைந்து போய் விரல்கள் ஒழிந்து போம். ஆரம்பத்தில் இவ் விரணங்களில் சென்னிரம். அழற்சி, அரிப்பு முதலியவை அதிகமாயிருக்கும். மற்றொன்று "காபாலம்" என்பது. இதில் சர்மம் கருஞ்சிவப்பாய் விடும். செதிகள் கடினமாகவும், அதிக வலியுண்டுபண்ணுபவையாகவும் இருக்கும். செதிள் உடைந்தால் விரணத்திலிருந்து வெளியாகும் துர் நீரும் மற்றக் கழிவுப் பொருளும் பிறர்மேல் பட்டால், இவ் வியாதி அவருக்கும் உண்டாகக் கூடும்.

பூர்வ ரூபம் எனும் முற் குறிகள்

இவ் வியாதி ஏற்படுவதற்கு முன்பு சர்மம் நிகி நிகிப்பு தோன்றி வழ வழப்பாகக் காணபடும், கரு நிறம் அல்லது இயற்கைக்கு மாருன நிறமும் தோன்றும். முற்றிலும் வியர்வையே இராது, அல்லது அழித வியர்வை யுண்டாம். சில விடங்களில் முக்கியமாய் உள்ளங்காலில் பரிச வுணர்ச்சி குறையும், சரீர வேக்காடும், உடலெங்கும் குத்தல் குடைத்தலும், அதைப்பும் காணும். சிலருக்குத் தலைச் சற்றலும் உண்டாகும்.

பொது லக்ஷணங்கள்

குஷ்டம் முதலில் சர்மத்தின் மேல் சென்னிறத் தடிப்புகளாகப் பெரும்பாலும் வட்ட வடிவமாக எழும்பும், இத் தடிப்புகளின் மேல் செதிள்கள் வளர்ந்து, அவை கெட்டியான புரணிகளாக மாறும். இவை உதிர்ந்து வரும் போது வேறு புரணிகள் துரிதமாய் ஏற்பட்டு வளரும். இவ்வியாதி பெரும்பாலும் முதலில் முழங்கைகள் அல்லது முழங் கால்களில் தோன்றுவது வழக்கம், பிறகு கை கால்களில் பரவி, அப்பால் அநேகமாய் எல்லா அவயவங்களிலும் வியாபித்து விடும். சாதாரணமாய் இது மெதுவாகவே பரவி விருத்தியாகும். சிலருக்குச் சில வருஷங்களாகவும் அதிகமாக விருத்தியாகாமலிருப்பதுண்டு. இவ்வியாதியினல் மனிதனுடைய தேஹ நிலைமையில் மற்ற அம்சங்கள் அவ்வளவாய் பாதிக்கப்படுவதில்லை. பூர்வ ரூபக் குறிகள் தோன்ருமலே சிலருக்குத் திடீரென இது பலமாகத் தோன்றுவதுமுண்டு. ஆநூபம் என்கிற சதுப்பான பூமியிலும், குளிர்த் தேசத்திலும் இவ்வியாதியின் குறிகள் கடுமையாக விருத்தியாவதும் வழக்கம். குல பரம்பரையாக இவ்வியாதி ஏற்பட்டால் அதற்குப் பரிஹாரம் அநேகமாய் அஸாத்யமென்றே கருதப்படுகிறது. வாத ஸம்பந்தமான குஷ்டரோகத்தில் ஆக்ஷேபகம் என்னும் இசிவு சிலருக்குக் கடுமையாயேற்படும்.

சிகிச்சா முறை

முற்றிலும் பரிசுத்தமான ஆஹார-ஆசாரங்களில் கண்ணுங் கருத்துமாயிருப்பதே இதைத் தடுப்பதற்கு ஏற்ற முறை. இதற்குச் சிகித்ஸை செய்வது மிகவும் கஷ்ட ஸாத்யமான வேலை. வியாதிக்ரஸ்தனுக்கும் சிகித்ஸை செய்யும் வைத்தியருக்கும் மிகப் பொருமை வேண்டும்; எளிதில் ஜீர்ணமாகக் கூடியதும் சரீர போஷணையிற் சிறந்ததுமான உணவை உபயோகித்து வருவதுடன் உஷ்ணம் செய்யக் கூடிய உணவு வகைகளை விலக்குவது அவசியம்

சுத்தம் செய்த கந்தகப் பொடியை துவரக தைலத்தில் கலந்து அதை மேலே நன்ருகத் தேய்த்துக் கொண்டு இரண்டொரு மணி நேரம் கழிந்து இளஞ்சூடான வெந்நீரில் ஸ்நானம் செய்து வருவது குஷ்டத்தின் ஆரம்பதசையில் பலருக்குப் பெரிதும் அனுகூலம் செய்யும். ஸ்வபாவமாகவே பலக் குறைவான சரீரமுள்ளவருக்கு ஆரம்பத்தில் அயஸ்காந்த ஸிந்தூரம் (வேளைக்கு 5 முதல் 10 குன்றுமணி) சாப்பாட்டுக்குப் பிறகும் துவரக தைலம் (சுத்தி செய்தது) இரண்டு தேக்கரண்டி சாப்பாட்டுக்கு முன்பும் உட்கொண்டு வருவதால் மிகவும் உபயோகம் உண்டு. அயஸ்காந்த ஸிந்தூரம் ரத்த சுத்தி செய்து நரம்புகளுக்கு வலிவைத் தரும்; துவரக தைலம் குஷ்டரோக விஷத்தை அதே ஸமயத்தில் தணித்து வரும். பலக் குறைவான நிலைமையில் வியாதி வெகுவாகப் பிணியாளியை மற்றவரைவிட அதிகமாகத் துன்பத்திற்கு ஆளாக்குமாகையால், அத்தகையவர் வியாதிக்குப் பரிஹாரம் தேடிக்கொள்வதோடு தேஹபலத்தையும் அதே ஸமயத்தில் விருத்தி செய்து கொள்ளவேண்டும். தேஹதாட்டியமுள்ளவர் சாப்பாட்டுக்கு முன்பு வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம் கதிராரிஷ்டமும், சாப்பாட்டுக்குப் பிறகு வேளைக்கு இரண்டு மூன்று மாத்திரைகள் சங்க பாஷாண வடியென்னும் மருந்தும் (தினத்திற்கு 2, 3 தடவையாக) ஆரம்பதசையில் உபயோகித்து வருவதால் நல்ல பலன் கண்டிருக்கிருர்கள்.

வியாதி முதிர்ந்த பின்

வியாதி முதிர்ந்துபோன நிலைமையில் மஹா திக்தக குக்குலு கிருதமும், ஸ்வர்ண க்ஷீரஸம் என்னும் மாத்திரையும் மிகச் சிறந்த மருந்துகள். வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் மஹா திக்தககுக்குலு கிருதம் சிறிது சர்க்கரை கலந்து தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை உட்கொள்ளவேண்டும். இதை உபயோகித்த ஒரு மணி நேரம் கழித்து ஸ்வர்ணக்ஷீரஸம் இரண்டு மாத்திரையை சிறிது ஜலத்துடன் உட்கொள்ள வேண்டும். இவற்றை உபயோகித்து வரும்போது பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை இச்சாபேதி வடியாவது அவ்விதமான வேறு விரேசன மருந்தாவது உட்கொண்டு குடலைச் சுத்தம் செய்து வருவது நலம்.

தினந்தோறும் கந்தகலேபமாவது, துவரக தைலமாவது மேலே தடவி—முக்கியமாய் தடிப்புகளும் புண்களும் உண்டாயுள்ள விடங்களில் நன்ருகத் தேய்த்துப் பூசி—ஒருமணி நேரமாவது ஊறிய பிறகு தசாங்க லேபம் போட்டுச் சுத்தமாக ஸ்நானம் செய்ய வேண்டும். வெடிப்புகள் சர்மத்தின் மேல் ஏற்பட்டிருந்தால், அவ்விடங்களில் கந்தகப் புகை போட்டு, அப்பால் கந்தகலேபத்தையும் கனமாகத் தடவி வைக்கலாம்.

இதர முக்கிய விஷயங்கள்

மஹா குஷ்டங்களில் தாம்ர பஸ்மம் இரண்டு பங்கும், தாள கேச்வரம் என்னும் மருந்து ஒரு பங்கும், குஷ்ட குடாரம் என்பது ஒரு பங்கும் கூட்டிக் கலந்து வேளைக்கு 4 அல்லது 5 குன்றுமணி எடை வீதம் போஜனம் செய்து பிறகு தேனில் கலந்து தினத்துக்கு மூன்று முறை உட்கொள்ளலாம். இதையுட்கொள்பவர் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை சிறிது ஆமணக் கெண்ணெய் சாப்பிட்டு வயிற்றைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இரவில் பாலாவது அச்வகந்த ரஸாயனம் (1 அவுன்ஸ்) என்னும் குளிர்ச்சியும் போஷணையும் தரும் மருந்தாவது படுக்கப் போகும்போது உட்கொள்வது நலம்.

இந்த வியாதியின் விஷநீர் உடலில் பற்றியதற்கு முதற்குறியாகக் கூறியவற்றுள் முகத்தின் சர்மமும் செவிகளின் நுனிப்பாகங்களும் கனத்துத் தடித்திருப்பது முக்கியமாகக் கவனிக்கக்கூடியதாகும். அத்தோற்றத்தைக் கவனித்து உடனே சிகித்ஸைக்கு முயன்ருல் வியாதி எளிதில் அநேகருக்கு நிவாரணமாவதற்கான உபாயங்களைச் செய்யலாம். இது ஆரம்பத்தில் சர்மத்தைப் பற்றியதாகவும், பிறகு நாளடைவில் சதைகளையும் எலும்புகளையும் அழிக்கக் கூடியதாகவும் உள்ள வியாதி. முதல் நிலைமையில் சில நாட்கள் வரையில் சாகைகள் என்னும் கைகால்களில் அதிக வலியுண்டாம்: தேஹச் சோர்வும், உடற்கொதிப்பும் தோன்றும். இரண்டாவது நிலைமையில் விசர்பம் அல்லது புண்களும் தடிப்புகளும் காணும்; படைகள் சில விடங்களில் தோன்றி மறைய, வேறிடங்களில் மீண்டும் காணும். மூன்ரும் நிலைமையில் கிரந்திகள் என்னும் சதைப் பிதுக்கங்களும், மண்டலங்கள் என்றும் பெருந் தழும்புகளும் ஏற்பட, இவை யுண்டான விடங்கள் உணர்ச்சி யற்றுப் போம். நான்காம் நிலைமையில் பலமான விரணங்கள் உண்டாய், தசை முதலிய தாதுக்கள் அழியத் தலைப்பட்டு, விரல்களும் ஸந்திகளும் மிகச் சிதைந்து குறைந்து அவயவங்களில் பெரிதும் உருமாருட்டம் ஏற்பட்டு விடும். மூன்ருவது நான்காவது நிலைமைகள் ஏற்பட்ட பின் சிகித்ஸை அஸாத்யம். இது மிகவும் கோரமாகவும் கஷ்ட ஸாத்யமாகவும் இருப்பதாலேயே பெரு வியாதியென்று இதை வழங்குகிருர்கள்.

——

சீனுவில் ஜப்பானியரது நோக்கம்

சங்கிங் நாஷனல் ஹெரால்டு பத்திரிகை ஜப்பானியரால் சீனுவுக்கு ஏற்படும் அபாயம் மிக்க உண்மையானது எனக் குறிப்பிட்டு வருகிறது.

‘சின்மின்போ’ என்ற பத்திரிகை சீனுவில் ஜப்பானியர் பின் கண்ட 3 லக்ஷியங்களைக் கொண்டிருப்பதாக எழுதுகிறது:—

1. பிரிட்டனும் அமெரிக்காவும் தமது தோல்விகளிலிருந்து தலை தூக்கு முன்பு சீனுவை நசுக்கவேண்டும்.

2. ப்திலுக்குத் தாக்க சீனுவை மூலஸ்தானமாக நேசநாட்டினர் உபயோகிப்பதற்கான முயற்சிகளை ஆரம்பத்திலேயே நசுக்குவதற்காக சீனுவில் தங்கள் வசமுள்ள இடங்களை ஜப்பானியர் ஒன்றுபடுத்த முயலுகின்றனர்.

3. ரஷ்யாவைப் படையெடுக்கும் காலம் வரும்போது ஜப்பானியப் படைகளின் பின்பாகத்தைப் பாதுகாப்பது.

வைத்திய ரத்னம் பண்டித

எம. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்

ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11: 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்

பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்

எவ்வித மலபந்தத்தையும் நிவருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள்தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணி அனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்ருல்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்

க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனுல் சுகமடைந்திருக்கிருர்கள். 100-மாத்திரை ரூ. 10 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்

தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்

எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக்கணக்கானபேர்சுகமடைந்திருக்கிருர்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணு 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

“ஆர்யன் பார்மஸி — “ஆர்ய கிருஹம்”

11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்

நோட்டீஸ்

சென்னை ஈரல் & குலைக்கட்டி நிபுணர் ஜம்மி வெங்கடரமணய்யாவின் குமாரர், கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்வார். ஈரல் பெருக்கம், குலைக்கட்டி வியாதிகளுக்கு தினசரி காலை 8 மணி முதல் 10 மணி வரையும், பிற்பகல் 3 முதல் 5 மணி வரையும் ஆலோசனை பெறலாம்.

திருவிடமருதூர்	—	மே௴ 30௳	Dr. E. Y. N. சிம்ஹம்
குத்தாலம்	—	,, 31௳	M. K. முகமத் இப்ரஹிம் ராவுதர் & பிரதர்ஸ்.
மாயவரம்	—	ஜூன் 1௳	ராமகிருஷ்ண வைத்ய சாலா, கிருஷ்ணராயர்சந்து.
சீயாழி	—	,, 2௳	Dr. R. சபேச அய்யர்.
நன்னிலம்	—	,, 3௳	G. S. S. ராஜன் & R. R. ஸ்வாமி & கம்பெனி.
நாகப்பட்டிணம்	—	,, 4௳	S. T. சௌந்தர்ராஜ பிள்ளை & ஸன்.
திருவாரூர்	—	,, 5௳	மெடிகல் எம்போரியம் & சுப்பய்யா மெடிகல் ஸ்டோர்.
மன்னுர்குடி	—	,, 6௳	டிரக் ஸ்டோர்.
தஞ்சாவூர்	—	,, 7௳	ராஜா சத்திரம்.
அய்யம்பேட்டை	—	,, 8௳	Mr. T. S. ராதாகிருஷ்ண செட்டியார், ஜெனரல் மர்ச்சண்ட்.

சென்னை, கும்பகோணத்தில் ஆலோசனை நேரம் வழக்கம்போல்.

கடிதங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,
48, பெரிய தெரு, கும்பகோணம்.

ஹிந்திக் கதை

தாய் உள்ளம்

★

ஸ்ரீமதி மாலதி தேவி

எழுதியது

“சம்பா!”

“ஏன் கண்ணு!” வேலைக்காரக் கிழவி கேட்டாள்.

“அம்மா கேட்டால் எனக்கு உடம்பு சௌகரியமில்லை. நான் ஆகாரம் செய்யப்போவதில்லை என்று சொல்லிவிடு!” என்று ஆசா தடைபடும் குரலில் சொல்லி விட்டுப்படுக்கையில் இருந்த தலையணையில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

“உடம்பு எப்படி இருக்கிறது?” என சற்றுப்பொறுத்துக் கேட்டாள் சம்பா. பிறகு ஆசா பள்ளிக்கூடத்திலிருந்து வந்தபோது இருந்த முகவாட்டத்தை நினைவுபடுத்திக்கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அவள் என்ன கேள்விப்பட்டாள்?...அவள்...அவள்... ஒரு வேசையினுல் வளர்க்கப்படுபவள். அவளுடைய தாய் தந்தையர் யாரென்று தெரியாது. அவள்...அவள்...மேற்கொண்டு எவ்வித நம்பிக்கையைப் பற்றியும் அவள் சிந்திக்க முடியவில்லை. தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழலானுள். திடீரென்று யாரோ தன்னைத் தொடுவதை உணர்ந்து தலை நிமிர்ந்தாள். பார்த்தால் தாய். தாய் வந்திருப்பதைக் கண்டும் அவள் முன்போலவே ஒன்றும் தோன்ருமல் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

“எப்படியம்மா இருக்கிறது?” தாய் அவள் நெற்றியை வருடிக்கொண்டே அன்புடன் கேட்டாள்.

“நன்ருகத்தான் இருக்கிறேன்!”

“சற்றுக் கண்ணுடியில் உன் முகத்தைப் பார். நன்ருகவா இருக்கிறது? கண்கள் சிவந்திருக்கின்றன. முகம் வாடியிருக்கிறது. ஒருமாதம் ஜுரம் அடித்துக்கிடந்தவளைப்போல் இருக்கிறது. அடி! ஏன் அழுகிருய்? ஏன் பள்ளிக்கூடத்தில் யாரிடமாவது சண்டை போட்டாயா?”

“இல்லை!”

“பின்னே ஏதாவது...?”

“அம்மா!...நீ”...இருகைகளாலும் அவள் வாயைப் பொத்திக்கொண்டு அழலானுள்...

“ஆசா, இதென்ன பைத்தியக்காரத்தனம்? தாய் அவள் தலையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொண்டு “அம்மா நான் எதையும் உன்னிடம் ஒளிக்கமாட்டேன் என்று நீயே சொல்லி இருக்கிருய், பின்னே இன்று ஏன் இந்தமாதிரி? கேட்டால் ஒன்றும் சொல்லமாட்டேனென்கிருயே?” தாயின் குரல் தழ தழத்தது.

“உண்மையாக அம்மா! இதுவரை நான் உன்னிடம் எதையும் ஒளிக்கவில்லை. ஒளிக்கவும் முடியவில்லை, ஆனுல், பள்ளிக்கூடத்தில் இன்று நான் கேள்விப்பட்ட விஷயம்..” ஆசாவினுல் அதற்கு மேல் பேச முடியவில்லை. தாயின் முன்தானையால் தன் முகத்தை மூடிக்கொண்டு அழலானுள். எல்லாவற்றையும் தாயிடம் சொல்ல வேண்டுமென்று விரும்பினுள். ஆனுல் சொல்ல முடியவில்லை. அதைச் சொல்ல அவளுக்கு வெட்கமாக இருந்தது. அவளுடைய நிலைமை அகண்ட ஜன சமூகத்தின மத்தியில் ஆடை கலைந்து அதைச் சீர்திருத்திக் கொள்ள முடியாமல் யாராவது பார்த்துவிடப்போகிருர்களே என்று பயந்து நிற்கும் ஒரு பெண்மணியின் நிலைமையை யொத்து இருந்தது, எப்படிச் சொல்வது, என்ன சொல்வது என்பதை அவளால் நிச்சயம் செய்ய முடியவில்லை. ஆனுல் சொல்லி என்னவோ ஆகவேண்டும்! இதுவரை அவளுக்குத் தெரியாது. இன்று யாவும் தெரிந்த பிறகு அவளால் மேற்கொண்டும் அந்த இருளில் இருக்க முடியவில்லை. தாய் துக்கமடைவாள். அது நிச்சயம். ஆனுல் இதில் அவளுடைய குற்றம் என்ன இருக்கிறது? அவளை இன்று வரை மறைத்து வைத்திருந்தாள்? ஏன் அந்த ரகசியத்தை வெளியிடவில்லை? திடீரென்று அந்த வார்த்தைகள், அலட்சியம் நிறைந்த ராதாவின் பார்வை, இவைகள் நினைவுக்கு வந்தன. அவை அவளைக் குத்திக் கேலி செய்வதைப்போல் தோன்றின. ‘வேசையால் வளர்க்கப்பட்டவள், தாய் தந்தையற்ற அநாதை! என்ற வார்த்தைகள் அவள்செவிகளில் ஒலித்தன. அவளால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. கேட்டுவிட்டாள்.

“அம்மா! நான் உன் மகள் அல்லவா?”

“யார் அம்மா சொன்னுர்கள்?”-மாயா குரல் நடுங்கியது.

“இன்னும் பல விஷயங்கள் கேள்விப்பட்டேன். உண்மையாகச் சொல்லு அம்மா! தெரிந்துக் கொள்ளாமல் விடமாட்டேன். இது வரை நீ என்னை இருளில் வைத்திருந்தாய், ஆனுல் இனி முடியாது. இன்று நீ எல்லாவற்றையும் சொல்லியே ஆகவேண்டும். இந்த ரகசியத்தை இதுவரை நீ ஏன் மறைத்து வைத்திருந்தாய்?” ஆசாவின் குரல் ஆவேசத்தினுல் நடுங்கியது. அவளுக்கு தன் மேல் வருத்தம் ஏற்பட்டது. ஒரே மூச்சில் அவள் என்னென்ன அறிய விரும்பினுள்? ஆனுல் தாயின் பக்கம் பார்த்ததும் மௌனமாகி விட்டாள். அவள் முகத்தையே பார்க்கலானுள்,

“சரி சொல்லுகிறேன் கேள்.” தாய் கூறலானுள். ஆனுல் கேட்ட பிறகு உனக்குத் துக்கம் ஏற்படும். நீ உன்னையே வெறுத்துக்கொன்டால் அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. விஷயம் அப்படிப் பட்டது.

இன்றைக்குப் பதினைந்து வருஷங்களுக்கு முன் இங்கிருந்து சிறிது தூரத்தில் ஒரு ஸ்திரீ—ஒரு வேசை-வசித்து வந்தாள். அவள் பெயர் மேனகா. ஒப்பற்ற அழகு வாய்ந்தவள். ஆனுல் அவளுடைய சௌந்தரியம் யாருக்கும் கிடைக்கக்கூடியதல்ல. சமூகத்தில் கண்யம் மிக்கவர்கள் எல்லோரும் அவளிடம் வந்தார்கள். ஏதோ வெள்ளி ரூபாய்களைக் கொடுத்து தங்கள் ஆசையை பூர்த்தியாகி விட்டதாக எண்ணினர். சமூகம் அவளை வெறுப்புப்பார்வையுடன் நோக்கியது. ஆனுல் சமூகத்தின் தூண்கள் மறைந்து மறைந்து வேசை மேனகையின் வீட்டிற்கு வந்தன, தங்களுடைய கண்களால் அவள் அழகைப் பருகி தங்கள் மனத்தின் தாகத்தைத் தீர்த்துக்கொண்டன. மேனகா வேசையாய் இருந்தால் என்ன? அவளுக்கும் ஹிருதயம் இருந்தது. சமூகம் அவளைக் கேவலமாக மதித்தாலும் அவள் தன்னுல் இயன்ற அளவு அதற்கு உதவி புரிந்து வந்தாள். அவளுக்கு தனத்திற்கு யாதொரு குறைவும் இல்லை. அவள் ஆரிய ஸமாஜம், அநாதை ஆச்ரமம், விதவா விடுதி, ஆகிய ஸ்தாபனங்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்தாள். ஜனங்கள் குனிந்த தலையுடன் அதை ஏற்றுக்கொண்டனர். இதனுல் அவளுக்கு அளவற்ற சாந்தி கிடைத்தது. மனதிற்கு சந்தோஷம் கிடைத்தது. தன் வாழ்க்கையில் அவளுக்கு சந்தோஷமில்லை தான். அவள் விடுதலையடைய விரும்பினுள்.’ இம்மாதிரிக்கழிந்துகொண்டிருந்தன அவளுடைய நாட்கள். திடீரென்று ஒரு நாள் ஒரு சம்பவம் அவள்வாழ்க்கையின் போக்கையே மாற்றி விட்டது” என்ருள் தாய்.

ஆசா கவனமாய் கேட்டுக்கொண்டிருந்தாள்.

“ஆவணி மாதம் வானத்தில் கருமேகம் கூடிக்கிடந்தது. ஒரே இருள். காலை நாலு மணி இருக்கும். மேனகா வேலைக்காரியை எழுப்பி அழைத்துக் கொண்டு கங்கா ஸ்நானத்திற்குச் சென்ருள். இது அவளுடைய தினசரிப் பழக்கம். அவள் சென்றுகொண்டிருந்தாள். கீழே பார்த்துக்கொண்டே ஆற்றை நோக்கி, தன்னை மறந்தவளாய். திடீரென்று வேலைக்காரி மௌனத்தைக் குலைத்தாள். ‘அங்கே என்ன கூட்டம்?’ என்ருள். மேனகா அந்தப் பக்கம் பார்த்தாள். அவளால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. அவள் கால்கள் கூட்டத்தை நோக்கி நடந்தன.

“பார்த்தாள். ஒரு சிறு கைக்குழந்தை. அப்பொழுது பிறந்த பெண் குழந்தை. ஒரு சிறிய சிதைப்பு மெத்தையில் படுக்க விட்டிருந்தது, பிறந்து ஒரு நாள்கூட ஆகியிருக்காது. அதனுடைய சிறிய அழகிய கால்கள். சிறிய அழகிய முகம். பெரிய பெரிய கருவிழிகள். மேனகாவின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. அவள் கண்கொட்டாமல் அந்தச் சிசுவைப் பார்க்கலானுள். ஜனங்கள் ஏதோ தர்க்கம் செய்து கொண்டிருந்தார்கள். ஆனுல் அந்த அநாதைக் குழந்தையை எடுத்துக் கொள்ள யாரும் முன் வரவில்லை. களைசியில் களங்கத்தின் சின்னமான அவள்—மேனகா-இதைப் பார்த்துக்கொண்டு கற்சிலைபோல் நின்றிருந்தாள். திடீரென்று முன்னே வந்தாள். போலீஸ் காரர்களிடம் இந்தக் குழந்தையை நான் கொண்டு போய் வளர்க்கிறேன் என்ருள்.

“ஜனங்கள் ஆச்சரியத்துடன் திரும்பினுர்கள். எல்லோர் பார்வையும் ஏககாலத்தில் அவள் மேல் விழுந்தன. அந்த இருளில் ஜனங்களால் அவளை அறிந்து கொள்ள முடியவில்லை. மற்ற புருஷர்கள் செய்ய முடியாத காரியத்தை ஒரு ஸ்த்ரீ செய்ய

(அடுத்த பக்கம் பார்க்க)

“இந்த சம்பவம் நடந்து பதினைந்து வருஷங்கள் ஆகிவிட்டன. தெரிந்ததா ஆசா. அந்தக் குழந்தை வேறு யாரும் அல்ல. . நீ தான் அது! அந்த வேசை மேனகா நான் தான்” என்று கூறி, தாய் ஒரு நீண்ட பெருமூச்சுடன் மௌனமானுள். ஆசாவின் கதை அத்புதமானது: உள்ளத்தில் புத்துணர்ச்சி உதித்ததை விவரிக்கும் சித்திரம்: சில சந்தர்ப்பங்களில் உயர்தர மனேபாவம் வளருவதை இது சுட்டி காட்டுகிறது. ஸ்திரீகளின் குண விசேஷத்தைச் சிறப்பிக்கிறது.

* * * * *

மொழி பெயர்த்து எழுதியவர் “ஜய்ம்”.

சிறுவர் கதை

★

மதியூகி மந்திரி

★

'ஸரோஜினி'

மணிபுரம் என்ற ஊரில் மங்கம்மாள் என்று ஒரு கிழவி இருந்தாள். அவள் மிகவும் ஏழை. அவளுக்கு மாலினி என்றுஒருபேத்தி இருந்தாள். மங்கம்மாளின் மகள் மாலினியை ஈன்றவுடனேயே மறித்துவிட்டதால் மாலினி தன் பாட்டியினிடமே வளரலானாள். அவளுக்கு பதினாறு வயதாகியும் ஏழை மங்கம்மாளால் மணம் செய்விக்க முடியாமல் இரவு பகலாய் வருந்திக் கொண்டிருந்தாள். 'அவள் அழகிற்கும், குணத்திற்கும் தக்க வரன் கிடைக்க வேண்டுமே, நாமோ பரம ஏழை நம்மைத் தேடி யார் வரப் போகிருர்கள்?' என்றுவருந்திக் கொண்டிருந்தாள்.

அவ்வூர் அரசனுக்கு ஓர் மகன் உண்டு. அவன் பெயர் மணிவண்ணன். அவனுக்கு அடுத்த ஊர் இளவரசியை மணம் செய்து வைத்திருந்தனர். ஏதோ சில காரணங்களினால் கணவனுக்கும், மனைவிக்கும் ஒற்றுமை குறைந்தது. அவள் தாய் வீடு சென்றாள். அவன் மன வருத்தத்துடன் வேட்டையாடுவதிலேயே தன் காலத்தைக் கழித்தான். ஒரு நாள் தற்செயலாய் அவன் மாலினியைக் காணும்படி நேரிட்டது. அவள் மீது காதல் கொண்டான். அவளது சாந்தமான புன்னகை முகத்தை இவனால் மறக்க முடியவில்லை. நாட்கள் பல சென்றன.

இளவரசன் மனோவேதனையினால் துரும்பென மெலிந்தான். இதைக் கவனித்த அரசன் பயந்து வைத்தியம் செய்யத் தொடங்கினான். இதையெல்லாமறிந்த மந்திரி மகன் மதியூகிவிஷயத்தை அரசனுக்கு அறிவித்தான்.

அரசனும் ஒருவாறு யோசித்து, தன் மகன் இஷ்டப்படியே அந்தக் கன்னிகையை அவனுக்கு இரண்டாவது மணமாகச் செய்ய நிச்சயித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்திரவு செய்தான்.

மாலதிக்கு திடீரென்று வந்த அதிர்ஷ்டத்தை கேட்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டனர். மாலதியும் தனக்குள் மகிழ்ந்து தன் குல தெய்வமான பரந்தாமனை பூஜித்து வந்தாள்.

முடிவில் குறிப்பிட்ட தினத்தில் அதிக ஆடம்பரமன்னியில் ஓர் தெய்வ சன்னிதானத்தில் மாலதிக்கும், மணிவண்ணனுக்கும் விவாகம் வெகு ஆனந்தமாய் நிறைவேற்ற ஆரம்பித்தார்கள். ஆனால் எல்லாம் நம் இஷ்டப்படி நடக்கிறதா? வெளியில் ஒரே ஆரவாரம்! அமர்க்களம்!! கைகளில் தடிகளுடன் சில ஜனங்களும், மணிவண்ணனின் முதல் மனைவியும் அங்குதோன்றி "ஏ! அக்ரமஸ்தர்களே, என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்! ஓர் மனைவி இருக்கும்போது மறு மணம் எதற்கு? அதிலும் கேவலம் ஓர் ஏழை. பரதேசிப் பெண்ணையா மணப்பது? வெட்கம் இல்லையா?" என்று வாய்க்கு வந்த விதம் திட்டி ஆரவாரம் செய்தார்கள். தாலிக் கட்டும் சமயத்தில் இப்படி அபசகுனம்போல் ஏற்பட்டதை நினைத்து எல்லாரும் கற்சிலைகள் போல் நின்று விட்டனர். "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே" என்று இளவரசன் வருந்தினான். மற்றவர்களெல்லாரும் மெள்ள நழுவிவிட்டனர். மாலினியின் பாட்டி மங்கம்மாளின் மனவருத்தத்தைச் சொல்லவே முடியாது. அரசனும், மற்றவர்களும் இந்தக் கலவரத்தில் ஈடுபட்டிருக்கும் சமயம் சட்டென்று மதியூகியின் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. அவன் மின்னல் பாய்வதுபோல் கையில் ஏதோ ஒரு வஸ்துவை எடுத்துக்கொண்டு மங்கம்மாளையும், மாலினியையும்கண்ஜாடைசெய்து கோவில் பிராகாரத்திற்கு அழைத்துச் சென்று கிழவி கையில் தான் கொண்டுவந்திருந்த தாலியைக்கொடுத்துச் சீக்கிரம் மாலினியின் கழுத்தில் கட்டும்படி துரிதப்படுத்தினான். கிழவி ஒன்றும் தோன்றாமல் மிரள மிரள விழித்துக் கொண்டு பேத்தியின் கழுத்தில் அதே சுப முகூர்த்தத்தில் தாலியைக் கட்டினாள். அவர்கள் இருவரையும் அங்கேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டு ஒன்றும் தெரியாதவனைப்போல் தானும் கலகம் நடக்கும் இடத்திற்கு வந்து பெருங்குரலில் பேசத்தொடங்கி "வீணாக ஏன் கடந்துபோன விஷயத்திற்காக இப்படிச் சண்டைசெய்து மண்டையை உடைத்துக்கொள்ளுகிறீர்கள்? எப்படியும் இளவரசர் மாலினியின் கழுத்தில் தெய்வ சன்னிதியில் தாலி கட்டியாய்விட்டது. இனிமேல் என்னசெய்யமுடியும்? நடந்தது நடந்துவிட்டது. இளவரசர் மனங்கோணாமல் ஒற்றுமையாய் மகாராணி நடந்திருந்தால் இக்கதி நேர்ந்திருக்காது. இனிமேலும் ஒன்றும் பாதகமில்லை. அரசர்களுக்குப் பல மனைவிகள்இருப்பதும் சகஜம். நீங்கள் இருவரும் அக்கா தங்கையைப்போல் ஒற்றுமையுடன் இருந்தால் இருவருக்கும் நன்மை" என்று ஒரு போடுபோட்டான். அரசனும், இளவரசனும் மதியூகியின் யுக்தியை நிமிஷத்தில் அறிந்துகொண்டு மனதிற்குள் ஆனந்தம் அடைந்தார்கள்.

முதல் மனைவியும் அவளுடன் வந்தவர்களும் காரியம் மிஞ்சி விட்டதைக்கேட்டு மனமுடைந்து, இனிமேல் தங்கள் ஜம்பம் பலிக்காது என்று வந்த வழியே போகப் புறப்பட்டனர்.

அவர்கள் விஷயத்தில் இரக்கங்கொண்ட மதியூகி அவர்களைச் சமாதானம் செய்து அரண்மனைக்கு அழைத்துச்சென்று மரியாதைகள் செய்து சில நாள் வைத்துக்கொண்டிருந்து அனுப்ப ஏற்பாடு செய்தான்.

மாலினியும், இளவரசனும் வெகு அன்யோன்யமாயும், ஆனந்தமாயும் இருந்தார்கள். மாலினியின் முயற்சியால் முதல் மனைவியும் தன் கெட்ட குணங்களை மாற்றிக்கொண்டு அவர்களுடன் தானும் சந்தோஷமாய்க் காலங்கழித்தாள். மதியூகியின் சொற்படி பாட்டி கட்டின தாலியாய் இருந்தபோதிலும் மாலினி குழந்தை குட்டிகளுடன் அநேக காலம் சௌக்கியமாய் வாழ்ந்து வந்தாள். மதியூகியும், இதைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். இளவரசனும் மதியூகியை வெகுவாய்க் கொண்டாடினான்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

தைரியத்துடன் முன் வந்தாள். அவள் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. குழந்தை அவளிடம் ஒப்புவிக்கப்பட்டது.

"குழந்தையை எடுத்துக் கொண்டு அவள் வேகமாக வீடு நோக்கி நடந்தாள். குழந்தை ஒரு வேசையிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதென்பதை யாரேனும் கண்டு கொள்வார்களோ என்ற பயம். யாரேனும் பிடுங்கிக் கொண்டு விடுவார்களோ என்ற பயமும்கூட!

"வேசையின் வீட்டில் ஒரு பெண்! ஒரு விலையற்ற நிதி! தோழிகள் அவளுக்கு யோசனை கூற வந்தனர். ஆனால் மேனகா அப்பொழுது வேசையல்ல தாய். அவள் உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த மாத்ருத்வம் விழித்தெழுந்து விட்டது. அவர்களை வெறுத்தாள். தன் தொழிலையும் வெறுத்தாள். தன்னுடைய சொத்துகளையெல்லாம் ஏழைகளுக்குப் பங்கிட்டு விட்டு அந்த நகரத்தை விட்டு வெளியேறி அமைதி நிலவும் ஒரு கிராமத்திற்கு வந்து குடியேறினாள். அவளுக்கு நகரத்தில் நான்கு வீடுகள் மிஞ்சின. அவை மூலம் மாதம் இருநூறு ரூபாய் வருமானம வந்தது. இரண்டு பேருக்கு இது போதுமானது.

இந்தச் சம்பவம் நடந்து பதினைந்து வருஷங்கள் கழிந்து விட்டன. தெரிந்ததா ஆசா? அந்தக் குழந்தை வேறு யாருமல்ல, நீ தான்! அந்த வேசை மேனகா நான் தான்." என்று கூறித் தாய் ஒரு நீண்ட பெரு மூச்சுடன் மௌனமானாள்.

ஆசா அது வரை மந்திரத்தால் கட்டுண்ட சர்ப்பம் போல் மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள். தாய் கூறி முடித்ததும் சட்டென்று அவள் பாதங்களில் விழுந்து "அம்மா! தபஸ்வினியான அம்மா! உண்மையில் நீ தேவி! நீ எனக்காகச் செய்த காரியம் ஒரு சிறந்த தாய்செய்த காரியமாகும். அம்மா! சமூகம் புழுவாய் மதித்த என்னை நீ ஆதரவுடன் எடுத்து வந்து வளர்த்தாய். மன்னித்துக் கொள் அம்மா! நான் உன் மகள். நீ என் தாய்! நான் என் தாய்க்காக கர்வமடைகிறேன்!" என்றாள். ஆசாவின் குரல் தழதழத்தது.

மறுநாள் தாயை வீட்டில் காணவில்லை. அவளுடைய கடைசி அடையாளமாக ஒரு கடிதம் மாத்திரம் இருந்தது. கொடுமையின் கடைசி எல்லை இது தானோ என்னவோ?

உயர்ந்த மரியாதை

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

நாஜிர் கானுக்கு உயர்ந்த மரியாதை கிடைத்தது. பாதுஷா தம் தர்பாரில் நல்ல வாசனையுள்ள தாம்பூலச் சுருள் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். அவன் அதை மிதந்த வணக்கத்துடன் வாங்கிப் போட்டுக்கொண்டான். இது சாமான்யமான கௌரவம் அல்ல ; இந்த கௌரவம் கொடுக்கப் பட்டதேன்? இதன் தாத்பர்யம் என்ன? இது எவ்விதம் முடிந்தது? மொகலாய ஸாம்ராஜ்ய சரித்திரத்தில் காணப்படும் ஒரு ரஸமான பகுதி இப்போது இந்தக் கதாநுபமாக நமக்களிக்கப்பட்டிருக்கிறது.

சபை முழுதும் அதே பேச்சாக இருந்தது. அங்கே கூடியிருந்தவர் யாவரும் நாஜிர் கானைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். அவனுடைய சாமர்த்தியம், வசீகரமான தோற்றம். இளம் வயது, ஆகிய ஒவ்வொன்றையும் அவர்கள் வாயாரப் புகழ்ந்தனர்,

ஒருவார காலத்திற்கு முன்னர் அவர்கள் அவனை அவ்விதம் புகழ்ந்திருக்கமாட்டார்கள். அவர்கள் அவனை அலக்ஷியமாகவே கருதி வந்தனர். அவன் முன்னுக்கு வரவேண்டியவன் என்பதற்கான அறிகுறிகளைக் கண்ட ஒன்றிரண்டு பேர்கள் மட்டும் அவனை மரியாதையோடு நடத்தினர். ஆயினும் அவனை நெருங்க விடவில்லை; தூரத்திலேயே வைத்திருந்தனர்.

திடீரென்று அவனுக்கு யோகம் அடித்தது. மொகலாய ஸாம்ராஜ்யத்தின் மந்திரிப்பதவி வகித்துவந்த ஷயிஸ்தகான் அந்தப் பாரசீகனுடைய பெருமையை முதலில் எடுத்துரைத்தான். ஷயிஸ்தகான் மந்திரி பதவி மட்டில் வகித்து வரவில்லை. அவன் ஸாம்ராஜ்யத்தின் சேனாதிபதிகளுள் முக்கியமானவன். சக்ரவர்த்தியான ஷா ஜஹானுடைய மைத்துனன். அப்படிச் செல்வாக்குப் படைத்த அவன் பாதுஷாவின் சமூகத்தில் ஒருவனை அழைத்து வந்து நிறுத்தி வானளாவப் புகழ்ந்தால் அது வீண் போகுமா? நாஜிர் கான் புகழ் நகரம் முழுதும் பரவியது.

அரசிளங்குமரன் அவுரங்கஜேபும் அந்தப் பாரசீகனுடைய நட்பை விரும்பிப்பெற்றுக் கொண்டான். யாருக்கும் கிட்டாத பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது.

மாறுக நடந்தன

நாஜிர் கான் பரம்பரையான பிரபுக்கள் வம்சத்தில் பிறந்தவன் அல்லன்: சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவன் தான் எனினும் அவன் பிறந்து வளர்ந்தது பாரசீக தேசம். நம் நாட்டைக்காட்டிலும் குளிர்ச்சி பொருந்திய தேசம். மலைச்சிகரங்களுக்கிடையே தோன்றித் தழைத்த பசும்புல் பூமியில் வளர்ந்தவன், அந்த சீதோஷ்ணஸ்திதியின் இயற்கையே அவனை முன்னுக்குக் கொணர்ந்தது.

சிவந்த மேனியுடன் அழகிய சரீரம் வாய்ந்த அவனைக் கண்டவர் யாவரும் காமுறுவர். அதனோடு அவனுடைய வாலிபப் பருவமும் சேர்ந்து கொண்டது. அவனுடன் அமர்ந்து பேசிப்பொழுது போக்குவதே பலருக்கு மனோரம்யத்தை அளித்தது.

அவனுக்கு நல்ல பயிற்சியும் இருந்தது. பாரசீக மொழியில் அவன் நல்ல விற்பன்னன். போர் வீரர்களுக்குத் தலைமை பூண்டு படையை யுத்தரங்கத்துக்கு நடத்திச் சென்று வெற்றிக்கொள்ளும் ஆற்றலும் இருந்தது.

நாஜிர் கானும் தனக்கு ஏற்பட்ட கௌரவத்தை நன்றாகக் காப்பாற்றிக் கொண்டான். பதவிக்கேற்பத் தன் வாழ்க்கையையும் மாற்றிக்கொண்டான், பழைய எளிய வாழ்க்கை அதன் சின்னமான மலின வஸ்திரத்துடன் உதறி எறியப்பட்டது. ஆடம்பரம் தாண்டவமாடியது.

அவன் உடுத்திருந்த ஆடை அவன் அந்தஸ்தை எடுத்துக் காட்டியது. ராஜகுமாரர்களே தரிக்கத்தக்கதான அந்த உடை பாதுஷாவால் அவனுக்குப் பரிசளிக்கப்பட்டது. அன்றையதினம் அவன் அதை உடுத்து ராஜசபைக்கு வந்திருந்தான். தர்பாரிகள் யாவரும் அவனை மரியாதையுடன் வரவேற்றுச் சல்லாபம் செய்தனர்.

அன்றையத்தினம் பாதுஷாவின் சபை ஒரே கலகலப்பாக இருந்தது. சாதாரணமாக அது உயிரற்ற யந்திரம்போல மோன நிலையிலே நடைபெறும். உரக்கச் சத்தமிட்டு யாரும் பேசமாட்டார்கள். ஒருவர் நடக்கும் பொழுதும் பேசும் பொழுதும் சிறிதும் சப்தம் உண்டாகாது. அதற்கு மாறுகவே அன்றைத் தினம் யாவும் நடந்தன.

பாதுஷா வைபவம்

பாதுஷா சபை நடுவே தங்கச் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தான். அவனுக்கு இருபுறமும் அடிமைகள் பணிவிடை செய்து வந்தனர். ஒருத்தி வெற்றிலையில் சுண்ணமிட்டுப் பரிமளங்களுடன் கூடிய பாக்குத்தூளை வைத்துச் சுருட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தாள். மற்றொருத்தி பாதுஷா சுவைத்த தாம்பூலத்தை ஏந்துவதற்குத்தங்கக் கிண்ணத்தைத் தாங்கி நின்றாள். வேறொருத்தி அபினி கலந்த ஹுக்காவின் பாம்புக் குழாயைப் பாதுஷாவின் கையில் அளிப்பதற்காகத் தயாராக வைத்திருந்தாள்.

மெல்லிய காற்று ஒன்று வீசியது. அத்தர் மணத்தைத்தாங்கி வந்த அந்தக் காற்று எல்லோருடைய மனத்தையும் குளிரச் செய்தது. கப்புப் பூசிய பாதுஷாவின் தாடியும் அதில் மெதுவாக அலையுண்டது. அதைக் கையால் ஒரு தடவை தடவி விட்டான் பாதுஷா.

சக்ரவர்த்தி தன் தாடியை உறுவிவிடுவது இரண்டு காலங்களிலேதான். ஒன்று தாங்க முடியாத கோபத்தின் வசத்தில் இருக்கும்பொழுது: மற்றொன்று மிக்க சந்தோஷம் அடைந்த காலத்தில். அப்பொழுது அவன் எந் நிலையில் இருந்தான் என்று சொல்வது? பார்வைக்குச் சந்தோஷத்தால் அலைக்கப்பட்டவனாகவே காணப்பட்டான்.

சபை கூடிய காரியம் எப்பொழுதோ முடிந்துவிட்டது. பாதுஷா அதை உடனே கலைக்கவில்லை. வம்புப் பேச்சை பேசிக் கொண்டு காலஹரணம் செய்து வந்தான். அவன் மனத்துள் ஏதோவொன்று குமுறிக்கொண்டிருந்தது என்பது மட்டில் நிச்சயம்.

அவன் வெற்றிலை போட்டுச் சுவைப்பதும்,துப்புவதும், நடுநடுவே ஹுக்கா குடிப்பதுமாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். பொழுது ஏறிக்கொண்டே போயிற்று.

ராஜாங்க சம்பிரதாயம்

கடைசியாக அவன் பார்வை நாஜிர் கான் மீது விழுந்தது. ஜாடை காண்பித்தான். அந்த ஜாடையின் பொருளை நாம் அறிந்து கொள்ள முடியாது. தர்பாரிகளுக்கு மட்டுமே விளங்கும். நாஜிர்கான் அவற்றுள் நல்ல பழக்கம் உள்ளவன். பாதுஷா தன்னுடன் பேச விரும்புகிறார் என்பதை அறிந்த அவன் உடனே தன்னுடைய இருக்கையை விட்டு முன் வந்தான். பாதுஷாவின் எதிரில் மண்டியிட்டுச் சலாம் செய்து, அவன் சமீபம் சென்று வாய் புதைத்துத் தலை குனிந்து நின்றான். அது அரண்மனை சம்பிரதாயம்.

சக்கரவர்த்தியின் கடைக்கண் பார்வை இடது புறம் சென்றது. அடைப்பைக்காரியான அடிமை அந்தப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் உடனே வாசனை பொருந்திய தாம்பூலச் சுருள் ஒன்றைப் பாதுஷாவின் முன்பாக ஏந்தி நின்றாள். சக்கரவர்த்தி அதைக் கையில் வாங்கித் தன் வாயில் போட்டுக் கொள்ளாமல் நாஜிர் கான் பக்கம் நீட்டினான்.

நாஜிர் கான் இதனை எதிர்பார்க்கவில்லை. இத்தகைய பெருமை தனக்குக் கிடைக்கும் என்பதை அவன் கனவிலும் கருதவில்லை. சக்கரவர்த்திக்குச் சமானமான அந்தஸ்து தனக்குக் கிட்டப் போவதாக அவன் எண்ண முடியுமா? ஆயினும் அது அவனுக்கு வாய்த்த பொழுது அவன் என்ன செய்ய முடியும்?

அந்தத் தாம்பூலத்தை வாங்கிக் கொள்ள அவன் கைகள் தாராளமாக முன்னுக்கு வரவில்லை. எப்படியோ அதை வாங்கித் தன் வாயில் இட்டுக் கொண்டான்.

சக்கரவர்த்தி தனக்கு நிகரான அந்தஸ்துள்ளவனுக்கே தன் கையால் வெற்றிலை வழங்குவான். அப்படிப் பெற்றுக் கொண்டவன் தாழ்ந்த நிலையில் இருந்தாலும், அவனுடைய ஸ்திதி உடனே உயர்ந்துவிடும். அவனும் பிரமுகர்களுள் ஒருவனாகி விடுவான். வெற்றிலையைப் பெற்றுக்கொண்டவன் உடனே அதைத் தன் வாயிலிட்டு மென்று சுவைக்க வேண்டும். ஆம், காதலி கொடுத்த வெற்றிலையை நாம் உடனே தின்ன ஆரம்பிக்கவில்லையா? அது தான் ராஜாங்கத்துச் சம்பிரதாயம்.

அப்படியானால் அவனுடைய மனோரதம் பூர்த்தியாகி விட்டதா? பாதுஷா அவனைத் தன் மருமகனாக ஏற்றுக் கொண்டு விட்டானா? பேகம் ஸாஹிபா இனி அவன் மனைவி தானா?

* * * *

பேகத்தின் அரண்மனையில்

நாஜிர் கான் அரண்மனைச் சேவகத்தில் புகுந்த பொழுது சாதாரணமானவன்

தான். முதலில் அவன் கூப்பிட்ட குரலுக்கு 'ஏன்' என்று கேட்கும் வேலைக்காரப்பையனாக அமர்ந்தான். அடிமைகளுக்கும் கீழ்ப்பட்டவன். அடிமைகளுக்கும் அலிகளுக்கும் உள்ள சுதந்தரம் கூட அவனுக்கு கிடையாது.

அவன் பார்வைக்கு லக்ஷணமாக இருப்பான். அதுவே அவனுக்கு ஜனனாவில் உத்யோகத்தைக் கொடுத்தது. அதிர்ஷ்டவசமாக அவன் ஜஹனார் பேகத்தின் அரண்மனையில் உத்தியோகம் ஏற்றான்.

ஜஹனார் பேகம் பாதுஷாவின் மூத்த மகள். தனக்கடங்காப் பிள்ளைகளில் ஒருவராலும் தனக்குப் பிறகாலத்தில் சுகம் ஏற்படப்போவதில்லை என்பதை நன்கு அறிந்த ஷா ஜஹான் தன் ஆசை முழுவதையும் அவள்மீது பொழிந்து வந்தான். அவளே அந்தப்புரத்தின் ஸர்வாதிகாரி.

மும்தாஜ் பேகம் இருந்தவரையில் சக்கரவர்த்திக்கும் அந்தப்புரத்தைப் பற்றிய செய்தி ஒன்றுமே தெரியாது. எல்லாவற்றையும் அவளே கவனித்து வந்தாள். அவளுக்குப் பிற்காலம் அவள் மூத்த மகள் வாரிசாக வந்தாள்.

மொகலாய ராஜகுடும்ப வாழ்க்கை மிகவும் சிக்கலானது. அந்தப்புரத்திற்குள்ளேயே குட்டிக் கக்ஷிகள் பல உண்டு. நாட்டின் நிர்வாகத்தில் ஏற்படும் மாறுதல் யாவும் அந்தப் புரத்திலும் தோன்றும். சில சமயங்களில் அந்தப்புரத்தில் நிகழ்வனவே நாட்டில் பெரிய மாறுதல்களை உண்டாக்கும்.

மொகலாய ராஜகுடும்பத்தில் பிறக்கும் பெண்களுக்குக் கல்யாணம் நடத்தமாட்டார்கள். அவர்கள் தங்கள் வாழ்நாட்களை கன்னிப் பெண்களாகவே கழிக்கவேண்டும். அவர்கள் அந்தஸ்துக்குத் தக்க குடும்பங்களிலிருந்து ஆண்பிள்ளைகள் கிடைக்காத குறை மட்டுமன்று. குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளால் ஏற்படும் சச்சரவுகள் போதாமல் மாப்பிள்ளைகளையும் வேறு சச்சரவுகளுக்கு அழைத்து வரவேண்டுமா என்ற எண்ணமாகவும் இருக்கலாம்.

அந்தபுறக் காட்சிகள்

ஜஹனார் வயது வந்தவள்; பருவத்தைப் பல வருஷங்களுக்கு முன்னராகவே கழித்துவிட்டாள்; புருஷன் இல்லாமல் கன்னியாகவே இருந்து வந்தாள். கண்டோரை வசீகரிக்கும் அழகு பொருந்திய நாஜிர் கானை அவள் வேலைக்கு அமர்த்திக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நாளடைவில் அவனுடைய செல்வாக்கு உயர்ந்து அவன் கடைசியில் அவளுடைய அந்தரங்க காரியதரிசி போன்ற நிலைமைக்கு வந்துவிட்டான்.

அந்தபுரத்திலேயே அவளுக்கு விரோதமான கட்சி ஒன்று உண்டு. பாதுஷாவின் கடைசி மகள் ரோஷனாரா பேகம் அதற்குத் தலைமை பூண்டு வந்தாள். ராஜகுமார்களும் தங்கள் விருப்பப்படி கட்சி பிரிந்தார்கள். மூத்த குமாரனை தாரா தந்தையுடன் சேர்ந்து ஜஹனாராவின் கட்சியில் இருந்தான், கடைசிப் பிள்ளை அவுரங்கஜேப் தன் மாமன் ஷாயிஸ்தகானுடன் ரோஷனாரா பேகத்தின் கட்சியை அடைந்தான்.

மொகலாயச் சிங்காதனமே அந்தக் கட்சிகளுக்கிடையில் அகப்பட்டுத் தவித்தது. ஷாஜஹானுக்குப் பிறகு ஸாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக வருபவன் ஜயித்த கக்ஷியைச் சேர்ந்தவன் என்பது நிச்சயம். அதனால் கட்சி வேற்றுமையும் பிளவும் அதிகமாகிக் கொண்டே போயின.

ஜஹனரா பேகத்தை அந்தப்புரத்தினின்றும் அப்புறப்படுத்திவிட்டால், தங்கள் கட்சி கட்டாயம் வெற்றியடையும் என்று அவுரங்கஜேப் எண்ணினான். அவனுடைய எண்ணத்தை உறுதிப்படுத்தினான் மாமன் ஷாயிஸ்த கான். அதற்குச் சமயம் பார்த்திருந்தார்கள் அவர்கள்.

அவன் எதிர் நோக்கியிருந்ததும் கிட்டியது. நாஜிர் கான் பேகம் ஸாஹிபாவுடன் நெருங்கிப் பழகுவதைக் கண்ட அவர்கள் தங்கள் காரியம் கைகூடிவிட்டதாகவே தீர்மானித்தனர்.

ஷாஜஹான் சிந்தனை

ஷாயிஸ்தகான் சக்கரவர்த்தியிடம் இதைப்பற்றி அடிக்கடி உரைத்து வந்தான். பல பேருடைய நன்மையையும் கருதி ஜஹனரா பேகத்தை நாஜிர் கானுக்கு மணம் செய்து கொடுத்துவிடுவதே நலம் என்று படித்துக் கூறினான். அவுர்ங்கஜேபும் தன் மாமனுடன் சேர்ந்து கொண்டு அவர்களுடைய கக்ஷிக்காகவே வாதாடினான்.

ஜஹனாரா போய்விட்டால், தாராவின் கட்சி வலுக்குன்றிவிடும்; சக்கரவர்த்தி மனம் தளர்ந்து எதிலும் அதிகமாகத் தலையிடாமல் ஒதுங்கிவிடுவார்; தன்னுடைய கை ஓங்கிவிடும். இவ்விதமே எண்ணிய அவன் தன் தமக்கையின் நன்மையையே கோருபவன்போல நடித்தான்.

ஷாஜஹானால் இதைப் பொறுக்க முடியவில்லை. தன் அருமைக் குமாரியை விட்டுப் பிரிவதற்கு அவனுக்குச் சிறிதும் மனம் இடங் கொடுக்கவில்லை. அவளை எப்பொழுதும் எந்த விதமாகிலும் தன் பக்கத்திலே நிறுத்தி வைத்துக் கொள்ளவே தீர்மானித்தான்.

"தந்தைக்கும் மகளுக்கும் இடையில் வந்து முளைத்த அந்தப் பாரசீகன் யார்? அவன் இருப்பதால் அல்லவா இவ்வளவு சிக்கல்களும் உண்டாகின்றன. அவனை ஒழித்து விட்டால் தவிர, தனக்கு விரோதிகளான ஷாயிஸ்தாகானும் அவுரங்கஜேபும் வானளாவப் புகழும் அந்த நாஜிர் கானைக் கணமும் நம்ப முடியாதே!" இவ்விதம்சென்றது ஷாஜஹான் சிந்தனை.

* * * *

அதன்விளைவே சக்கரவர்த்தி நாஜிர்கானுக்கு அளித்த மரியாதை. அவன் அதனைச் சிறிதும் சந்தேகிக்கவில்லை. தன் மாளிகைக்குப் போய் விட்டு நிகழ்ந்தவற்றைச் சாயங்காலமாகப் பேகம் ஸாஹிபாவுக்குத் தெரிவிக்க விரும்பினான்: ஆனால் அவன் உயிர் அதுவரையில் உடலில் தரிக்கவில்லை. வெற்றிலையில் சுண்ணத்துடன் விஷம் கலந்து பூசப்பட்டிருந்தது.

நாஜிர் கான் சபையிலிருந்து வெளியில் வந்து பல்லக்கில் ஏறிக் கொண்டான். பல்லக்கு அவன் வீட்டை அடையும் முன் அவன் ஆவி உடலினின்றும் பிரிந்தது. வீட்டிற்குள் பிணத்தையே தூக்கிச் சென்றனர்.

★

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ காஞ்சி காம கோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் சமீபத்தில் கும்பகோணத்திற்கு விஜயம் செய்த போது எடுத்த படம்.

★

(வலது)

ரதோத்சவம்

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியின் ரதோத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் குழுமியிருந்தனர்.

★



உங்களுக்கு அவர்கள் கொஞ்சமாவது நன்றி காட்ட வேண்டாமா?" என்றாள்.

"நாங்கள் ரொம்பவும் நன்றி உடையவர்களாக இருப்போம்-அவர்கள் அந்தக் கோபத்தில் முழுமையும் கிறிஸ்துவர்களாகி விட்டார்கள். அவர்களில் பிராமணர் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள்-பிராமண சமூகத்தை இழிவுபடுத்துகிறார்கள். இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் இந்து சமூகத்தை பழிக்கிறார்கள். முதலில் இந்தத் தவறை அவர்கள் நீக்கிக் கொண்டு பிறகு பிறருக்காகக் கவலைப்பட்டால் அது உபயோகமாகவுமிருக்கும். நல்லதாகவும் ஆகும்"

"ஆனால் நான் அப்படி எண்ணவில்லை."

"அப்படி எண்ணாததால் ஒன்றும் பாதகமில்லை. ஆனால் எதற்காக நான் இப்படி இங்கே அடைபட்டுக் கிடக்கிறேன என்பது வேறு விஷயம். எங்கே அதற்கொன்றும் பதிலில்லையே?"

இந்தத் தடவை ராஜலக்ஷ்மி சிரித்துக் கொண்டு "அடே! எதற்காகவும் நீ அடைபட்டுக் கிடக்க வேண்டாம். முதலில் உன் பசி அடங்கட்டும். பிறகு யோசிக்கலாம்" என்றாள்.

"அப்பொழுது யோசிக்க வேண்டியது என்ன இருக்கிறது? ஏதாவது ஒரு ஸ்டேஷனில் கிடைத்ததை வாங்க வேண்டியதுதான் ஆனால் அது கூட நடைபெறாது என்று நினைக்கிறேன்."

நான் சொன்னதைக் கேட்டு அவள் சிறிது நேரம் மௌனமாக என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு பிறகு சிரித்தவண்ணம் "அது என்னால் செய்யமுடியும். அவ்வளவுக்கு நீ என்னை நம்புகிறாயல்லவா?" என்றாள்,

"ஓ! நன்றாக! உன் பேரில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை கூடவா இல்லை?"

"அப்படியானால் சரி" என்று சொல்லிவிட்டு மறுபடியும் அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தாள்.

அடுத்த ஸ்டேஷனில் ராஜலக்ஷ்மி ரதனைக் கூப்பிட்டு 'ஆகாரம் வரவழைத்தாள். அவனைப் புகையிலை கொண்டு வரச் சொல்லிவிட்டுத் தின்பண்டங்களையெல்லாம் எடுத்து என் முன்னால் வைத்தாள், பார்த்தேன். வேண்டியவற்றில் ஒன்றையும் அவள் மறக்கவில்லை. எனக்குக் கொஞ்சம் பிரியமான வஸ்துக்கள் கூட இருந்தன.

ரதன் பெஞ்சியின் மேல் படுக்கை போட்டான். சாப்பாட்டை முடித்துக்கொண்டு கொஞ்சம் புகை பிடித்துவிட்டுக் களைப்பாறுவதற்காகக் கொஞ்சம் கண்மூட முயலும்போது ராஜலக்ஷ்மி "ஆகாரத்தை எடுத்துக்கொண்டு போ, ரதன் இதில் எது வேண்டுமோ அதைச் சாப்பிடுங்கள். மிஞ்சினதை வண்டியில் வேண்டியவர்களுக்குக் கொடுங்கள்" என்றாள்.

ஆனால் ரதன் மிகவும் லஜ்ஜையுடனும் சங்கோசத்துடனும் நிற்பதைக் கண்டு நான் அவனைப் பார்த்து "நீ கொஞ்சம் சாப்பிடவில்லையா?" என்று கேட்டேன்.

"எனக்குப் பசிக்கவில்லை. போகவில்லையா ரதன். வண்டி புறப்பட்டு விடும்" என்றாள் ராஜலக்ஷ்மி. ரதன் வெட்கத்தால் ஒடுங்கிப்போனான்.

"நான் பெரிய தப்பு செய்து விட்டேன் பாபு. முஸல்மான் கூலி ஆகாரத்தைத் தொட்டு விட்டான். எவ்வளவோ சொன்னேன். 'அம்மா ஸ்டேஷனிலிருந்து ஏதாவது வாங்கிக் கொள்ளுங்கள்' என்று மறுத்து விட்டார்கள்" என்று சொல்லி விட்டு அவன் என் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்து என்னுடைய அனுமதியைக் கோரினான்.

ஆனால நான் பதில் சொல்வதற்கு முன்பே ராஜலக்ஷ்மி கண்டிப்பாக "நீ போ, இங்கே தர்க்கம் செய்து கொண்டு நிற்காதே!" என்றாள்.

ரதன் அதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போய் விட்டான். வண்டி புறப்பட்டதும் ராஜலக்ஷ்மி என் தலை மாட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

தலை மயிரை மெதுவாகக் கோதிக்கொண்டே "இதோ பார்—" என்று ஆரம்பித்தாள்.

நான் குறுக்கிட்டு "எல்லாம் அப்புறம் பார்க்கிறேன். ஆனால்—" என்று ஆரம்பித்தேன்.

அவளும் உடனே குறுக்கிட்டு "நீ ஆனால் என்று பிரசங்கம் செய்ய ஆரம்பிக்காதே, எனக்கு எல்லாம் தெரியும். நான் முஸல்மான் தொட்டான் என்பதற்காக ஆகாரத்தை வெறுக்கவில்லை. அப்படியிருந்தால் என் கையால் உனக்குக் கொடுத்திருக்க மாட்டேன்" என்றாள்

"பின் ஏன் நீ சாப்பிடவில்லை?"

"பெண்கள் சாப்பிடக் கூடாது!"

"ஏன்?"

"ஏன் என்ன? பெண்கள் சாப்பிடுவது தடுக்கப்பட்டிருக்கிறது"

"ஆண்பிள்ளைகளுக்குத் தடையில்லையா?"

ராஜலக்ஷ்மி என் தலையை ஆட்டி "இல்லை, புருஷர்களுக்குக் கட்டுப்பாடுகளும் விதித் தடைகளும எதற்காக? அவர்கள் இச்சை போல் சாப்பிடலாம், இச்சைபோல் உடை அணியலாம்—எப்படி வேண்டுமானாலும் சுகமாக இருக்கலாம். ஆனால் நாங்கள்—எல்லோரும் ஆசாரத்தைக் கடைபிடித்துத்தான் ஆகவேண்டும் நாங்கள் ஆயிரங்கஷ்டம் தாங்கலாம, ஆனால் நீங்கள் தாங்கலாமா? ஆச்சு, சாயங்காலம் ஆனதும் உனக்குப்பசி எடுத்துவிடாதா?" என்றாள்.

"அது இருக்கலாம், ஆனால் எங்களால் கஷ்டத்தை சகிக்க முடியாது என்று சொல்லுவது அவ்வளவாக எங்களுக்கு கௌரவத்தைக் கொடுப்பதாகாது."

ராஜலக்ஷ்மி தலையை அசைத்து "இதனால் உங்களுக்குக் கொஞ்சம்கூட கௌரவக் குறைவில்லை. நீங்கள் எல்லாம் கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுவதற்கு எங்களைப்போல் அடிமைகளல்ல; ஆனால் நாங்கள் கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் போனால் அது வெட்ககரமானது" என்றாள்.

"இந்த நியாய சாஸ்திரங்களெல்லாம் உனக்கு யார் சொல்லிக்கொடுத்தது? காசியிலிருக்கும் உன் குருவா?"

ராஜலக்ஷ்மி என் முகத்திற்கு அருகில் அப்படியே இருந்து விட்டுப் பிறகு மெதுவாகச் சிரித்துக்கொண்டு "எனக்கேதாவது கொஞ்சம் தெரிந்திருந்தால் அது உன்னிடம் கற்றது தான். உனக்கும் மேலான குரு எனக்கு யாருமில்லை" என்றாள்.

"அப்படியானால் குருவினுடைய உபதேசத்திற்கு நேர்மாறுகக் கற்றுக்கொண்டிருக்கிறாய. நீங்கள் அடிமை ஜாதியென்று நான் ஒரு நாளும் சொன்னது

நறுமணம்

உயர்தரமான இலைகளை பொறுக்கி வெகு ஜாக்கிரதையுடன் அனுபவசாலிகளால் பதம் செய்யப்படுவதால் நரஸூஸ் டீ நறுமண முள்ளதாக இருக்கிறது. நரஸூஸ் காப்பிக் கோ சூரிய வெப்பத்தால் நன்கு பழுத்த முதல்தரக் கொட்டைகளே பொறுக்கப்படுகின்றன, பிறகு நன்கு வறுக்கப்பட்டு நீங்கள் விரும்பும் ருசியுள்ள இனிய காப்பிக்கான தூளாக செய்யப்படுகிறது.

நரஸூஸ் டீ காபி

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி, ஹெட் ஆபீஸ்: சேலம்.

MNK-9

LOTUS BRAND SLATE S

பூராவும் இந்திய தயாரிப்பு. உயர்ந்த ரகம், அழகிய வேலைப்பாடு. ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸோல் டிஸ்டிரிபியூட்டராக இருக்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

THE PREMIER TRADERS,
11-12, First Line Beach,
G. T., MADRAS.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

டானிகாப்(F) ... மகரத்வஜம்

(விபரீதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

"போன மச்சான்"

★

சிறு கதை -: "நியாயவாதி"

சிறு வயதிலிருந்து நானும் ரத்தினவேலும் நண்பர்கள். அவன் வீட்டுக்கு நான் தினம் ஒரு தடவையாவது போகாவிட்டால் எனக்கு நிம்மதியிராது. அவனுக்கும் திருப்தியிராது. அவனது குடும்பத்தாரில் நானும் ஒருவனாக கருதப்பட்டதில் யாதொரு வியப்புமில்லை.

ரத்தினவேலுக்கு ஸர்க்கார் உத்தியோகம்; அவனது குடும்பச் செலவுக்குப் போதுமானதாய் அவனது வருவாய் இருந்தது. அவனும் அவனது மனைவியும் அவனது தாய் தங்கம்மாளும் யாதொரு கவலையும் கஷ்டமுமின்றி வாழ்ந்து வந்தனர். ஈஸ்வரன் அவர்களுக்கு எவ்விதமான குறையையும் வைக்கவில்லை.

வீட்டில் தங்கம்மாள் வைத்ததே சட்டம், அவளது பேச்சுக்கு எதிர் பேச்சில்லை. ரத்னவேலு குழந்தைப் பருவத்திலிருந்தே தாயின் சொல்லை மீறக்கூடாது என்பதை வேத வாக்காக மதித்து ஒழுகும் இயல்பினன். அவன் மனைவி சற்குணவதி: மாமியாரை தெய்வமென்று போற்றுபவள். ஆதலால் குடும்ப விஷயம் எதுவும் தங்கம்மாளது அபிப்பிராயத்தின் படி நடைபெறுமேயன்றி வேறில்லை.

தங்கமாளுக்கு வயது எழுபதுக்கு மேல் இருக்கும். அவள் புருஷன் இறந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன. சிறு வயதிலேயே ரத்தினவேலு தனது தகப்பனை இழந்து விட்டதால் குடும்பத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அவன் மீது விழுந்தது. சாமர்த்தியசாலியான அவள் சொத்துக்களை சரிவர கவனித்து வந்தாள். தனது மகனுக்கு வயது வரும் வரையில் அவளே எல்லாவற்றையும் நிர்வகித்து வந்தாள். அதன் பின்னும் அவளது நாட்டாண்மை, இருந்து வந்தது.

> ஒரு பெண்ணை மணக்க இருவர் போட்டியிட்டனர். ராஜவேலும் கந்தசாமியும் தங்கத்தை எப்படியாவது விவாகம் புரிந்து கொள்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தனர். இருவருள் எவருக்கு அவளை மணம் புரிவிப்பது? தங்கத்தின் தகப்பனார் ஒரு வழி காட்டினார். ராஜவேலு இந்த சமயத்தில் தமது நண்பனுக்கு பாதகத்தைப் புரியும் ஒரு காரியத்தை செய்து விட்டார். நியாயத்திற்கு விரோதமாய் நடந்து கொண்டார். அது எப்படி? கடைசியில் அவரது ஆத்மா தான் சாந்தியடைந்ததா?

கதைகளையும் கட்டுரைகளையும் எழுதும் எனக்கு தங்கம்மாளுடன் சம்பாஷிப்பதிலும் அவளது பழைய நினைவுகளை அவள் கூறுவதைக் கேட்பதிலும் விருப்பம் அதிகம். அவற்றைத் தொகுத்து ஒரு நீண்ட ஜீவிய சரித்திரத்தை எழுதிவிடலாம். பல ரஸமான சம்பவங்களையும் கட்டங்களையும் கொண்ட அது படிப்பதற்கு தகுதியாகவே இருக்கும்.

தங்கம்மாளுக்கு தலை மயிர் நரைத்து விட்டது. முதுகில் கூனலும் ஏற்பட்டுவிட்டது; பற்கள் விழுந்துவிட்டன. எனினும் அவளது கண்களின் கூர்மை மட்டும் மழுங்கவில்லை. அவளது புத்தியின் வன்மையும் தளரவில்லை.

என்னிடம் அவளுக்கு ப்ரீதி அதிகம். நான் அவளது கதைகளைக் கேட்பதில் ஊக்கம் காட்டியதில் அவளுக்குப் பரம திருப்தி. என்னைக் காணும் பொழுது அவள் எந்த வேலையில் இருப்பினும் அதை விட்டுவிட்டு என்னுடன் பேச வந்து விடுவாள்.

தனது பால்யத்தைப்பற்றியும் யௌவனத்தில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியும் அவள் ஆரம்பித்துவிட்டால் அவற்றைப்பற்றி மணிக்கணக்காய் விவரித்து கூறுவாள். நேரம் போவது அவளுக்குத் தெரியாது. எனக்கும் அதைப்பற்றி கவனம் இராது.

சிறு வயதில் அவள் அழகியாகவே இருந்திருக்க வேண்டும். அவளை மணப்பதைப்பற்றி அவளது கணவனுக்கும் அவனது பெரிய தந்தையின் குமாரனை கந்தசாமிக்கும் தகராறு ஏற்பட்டதாம். அது ஒரு விசித்திரமான கதை என்பதில் ஐயமில்லை.

ரத்தினவேலின் தகப்பன் ராஜவேலும் தங்கம்மாளுக்கு மாலையிடப் போட்டியிட்ட கந்தசாமியும் ஸம வயதினர். இருவரும் விளையாட்டுத் தோழர்கள். விளையாட்டிலும் சரி, படிப்பிலும் சரி, அவர்களை ஒன்றாகவே பார்க்கலாம். அவர்களிடையே எவ்விதமான தகராறும் நேர்ந்தது கிடையாது.

அவ்விருவருக்கும் பதினெட்டு பிராயம் நிரம்பியபொழுது தங்கம்மாளுக்கு வயது பதினான்கு இருக்கும். அவள் தகப்பன் அவர்களுக்கு மாமன் முறையாக வேண்டும்: ஆதலால் அவளது வீட்டுக்குள் தாராளமாகப், புழங்குவதற்கு அவர்களுக்கு வசதி இருந்தது.

ஒரு நாள் ராஜவேலு கந்தசாமியிடம், "நான் தங்கத்தை கலியாணம் செய்துகொள்ளலாம் என்றிருக்கிறேன்" என்றான். அதைக் கேட்ட கந்தசாமி "அந்த எண்ணத்தை நீ விட்டுவிடு. தங்கம் என்னுடைய மனைவி என்று நான் ஏற்கனவே நிச்சயித்துவிட்டேன்" என்றான்.

இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. வார்த்தைகள் தடித்தன. வாய்ச் சண்டை கைச் சண்டையாக மாறியது.

நல்ல வேளையாய் அச்சமயம் தங்கத்தின் தந்தை அவ்வழியே செல்லும்படி நேரிட்டது. அவன் அவ்விருவரையும் விலக்காவிடில் இருவருக்கும் ரத்த காயங்கள் ஏற்பட்டிருந்திருக்கும்.

அவர்களது சச்சரவின் காரணத்தை உணர்ந்து கொண்ட தங்கத்தின் தந்தை "நீங்கள் இப்படி சண்டையிடுவதால் அனுகூலம் ஏற்படாது. நானே என் பெண்ணை உங்களில் ஒருவனுக்கு கட்டிக்கொடுப்பதாக எண்ணியிருந்தேன். நீங்கள் இருவரும் அவளை மணக்கத் தகுதியானவர்கள் தான். யாரை தேர்ந்தெடுப்பது என்பது எனக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி உங்களுக்கும் அபிப்பிராய பேதம் இருக்கிறது. ஆதலால் இதை தெய்வத்தின் உத்தரவுக்கு விட்டுவிடுவோம்" என்றான்.

பதினொரு மணிக்கு

இப்பொழுது மணி பதினொன்று. காலை வேலைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்தமினிது" என்றார் ஒரு கவி, ஆனால் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 157



புது டில்லியில் பண்டித நேரு

பண்டித ஜவஹர்லால் நேரு தமது புத்ரி ஸ்ரீமதி இந்திரா காந்தியுடன் டில்லி வந்து சேர்ந்தபோது எடுத்த படம்,
—(என். என். பி. எஸ்)

மறுநாள் அவ்வூர் அம்பிகை ஸன்னிதியில் புஷ்பம் கட்டி வைப்பதென்றும் சிகப்புப் புஷ்பம் எடுக்கப் பட்டால் தங்கம் கந்தசாமியை மணக்கவேண்டும் என்றும், வெள்ளை புஷ்பம் எடுக்கப்பட்டால் அவளை ராஜவேலுவே மாலையிட வேண்டும் என்றும் நிஷ்கர்ஷை செய்யப் பட்டது.

குறித்த நேரத்தில் அம்மன் சன்னிதியில் தங்கத்தின் தகப்பனும் அவளை மணக்கப் போட்டியிட்ட இருஇளைஞர்களும் அவர்களது உறவினர் சிலரும் நின்றனர். ஏற்கனவே துணி முடிச்சுகளில் மறைக்கப்பட்ட இரு புஷ்பங்கள் அம்பிகை பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அதில் ஒன்றை குருக்கள் எடுத்தார். முடிச்சைப் பிரித்துப் பார்த்தபொழுது வெள்ளை புஷ்பம் காணப்பட்டது. அம்பிகையின் ஆக்ஞை தங்கம் ராஜவேலுக்கு மனைவியாக வேண்டும் என்பதே என்பது தெளிவு படுத்தப்பட்டது.

மறுநாள் கந்தசாமி ஊரை விட்டுக் கிளம்பினான். அவன் மீண்டும் ஊர் திரும்பவில்லை. அவன் கப்பலேறி பர்மாவுக்குப் போய்விட்டான் என்று ஊரிலுள்ளவர் பேசிக் கொண்டனர்.

தங்கம் ராஜவேலுக்கு மனைவியானாள். இந்தக் கதையை தங்கம்மாள் அடிக்கடி கூறுவதுடன் அதன் பின் நடந்ததையும் அவள் விளக்குவாள். அதையும் இங்கே குறிப்பிடுவது அவசியமாய் இருக்கிறது.

ராஜவேலு மரணாவஸ்தையில் இருந்தபொழுது தன் மனைவியை அழைத்து "தங்கம், நான் சீக்கிரத்தில் இந்த வாழ்வைத் துறந்து விடுவேன். உன் பொருட்டு என்னால், எனது பிராண சிநேகிதனான கந்தசாமிக்கு இழைக்கப்பட்ட பாதகச்செயலை உன்னிடம் சொல்லாவிடில் எனக்கு மனச்சாந்தி ஏற்படாது. புஷ்பங்கள் கட்டின குருக்களிடம் நான் முன்னரே சென்று ரகசியமாக அவர் கையில் பத்து ரூபாய் நோட்டை வைத்து இரண்டு புஷ்பங்களும் வெள்ளை புஷ்பங்களாகவே இருக்கட்டும். இது பரம ரகசியமாய் இருக்க வேண்டும்?" என்று கேட்டுக் கொண்டேன். அப்படியே அவர் செய்தார். விஷயம் இது தான். இந்த மகாபாதகத்துக்காக நான் வருந்தவில்லை. எனினும் இந்த ரகசியத்தை உன்னிடம் மறைக்க எனக்கு விருப்பமில்லை. இந்த ஜன்மத்தில் நான் கந்தசாமியை பார்க்கப் போவதில்லை. நீ அவனை ஒருக்கால் சந்திக்க நேருமாயின் இந்த விஷயத்தை தெரிவித்து அவனுடைய மன்னிப்பை நான் கோரியதாகக் கூறு" என்றான். சற்று நேரத்துக்குப் பின் ராஜவேலின் உயிர் அவனது உடலை விட்டு பிரிந்து விட்டது.

இந்தக் கதையை தங்கம்மாள் கூறிவிட்டு பெருமூச்செறிவாள். ஐம்பது வருஷங்களுக்கு முன் நடைபெற்ற இந்த சம்பவம் அவளது பால்ய இன்பக்கனவுகளையும்நினைவுகளையும் அவளது மனத்திரையில் தோற்றுவித்தன. கந்தசாமி பர்மாவுக்குச் செல்லாதிருந்தால்—அவன், அவளை மணந்திருந்தால்—அவளது வாழ்க்கைப் பாதை எத்திசையில் சென்றிருக்கும்? என்ற சிந்தனையில் அவள் மனம் ஆழ்ந்துவிட்டால் அவளுக்கு வேறு எதிலும் கவனம் செல்லாது.

* * * *

அன்று நான் ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருந்தேன். அச்சமயம் ரத்னவேலு அவசர அவசரமாய் பிரவேசித்தான். "உடனே என்னுடன் புறப்படு. உனக்கு அதிசயத்தையளிக்கும் காட்சி நடைபெறப்போகிறது. ரயில்வே ஸ்டேஷனுக்கு என்னுடன் நீ வரவேண்டும்" என்றான்.

"யார் வருகிறார்கள்?" என்று நான் வினவினேன். "பர்மாவிலிருந்து கந்தசாமி வருகிறார். இத்தனை வருஷங்களுக்குப் பின் தாய் நாட்டுக்கு திரும்பும் அவசியம் அவருக்கு ஏற்பட்டு விட்டது. ஜப்பான் போரில் இறங்கியதால் அவர் பர்மாவை விட்டு மூட்டை முடிச்சுகளுடன் கிளம்பும் நிர்ப்பந்தம் உண்டாகி விட்டது. என்னைப் பற்றி விசாரித்துக் கொண்டு எனக்கு கடிதம் எழுதி விட்டார்" என்றான் ரத்தினவேலு.

"உன் தாய்க்கு இது தெரியுமா?"

"தெரியாமல் என்ன? அவளுக்கு புது ஊக்கம் ஏற்பட்டு விட்டது. அடிக்கடி அவள் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுகிறாள். தனது முகத்தை துடைத்துக் கொள்ளுகிறாள். உடைகளை சீர்திருத்திக் கொள்ளுகிறாள். இது எனக்கு வேடிக்கையாய் தோன்றுகிறது" என்றான் ரத்தினவேலு.

இருவரும் புறப்பட்டோம். ரயில்வே ஸ்டேஷனை நாங்கள் அடைந்த அதே நிமிஷம் ரயிலும் வந்து சேர்ந்தது. அதிலிருந்து ஒரு கிழவர் இறங்கினார். அவரது வழுக்கைத் தலையும் குழி விழுந்த கன்னங்களும் தள்ளாடிய நடையும், அவரே நாங்கள் நாடிய மனிதர் என்று கூறின. ரத்தினவேலு அவரிடம் சென்று முகமன் கூறினான்.

"நீ தான் தங்கத்தின் மகனா? அவளது முக ஜாடை உன்னிடம் இருக்கிறது" என்றார் கிழவர்.

அவரது சாமான்களை ஒரு வண்டியில் ஏற்றிவிட்டு அவரை அழைத்துக் கொண்டு நாங்கள் வீட்டுக்குச் சென்றோம்.

அவர் ஏகாங்கியாகவே வாழ்க்கையை நடத்தினாராம். தனது சொத்து சுதந்திரங்களை ரத்தினவேலிடம் ஒப்புவித்து விட்டு தானும் அவனுடன் தனது அந்தியகாலத்தை கழிக்கவிரும்புவதாக அவர் கூறிவிட்டு "தங்கம், சௌக்கியமாய் இருக்கிறாளா?" என்றார். ரத்தினவேலு தலையை ஆட்டினான்.

கந்தசாமிக்கு அத்புதமான வரவேற்பு காத்துக் கொண்டிருந்தது. ஐம்பது வருஷங்களுக்குப் பின் திரும்பிய காதலனை காதலி எப்படி சந்திப்பாள் என்பதைப் பற்றி நான் அடிக்கடி சிந்தித்ததுண்டு. அந்தக் காக்ஷியை நான் அன்று கண்டேன்!

விசு பலகையில் உட்கார்ந்திருந்த கிழவி எழுந்து நின்றாள். நாணிக் கோணிய அவள் எழுபது வயது கிழவி யல்ல. மனோபாவத்திலும் மனவெழுச்சியிலும் பால்ய நினைவுகளால் கவரப்பட்ட அவள் முகத்தில் ஒரு பிரகாசம் தென்பட்டது. அவளது பொக்கை வாயில் ஒரு புன்னகை தவிழ்ந்தது.

கிழவரும் அவளைப் பார்த்து தழு தழுத்த குரலில் "தங்கம் சௌக்கியமா?" என்றார்.

"சௌக்கியம் தான். உங்களை பார்க்கத்தான் இவ்வளவு வருஷங்கள் காத்திருந்தேன்" என்றாள் கிழவி.

போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே!

சில தினங்களுக்கு பின் நான் என் நண்பன் வீட்டுக்குச் சென்றேன். இறந்து போனவர் கந்தசாமிக்கு இழைத்த பாதகத்தை அவர் மன்னித்து விட்டார் என்பதை அறிந்தேன்.

இரு நாற்காலிகளில் கிழவரும் கிழவியும் அமர்ந்திருந்தார்கள். கிழவர் கிழவிக்கு பர்மாவில் தனக்கு நேர்ந்த அனுபவங்களை விவரித்துக் கொண்டிருந்தார். அதை ஆவலுடன் கிழவி கேட்டுக் கொண்டிருந்தாள். நான் வந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.

Please apply at once to:—

S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும், ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப் படும், விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
நவரத்னலாகெட்	0	12
சாணக்கி சாஸ்திரம்	0	8
ஜெய காந்தன்	0	8
அசலாம்பிகை	2	4
தீனதயாளு	0	10
ஜகஜ்ஜாலன	1	10
காத லோசனம்	1	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி
சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன்; 54, பந்தர்தெரு, மதராஸ்.

ராஜா ஹரதயால்

ப்ரேம் சந்த்

எழுதியது

புந்தேல் கண்டத்தில் ஓரச் என்பது பழய ராஜ்யம். அதன் அரசன் புந்தேல் வம்சத்தைச் சேர்ந்தவன். அவ்வூர் வாசிகள் மலைச்சாரலில் பயிர்த் தொழில் செய்தும், மற்றும் சில வேலைகள் செய்தும் வாழ்க்கை நடத்திவந்தனர்.

ஒரு சமயம் அவ்வூரை ஜுஹார்ஸிங் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் நற்குணமுடையவன். மேலும் போரில் நல்ல தேர்ச்சி பெற்றவன். ஷாஜஹான் அச்சமயம் டில்லிக்கு அதிபதியாக இருந்தான். சான் ஜஹான் லோடி இந்தியாவில் பல இடங்களை ஜெயித்துக் கொண்டு ஓரச்சின்மீதும் படையெடுத்தான். ஜுஹார் ஸிங் அவனை எதிர்த்தான். லோடின் ஜுஹார் ஸிங்குக்குப் பணிந்து தெற்கு சாம்ராஜ்யத்தின் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான். அன்று ஓரச்சில் பெருத்த குதூகலமாக இருந்தது. பலவித பொருள்களை அரசனுக்குப் பரிசாகக் குடி ஜனங்கள் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஜுஹார் ஸிங்குக்கு அன்று பெரிய பெரிய வேலைகளைச் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது. வெளியூர் செல்ல ஏற்பாடு ஆயிற்று.

அப்பொழுது ராஜா ஜுஹார் ஸிங் தன் சகோதரன் ஹரதயாலைக் கூப்பிட்டு "அப்பா, நான் வெளியூருக்குப் போகிறேன். இந்த ராஜ்யத்தின் பொறுப்பு நான் திரும்பிவருகிற வரை உன் மீது தான்! நீயும் அதன் மீது அன்பாகயிருக்க வேண்டும். நியாயமாக ராஜ்யம் நடத்துவதே உன் கடமை. அப்படி நடத்துவாயானால் எப்படிப் பட்ட பல முள்ள அரசனும் உன்னை எதிர்க்க முடியாது. நியாயமாக நடந்துகொள்ளுவாயாகில் குடி ஜனங்களும் உன்னிடம் உண்மையாக நடந்து கொள்ளுவார்கள். உன் வேலை எப்பொழுதும் நியாயமாக ராஜ்யம் நடத்துவதும், குடி ஜனங்களுக்கு நியாயம் எது என்று எடுத்துக் காண்பிப்பதும் தான்! நீ எல்லாம் தெரிந்தவன் என்றே எண்ணுகிறேன்" என்று சொல்லி அவன் தன் முடியை எடுத்து ஹரதயான் சிரஸின் மீது வைத்தான். ஹரதயால் அழுதவண்ணம் அரசனின் காலில் வீழ்ந்து நமஸ்கரித்தான்.

ஜுஹார் ஸிங் வெளியூர் பிரயாணமாவதற்கு முன் அவன் மனைவியைப் பார்க்க அவளுடைய அந்தப்புரத்திற்குப் போனான். அவள் கதவருகில் நின்று அழுதுகொண்டிருந்தாள். அரசனைப் பார்த்ததும் அவள் அவன் காலடியில் விழுந்து அழலானாள். அரசன் அவளைத் தூக்கி மார்புடன் அணைத்துக் கொண்டு "அன்பே, இப்பொழுது வருத்தப்படும்படியான சமயமில்லை. புந்தேல் வம்சத்தினர் இம்மாதிரி வேளைகளில் அழவே மாட்டார்கள், கடவுளின் அருளால் சிறிது காலத்திலேயே திரும்பவும் சந்திப்போம். என் மீது இதே போல் அன்பாயிரு. நான் ராஜ்ய பாரத்தை ஹரதயாலின்மீது சுமத்தியிருக்கிறேன். அவன் இன்னும் சிறுவன், உலக அநுபமில்லாதவன். நீ உன் புத்தியால் அவனுக்கு உதவிசெய்து கொண்டிரு" என்றான்.

ராணி மௌனமானாள். அவள் மனதினுள்ளேயே "புந்தேல் வம்சத்தினர் இம்மாதிரி சமயங்களில் அழுவதேயில்லை என்று சொன்னாரே. அப்படி அவர்கள் இருந்தால் அவர்களுக்கு அன்பு என்பதே இருக்காது' என்று நினைத்தாள். அவள் மனதைக் கல்லாக்கிக்கொண்டு வெளிவரும் கண்ணீரைத் தடுத்தாள். சிறிது சிரிக்கவும் சிரித்தாள். ஆனால் அது உண்மையான புன்னகையா?—இருண்ட மேகத்தில் சட்டென்று தோன்றிய மின்னலைப் போல் சிறிது வெளிச்சத்தைக் காட்டி மேலும் எப்படி இருள் சூழ்கிறதோ, அது போல் அந்தச் சிரிப்பு அவளது வருத்தத்தை மேலும் அதிகமாக்கியது.

ஜுஹார் ஸிங் வெளியூர் சென்ற பிறகு ஹரதயால் ராஜ்யம் நடத்தலானான். சிறிது நாட்களிலேயே நியாயத்தைக் குடி ஜனங்களுக்கு உபதேஸித்து அவர்களை மயக்கி விட்டான். குடி ஜனங்கள் ஜுஹார்ஸிங்கை அடியோடு மறந்து விட்டார்கள். ஜுஹார்ஸிங்கிற்கு நண்பர்களும் விரோதிகளுமிருந்தார்கள். ஆனால் ஹரதயாலுக்கு நண்பர்களைத் தவிர விரோதிகளே கிடையாது. யார் அவனை எதிர்க்கிறார்களோ அவர் அவனுடைய இரண்டு பேச்சிலேயே அடிமைகளாகி விடுவார்கள். அதுவரை ஓரச்சில் ராஜ்யம் நடத்தியவர்கள் யாருமே கிடையாது. இரவு பகலாக எந்த நேரமும் குடிகளின் குறைகளை விசாரிப்பதற்காக தர்பார் கூடியேயிருக்கும். உதாரண குணம் நியாயத்தை எடுத்துக் கூறும் சக்தி: பாண்டித்தியம்-எல்லாம் அவனிடம் பூர்ணமாயிருந்தன. அவன் போரில் வீரனாக இருந்தது தான் எல்லாவற்றிலும் மேலாகவிருந்தது. அவனுடைய உதார குணம் எல்லையைக் கடந்திருந்தது. வேறு அரசர்கள் பொருளுக்கும் ராஜ்யத்திற்கும் அரசனாக ஏற்படுவதே மிகவும் கஷ்டமாகவிருந்தது—ஆனால் ஹரதயால் அவன் குணத்தால் குடி ஜனங்களின் மனதிற்கும் ராஜாவானான்! அம்மாதிரியாக ஒரு வருஷம் கடந்தது. வெளியூர் சென்ற ஜுஹார் ஸிங் சாமர்த்தியத்தால் நல்ல கீர்த்தியை அடைந்தான். ஓரச்சில் ஹர்தௌல் குணத்தால் குடி ஜனங்களின் பூரண ஆதரவைப் பெற்றான்.

2

மார்கழி மாதம், ஏரி குளம் முதலியன நிறைந்திருந்தன. கதிர்கள் முற்றித் தலை சாய்ந்துகொண்டிருந்தன. மழையின் பயனால் எங்கும் பயிர் அதிகமாக விளைந்திருந்தன. கடவுள் கிராமத்தில் பொன்னை மறைத்து வைத்திருந்தார். கிராமத்தில் உள்ளவர்கள் ஆநந்த மிகுதியால் கூத்தாடினார்கள். மேலும் சந்தோஷமாகக் கதிர்களை அறுவடை செய்துகொண்டிருந்தார்கள். அந்த நாளில் டில்லியிலிருந்து காதிர் கான் பெரிய பெரிய பலிஷ்டர்களுடன் ஓரச்சிற்கு வந்திருந்தான். டில்லியிலிருந்து ஓரச்சின் எல்லை வரை அவனை யாரும் கத்தி விளையாட்டில் ஜயித்ததே கிடையாது. எதிர்த்தவர்கள் எல்லோரும் யமலோகத்திற்குச் சென்றார்கள். அவன் சன்மானத்திற்காகச் சண்டை செய்வதில்லை. டில்லி நவாப்புக்கு நாடு பிடிக்கும் ஆசை எப்படியிருந்ததோ, அதுபோல் அவர்களுக்கும் மனிதர்களை வதைக்கும் ஆசை இருந்தது, சரியாக ஹோலிப்பண்டிகை தினம். காதிர் கான் சகாக்களுடன் ஓரச்சிற்கு வந்தான்.

"கடவுளால் அனுப்பப்பட்ட 'புலி' யாருக்குத் தைரியமிருக்கிறதோ அவர்கள் என்னுடன் கத்தி விளையாட்டு விளையாடலாம்" என்று அறை கூவினார்கள்.

ஓரச்சில் உள்ள வீரர்கள் கோபமடைந்தனர். கிராமத்தில் பயிர் அறுவடை செய்யும்போது பாடும் பாட்டிற்குப் பதிலாக யுத்த சமயத்தில் ஒலிக்கும் டங்கா டமாரம் முதலியவை சப்தித்தன. ஹரதயாலின் சகாக்கள் ஓரச்சின் வீரர்கள் எல்லோரும் ஒன்று கூடினார்கள். காதிர் கானும் ஓரச்சின் வீரர்களும் ஒருவருக்குச் சமமான மற்றவரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருந்தனர்.

மறு நாள் கோட்டை வெளியில் ஜனங்கள் திரள் திரளாகக் கூடிவிட்டனர். தலையில் முண்டாசு, நெற்றியில் சந்தண திலகம், கண்களில் வீரத்தின் ஒளி, இடுப்பில் உடைவாள் இவ்வளவு சிரப்புடன் வீரர்கள் வந்திருந்தனர். அவர்களுடன் நரைத்த தலை, பெருத்த தாடி, வாலிபர்களையொத்த திடசரீரம் கொண்ட கிழவர்களும் வந்திருந்தனர். ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வீரப்ரதாபமான பேச்சே வெளிவந்தது. "இன்று ஓரச்சின் கௌருவத்தை நிலை நாட்டுகிறோமா இல்லையா—பாருங்கள்" என்று வாலிபர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். "ஓரச்சில் உள்ளவர்கள் என்றும் தோற்றதே கிடையாது. இனிமேலும் தோற்க மாட்டார்கள்" என்று கிழவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பேச்சுகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஹரதயால் கம்பீரபாவத்துடன் "புந்தேல் கண்டத்தவருடைய கௌரவம் இருக்கட்டும் இல்லாமல் போகட்டும். ஆனால் எதிரியை சும்மா விடக்கூடாது. வேற்றவர்கள் நம்மைப் பார்த்து கத்தியைக் கொண்டுதான் எங்களை ஜயித்தார்கள் என்று சொல்லக் கூடாது—வித்தையைக் காண்பிக்க வேண்டும், அம்மாதிரி செய்யாதவன் யாரா

உண்மையான வீரன் தன் திறமையைக் காண்பித்துவிட்டான். விஷம் மிகவும் கடுமையானதாய் இருந்தது. அது தொண்டையிலிருந்து கீழே இறங்கியதும் முகத்தில் மாணத்தின் குறி உதயமாகியது. ஹாதயால் இரு கரங்களையும் குவித்து தன் சகோதானுன ஜுஹார் ஸிங்குக்கு வந்தனம் செய்தான். மற்றவன் முகத்தில் வெற்றிக்குறி தென்பட்டது—இரு சகோதார்களைப் பற்றிய கதை—அசூயையும் பொறமையும் செய்யும் கேட்டை விளக்கும் கற்பனை.

யிருந்தாலும் நம் குலத்திற்கே விரோதிகளாவான்" என்றான்.

சூரியனும் உதயமானான். திடீரென்று நகரா சப்தம் ஜனங்களின் காதுகளைத் துளைத்தது. 'காலதேவனும்' 'காதிர் கானும்' மைதானத்தில் குறிப்பிட்ட விடத்தில் கத்தி விளையாட்டு விளையாட இறங்கினார்கள். இருவரும் கத்தியை எடுத்துக் கொண்டார்கள். கத்திபட்ட இடங்களிலிருந்து ரத்தம் ஆறு போல் பெருகலாயிற்று. மூன்று மணி நேரம் கழிந்தும் சண்டை நடந்து கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கானவர் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டத்தினால் எங்கும் இருள் சூழ்ந்துகொண்டிருந்தது. காலதேவன் காதிர்கானைக் கத்தியால் குத்தும் சமயமும், அது தவறும் சமயமும் ஜனங்களுடைய தலை பல கோணலாக ஆடும். ஆனால் வாயிலிருந்து ஒரு சொல் கூடக் கிளம்பவில்லை, ஜனங்கள் தங்கள் தங்கள் மனதிலுள்ள ஆர்வத்தை வெளியிடுவது மிகக் கடினமாக யிருந்தது. திடீரென காதிர் கான் அல்லாஹு அக்பர் என்று கூவினான். மேகங்கள் மோதின. அதே சமயம் காலதேவனின் தலையில் இடி விழுந்தது. கத்தி பாய்ந்தது.

காலதேவன் கீழே விழுந்ததும், புந்தேல் கண்டத்தவர்களுக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஒவ்வொருவன் முகத்திலும் கோபக்குறி தென்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கத்தி விளையாட்டு நடந்த இடத்திற்கு உணர்ச்சி வேகம் கொண்டு ஓடினார்கள். சட்டென்று "ஜாக்கிரதை! இப்பொழுது யாரும் அங்கு போகக் கூடாது" என்றான் ஹரதயால். அவர்களை மரித்துவிட்டு விளையாட்டு நடந்த இடத்தருகில் போனான். காலதேவனைப் பார்த்ததும் அவன் கண்களில் நீர் பெருகிற்று. புந்தேல் கண்டத்தின் "சிம்மம்" தரையில் விழுந்து துடித்துக்கொண்டிருந்தது! காலதேவனைப்போல் அவன் கத்தியும் இரு துண்டாகக் கிடந்தது.

அன்று பகல் கழிந்து இரவு வந்தது. ஆனால் புந்தேல் கண்டத்தவர்களுக்கு தூக்கம் ஏது? ஜனங்கள் இரவைத் தூக்கமின்றியே கழித்தார்கள். எப்படி துக்கத்தில் அடிபட்டவர் ஊண் உரக்கமின்றி காலத்தைக் கடத்துகிறார்களோ அது போல் புந்தேல் கண்டத்தவரும் இரவைக் கழிக்கலானார்கள். எல்லோரும் சூரியன் எப்பொழுது எழுவான் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

அருணோதயமாயிற்று. மூன்று லக்ஷம் பேர்களுக்கு மேல் மைதானத்தில் கூடினர். பாலதேவன் சிங்கத்தைப் போல் கர்ஜித்துக்கொண்டு விளையாட்டு மைதானத்திற்குள் நுழைந்தான். ஜனங்களுடைய மனதில் கலவரமேற்பட்டது. காலதேவன் விளையாட்டு மைதானத்திற்கு வரும்பொழுதிருந்த உணர்ச்சி ஜனங்களிடையே அன்று இல்லை. ஜனங்களின் மனதில சந்தோஷத்திற்குப் பதிலாக பயம் குடிகொண்டது. காதிர் கான் கத்தியை வீசும்பொழுது ஜனங்களின் கண்கள் மின்னைப் போல்ஜொலிக்கும். காலதேவனை விடபாலதேவன் சாமர்த்தியசாலி என்பதில் சந்தேகமே இல்லை. பல முறை காதிர்கானை ஆட்டி வைத்துவிட்டான். ஆனால் காதிர் கான் அதற்கெல்லாம் சளைத்துப் போகவில்லை. சரியாக மூன்று மணிநேரம் இரு வீரர்களும் சளைக்காமல் சண்டை செய்தார்கள். திடீரென்று முதல் நாளைப் போல் சப்தமொன்று கிளம்பிற்று. பாலதேவனின் கத்தி இரு துண்டாகக் கீழே விழுந்தது. ஹரதயால் அருகில் நின்றிருந்தான். அவன் சட்டென்று தன் கத்தியை பாலதேவனிடம் வீசி எறிந்தான். பாலதேவன் கத்தியை எடுக்கக் குனிந்தான், சட்டென்று காதிர் கானுடைய கத்தி அவன் கழுத்தில் விழுந்தது—உயிர் போய்விடவில்லை. ஆனால் அதைக் கண்டு ஜனங்கள் மேலும் ஆத்திரமடைந்தார்கள்.

பாலதேவன் தோல்வி அடைந்ததைக் கண்டு ஜனங்கள் மௌனமாக வீடு திரும்பினர். பாலதேவன் அவ்வளவு அடிபட்டும் மேலும் சண்டை செய்யச் சித்தமாயிருந்தான். ஆனால் ஹரதயால் "பாலதேவ், உன் கத்தி கீழே விழுந்ததுமே நீ தோல்வி அடைந்து விட்டாய். நாம் காதிர்கானுடைய ஸ்தானத்தில் இருந்திருந்தால், எதிரியின் கத்தி கீழே விழுந்ததும் அவன்மேல் கத்தியை வீசமாட்டோம்; ஆனால் காதிர் கானிடம் இந்த குணம் ஏது? முரட்டுத்தனமுள்ள எதிரியிடம் 'சண்டை செய்யும்போது, சாந்த குணத்தை தன் இடத்திலிருந்து பிரித்து விடவேண்டும். நாமும் கத்தி விளையாட்டில் தேர்ச்சி உள்ளவர்கள் என்பதை அவனுக்குக் காண்பித்து விட்டோம். நம் விளையாட்டில் எவ்வளவு வித்தையிருக்கிறதோ அது போல் நம் உணர்ச்சியுமிருக்கிறது என்பதையும் நிரூபித்துவிட்டோம்" என்று சமாதானம் சொல்லி விட்டு அரண்மனைக்குப்போய் விட்டான்.

"அப்பா, இன்று கத்திச் சண்டையின் முடிவு என்னவாயிற்று" என்று ராணி குலினு கேட்டாள்.

ஹரதயால் தலைகுனிந்த வண்ணம் "நேற்றைய கதி தான்!" என்றான்.

"பால தேவனும் உயிர் துறந்தானா?"

"இல்லை. ஆனால் தோற்று விட்டான்."

"இனிமேல் என்ன செய்வது?"

"நான் அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். இதற்கு முன் புந்தேல் கண்டத்தவர் தோற்றதே கிடையாது. நம்மிடத்தில் பணமில்லையா? நாம் வீரத்தின் எதிரில் பணத்தை கேவல்மாக நினைக்கிறோம். இப்பொழுது எந்த நம் வீரத்தை வெளிக்குக்காட்டுவது? ஓரச் புந்தேல் கண்டத்தின் கௌரவம் இனிபோய்விடும்" என்றான் ஹரதயால்,

"இனி வேறு எதுவும் உபாயமில்லையா?"

"நம்மிடம் வேறு தீரமானவர்கள் இல்லை" இன்று கிராமம் பூராவும் வருத்தம் குடிகொண்டிருக்கிறது. பல வீடுகளில் அடுப்பே பற்ற வைக்கவில்லை. விளக்கும் ஏற்றவில்லை. நம் ஜாதியினுடையதும் தேசத்தினுடையதுமான கௌரவம் இன்று அந்நிய தசையை அடைந்திருக்கிறது. பாலதேவர் என் உபாத்தியாயர். அவர் தோல்வியுற்றபிறகு நான் இனி கத்தி விளையாட்டு நடக்குமிடத்திற்குப் போவதே வெட்ககரமானது. புந்தேல் கண்டத்தவர்களுடைய 'மானம்' போவதென்றால் அதனுடன் என் உயிரும் போகட்டும். காதிர் கான் வித்தையில் கெட்டிக்காரன்தான். ஆனால் பாலதேவர் அவனை விட எந்த விதத்திலும் தாழ்ந்தவரல்ல. அவரிடத்தில் மாத்திரம் சரியான கத்தியிருந்திருக்குமானால் அப்பொழுது தெரிந்திருக்கும் காதிர் கான் படும் கஷ்டம்! ஓரச்சில் ஒரே ஒரு கத்தி தான் காதிர்கானை எதிர்க்கக்கூடியது இருக்கிறது. அது என் அண்ணனின் கத்தி! ஓரச்சின் கௌரவத்தை நிலை நாட்ட விரும்பினால் தாங்கள் அந்தக் கத்தியை எனக்குக் கொடுங்கள். இந்த முறையே கடைசி யுத்தமாயிருக்கட்டும். அப்படி நானும் தோற்றுவிட்டால் ஓரச்சின் கௌரவம் கட்டாயம் மறைந்தே போய் விடும்" என்றான் ஹரதயால்.

கத்தியைக் கொடுப்பதா வேண்டாமா என்று ராணி யோசிக்கலானாள், கத்தியின் மேல் வேற்றவர் நிழல் கூடப் படக்கூடாது என்று ராஜன் போகும் சமயம் சொன்னது அவளுடைய நினைவுக்கு வந்தது. இம்மாதிரி சமயத்தில் அவருடைய கட்டளையை மீறுவதா? அதனால் கோபமடைவாரா? கோபிக்கமாட்டார். நான் மிகவும் கடுமையான வேளையில் தான் அதைக் கொடுத்தேன் என்பதைக் கேட்டு ஆனந்தமடைவார். புந்தேல் கண்டத்தில் அவரைப்போல் அன்பாக நடந்து கொள்பவர் யாரிருக்கிறார்? அவரை விட ஓரச்சின் கௌரவத்தை விரும்புவர் வேறு யார்" என்று பலவாறாக யோசித்து கடைசியாகக் கத்தியை எடுத்து ஹரதயாலிடம் கொடுத்து விட்டாள்.

பொழுது விடிந்ததும் ராஜா ஹரதயால் காதிர் கானுடன் சண்டை செய்யப் போகிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. ஜனங்களிடம் பயம் குடிகொண்டது. பைத்தியம் பிடித்தவர்களைப்போல் விளையாட்டு மைதானத்திற்கு ஓடினார்கள். நாம் உயிரோடிருக்கும் வரை ராஜா ஹரதயாலை சண்டை செய்ய விடக் கூடாது என்று சிலர் பேசிக்கொண்டார்கள். ஆனால் மைதானத்தருகில் சென்றதும் மின்னலைப் போல் கத்திகள் இரண்டும் உராய்வதைக் கண்டதும், அவர்கள் மனோ நிலை எப்படியிருந்திருக்கும் என்பதை கற்பனை, செய்து பார்ப்பது கூட மிகக் கடினம்! அந்தச் சமயம் எவ்வளவு தூரம் பரந்த வெளியாக இருந்ததோ அவ்விடமெல்லாம் ஜனங்களின் கூட்டமே தென்பட்டது. எல்லோருடைய பார்வையும் சண்டை நடக்குமிடத்திலேயே இருந்தது, எல்லோரும் ஹரதயால் ஜயிக்க வேண்டுமென்று கடவுளைத் துதித்தனர். காதிர் கானுடைய ஒவ்வொரு வீச்சிலும் அநேக ஹிருதயங்கள் பிளந்தன. ஹரதயாலுடைய வீச்சு ஜனங்களுக்கு ஆநந்தத்தை உண்டுபண்ணியது. மைதானத்தில் சண்டை செய்யும் வீரர்களிடையே ஜயம்—அபஜயம்! என்னும் இரண்டு பொருள்கள் இருந்தன. ஜனங்களின் மனதில் 'ஆசை-நிராசை' என்னும் இரண்டும் குடிகொண்டிருந்தன. எங்கோ ஒரு கடிகாரத்தில் ஒரு முறை டங் என்று மணி அடிக்கும் சப்தம் கேட்டது. அதே சமயம் ஹரதயாலின். கத்தி காதிர் கானுடைய தலைமீது பாய்ந்தது, அதைக் கண்டதும் ஜனங்கள் சந்தோஷ மிகுதியால் உன்மத்தராகிவிட்டனர். அவர்களுக்கு ஆநந்தம் பொறுக்க முடியவில்லை. கத்தினார்கள், குதித்தார்கள். ஆடினார்கள் பாடினார்கள். ஆயிரக்கணக்கானவர்களுடைய மனதில் ஆநந்த வெள்ளம் பெருக்கெடுத்தது. இடையில் இருந்த கத்தியை உறுவிக்கொண்டு சந்தோஷத்தால் ஒருவருக்கொருவர் விளையாடினார்கள். ஆனால் ஹரதயால் யுத்தகளத்தை விட்டு வந்ததும் ஜனங்கள் தங்கள் ஆநந்தத்தை அடக்கிக்கொண்டு அவனையே பார்த்தார்கள். சட்டென்று கத்திகள் எல்லாம் உரையில் போய் மறைந்தன. அப்பொழுதுதான் அவர்களுடைய நிலைமை அவர் அவர்களுக்குத் தெரிய வந்தது.

"வீண் ஆடம்பரமெதற்கு? இம்மாதிரியான பைத்தியக்காரத்தனமெதற்கு? இதைப் போல் வெற்றி புந்தேல் கண்டத்தவர்களுக்கு புதிதாக ஏற்பட்டதல்ல" என்று ஹரதயால் சொன்னதும் ஜனங்களின் மனம் குளிர்ந்தது.

அந்த வெற்றியால் ஹரதயாலுக்கு பெருமை அதிகமாகியது. நியாயமும், சாந்த குணமும் மேலும் அவனிடம் அதிகரித்தன. அவனை முதலிலேயே எல்லோரும் நேசித்தார்கள். அந்த ஜயத்திலிருந்து மேலும் அதிகமாக நேசித்தார்கள்.

3

தெற்கு திசையில் ஜுஹார் ஸிங் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். யுத்தத்தில் மாத்திரமில்லை-ராஜீயவிவகாரங்களிலும் நல்ல பெயர் பெற்றான். அவன் தன் திறமையால் தெற்கில் உள்ளவர்கள் போரில் நல்ல தேர்ச்சிபெறச் செய்தான். வருஷமுடிவில் நவாபின் உத்திரவுப்படி ஓரச்சுக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். ஓரச்சின் நினைவு அவன் மனதில் எப்பொழுதும் இருந்துகொண்டே வந்தது. 'ஆ ஓரச்! உன்னை எப்பொழுது பார்ப்பேன்?' என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

ஜுஹார் ஸிங் ஓரச்சின் காட்டிற்கு வந்து சேர்ந்தான், கூட வந்தவர்கள் வேறு திசைக்குச் சென்று விட்டார்கள். உச்சி வேளை. வெயில் கடுமையாயிருந்தது. அவன் குதிரையைவிட்டிறங்கி, மரத்தடியில் போய் உட்கார்ந்தான். அதிர்ஷ்டவசமாக அன்று வெற்றியின்

காரணமாக ஹரதயால் காட்டிற்கு வேட்டையாட வந்திருந்தான். ஆயிரக் கணக்கான புந்தேல் வம்சத்தினர் அவனை புடை சூழ்ந்திருந்தனர். அவன் ராஜா ஜுஹார் ஸிங் தனிமையாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். ஆனால் யாரோ வழிப்போக்கன் என்று முதலில் எண்ணினான். ஹரதயாலுடைய கண்கள் கூட ஏமாற்றமடைந்தன. அவன் குதிரை மீது சவாரி செய்த வண்ணம் ஜுஹார் ஸிங்கின் எதிரில்போய் 'நீ யார்' என்று கேட்க யத்தனித்தான். ஆனால் அதற்குள் இருவருடைய கண்களும் சந்தித்து விட்டன. அண்ணன் என்று தெரிந்ததும் சட்டென்று குதிரை மீதிருந்து குதித்து ஜுஹார் ஸிங் காலைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டான். ஜுஹார் ஸிங் எழுந்து அவனை மார்புடன் தழுவிக்கொண்டான். ஆனால் ஜுஹார் ஸிங்கின் மனதில் அச்சமயம் 'சகோதரன்' என்ற வாஞ்சை இல்லை. அதற்குப் பதில் ஜுஹார் ஸிங்கின் ஹிருதயத்தில் கர்வம்குடிகொண்டிருந்தது, அவனைக் கண்டவுடன் காலில் செருப்பில்லாமல் பல அடி தூரத்திலிருந்தே ஹரதயால் நடந்து வராததின் காரணம் தான் அப்படி அவன் மனதைக் கலக்கியது.

சூரியன் மலைவாயில் விழுந்ததும் சகோதரர்கள் இருவரும் ஊரை நோக்கி வந்தார்கள். ராஜா ஜுஹார் ஸிங் வருவது தெரிந்ததும் நகாரா சப்தம் ஒலித்தது. ஜனங்கள் அனைவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள். அன்று ராணி குலீனா தன் கையினாலேயே ராஜாவுக்காகச் சமையல் செய்தாள். சகோதரர்கள் இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். பொற்தாம்பளம் ராஜா ஜுஹார் ஸிங்கிற்கும், வெள்ளித்தாம்பளம் ஹரதயாலுக்காகவும் ஏற்பட்டிருந்தன. ராணியே இருவருக்கும் பரிமார நினைத்திருந்தாள். பல நாட்கள் சென்றதின் பயனாலோ, விதியின் வினையாலோ அவள் மறந்து தாம்பளத்தை மாற்றி வைத்து விட்டாள். ஹரதயால் அதற்கு எதுவும்சொல்லவில்லை. ஜுஹார் ஸிங் வெளியூர் சென்ற பிறகு ஹரதயால் பொற்தாம்பளத்தில் தான் போஜனம் புசிப்பான். ஆனால் ஜுஹார் ஸிங் சற்று கலவரமடைந்தான். வாயினால் எதுவும் சொல்ல வில்லை. ஆனால் முகம்மாத்திரம் சிவந்துவிட்டது, ராணியின் பக்கம் கோபத்துடன் பார்த்துவிட்டுச் சாப்பிட ஆரம்பித்தான். ஆனால் சாப்பாடு அவனுக்கு விஷமாக இருந்தது. இரண்டு மூன்று கவளம் தின்று எழுந்துவிட்டான். ராணி அவன் நடத்தையைக் கண்டு பயந்தாள். அவள் அன்று எவ்வளவு திறமையாகப் போஜனம் தயாரித்தாள்! எப்படிப்பட்ட சுபதினமாக நினைத்தாள்! அவளுடைய ஆநந்தம் அன்று எல்லையைக் கடந்திருந்தது...ஆனால் ராஜனுடைய செயலைக் கண்ட பிறகு அவளுடைய உற்சாகமெல்லாம் பறந்து போய்விட்டது. ராஜன் எழுந்த பிறகு அவன் தட்டைப்பார்த்ததும் அவள் மனம் கலவரமடைந்தது. அவள் தலை சுழலலாயிற்று! 'ஏ கடவுளே இன்று இரவு நல்லதாகப் போகவேண்டுமே' என் மனம் தடுமாறுகிறதே. என்று ஏங்கினாள்.

ராஜா ஜுஹார் ஸிங் கண்ணாடி மஹாலில் படுத்திருந்தான். வேலைக்காரி ராணியை அலங்கரித்துக்கொண்டே சிரித்த வண்ணம் "நாளைக்கு ராஜாவிடம் இன்றைய அலங்காரத்திற்காகப் பரிசு வாங்கப்போகிறேன்" என்று சொல்லி அவள் வேலையை முடித்துக்கொண்டு போய்விட்டாள்.

ஆனால் ராணி அங்கிருந்து எழுந்திருக்கவில்லை. அவள் பெருத்த யோசனையில் மூழ்கியிருந்தாள். அவர் எதிரில் எப்படி என் முகத்தைக்காண்பிப்பேன்? வேலைக்காரி முறைப்படி என்னை அலங்கரித்துவிட்டாள். என் அலங்காரத்தைக் கண்டு அவர் ஆனந்த மடைவாரா? நான் இன்று தப்புச்செய்து விட்டேன். நான் குற்றவாளி. அலங்காரத்துடன் இன்று அவர் எதிரில் போவது நல்லதல்ல, அவர் எதிரில் பிச்சைக்காரியைப்போல் தான் போகவேண்டும். அவரிடம் மன்னிப்புக் கேட்பேன்' என்று யோசித்துக் கொண்டு கண்ணாடியின் முன் நின்றாள். அச்சமயம் அவள் தேவமாது போல் காணப்பட்டாள். அநேக சித்திரங்கள் அழகாகயிருந்தாலும் அச்சமயம் கண்ணாடியில் தென்பட்ட அவளது ப்ரதிபிம்பத்தின் முன் அவை ஒன்றும் மேம்பட்டதாகயிருக்கவே முடியாது. அழகுடன் நல்ல வசீகரண சக்தியும் அவள் முகத்தில்தென்பட்டது. மஞ்சள் பூசிக் குளித்ததின் காரணமாக அவள் முகம் மஞ்சள் வர்ணமா யிருந்தது. சிறிது நேரம் வரை அவள் தன் அழகிலேயே லயித்திருந்தாள்.

'அழகுடன் நல்ல வசீகர சக்தி யிருக்கிறது. அது ஒருவரையும் கெடுப்பதில்லை. தர்மம் கர்மம், மனம்-எல்லாம் அழகில் தான் மூழ்கிக் கிடக்கின்றன. எனக்கு இருப்பது ஒன்றும் அவ்வளவு மேன்மையான அழகில்லை. அழகில்லாமலுமில்லை. இந்த அழகைக்கொண்டு கணவரிடம் மன்னிப்பைக் கூடப் பெற முடியாதா? கைகளால் அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கண்களால் அவரை அன்புடன் பார்த்து கோபத்தைச் சாந்தப் படுத்த முடியாதா?' என்று நினைத்தாள்.

'அடடா! நான் என்ன கனவு காண்கிறேன், என் மனதில் அப்படிப்பட்ட எண்ணங்கள் ஏன் உதிக்கின்றன. நான் அழகுடனோ அல்லது அழகில்லாமலோ எப்படியோ அவருடைய வளாக இருக்கிறேன், என் மேல் தப்புத்தான். இந்த அலங்காரங்களெல்லாம் இப்பொழுது எதற்கு?' என்று யோசித்து அலங்காரங்களை யெல்லாம் களைந்தாள். உடுத்தியிருந்தபட்டுப்புடவையை அவிழ்த்து விட்டாள். முத்து மாலையைக் கழற்றிவிட்டு விக்கி விக்கி அழலானாள். அன்பர் ஊர் திரும்பிய இரவன்று ஆநந்தமாக யிருப்பதற்குப் பதிலாக துக்க இரவாக மாறியது. வேலைக்காரி போல் உடை தரித்துக்கொண்டு கண்ணாடி மஹாலுக்குப் போனாள். கால்கள் முன்னேறுகின்றன. ஆனால் மனம் மாத்திரம் பின் தங்குகிறது: கதவருகில் வந்தாள். ஆனால் படுக்கை யறையின் உள்ளே கால் எடுத்து வைக்க வில்லை. அவள் மனம் படபடத்தது. அவளுடைய கால்கள் தடுமாறின.

"யார்?...... குலீனா!... ஏன் உள்ளே வரமாட்டேன் என்கிறாய்?" என்று ஜுஹார் ஸிங் கேட்டான்.

குலீனா மனதைத் திடப்படுத்திக்கொண்டு "எப்படி வருவது? நான் தங்கள் கோபத்திற்குள்ளாகி விட்டேன்" என்றாள்.

"மனம் களங்கமாயிருக்கிறது என்று ஏன் சொல்லக் கூடாது? அதனால் தான் முகத்தைக்கூடக் காண்பிக்கமாட்டேன் என்கிறாய்?"

"நான் எப்படியோ தப்புச் செய்து விட்டேன். அதற்காகத் தங்களிடம் மன்னிப்பு கோர வந்திருக்கிறேன்."

"தப்பிற்காகப் பிராயச் சித்தம் செய்துகொள்ள வேண்டும்"

'எப்படி?"

"ஹரதயாலுடைய ரத்தத்தால்!"

குலீனாவினுடைய உடல் நடுக்கமெடுத்தது. "இன்று தாம்பாளம் மாற்றி வைக்கப்பட்டதற்காகவா அம்மாதிரி செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் குலீனா.

"இல்லை......ஹரதயால் உன் காதலனாக மாறினதால்!"

ராணியின் முகம் சட்டென்று சிவந்தது. கோபம் என்னும் நெருப்பு பற்றி காதல் அன்பு எல்லாவற்றையும் பொசுக்கியது: சில விநாடி வரை அவள் நிலை தடுமாறிவிட்டாள். ஆனால் அவள் ஹிருதயம் வெடித்து விடும் போலிருந்த கோபத்தைச் சற்று தணித்துக்கொண்டு "ஹரதயாலை நான் என் பிள்ளையைப் போலும் சகோதரனைப் போலும் பாவிக்கிறேன்" என்று மாத்திரம் சொன்னாள்.

ஜுஹார் ஸிங் எழுந்து உட்கார்ந்து சிறிது கோபத்துடன் "ஹரதயால் உன் பிள்ளையில்லை......நான் பிள்ளை. அதனால்தான் உன்னிடம் நம்பிக்கை கொண்டேன்— குலீனா நீ அம்மாதிரி நடப்பாய் என்று நம்பவேயில்லை. நான் உன்னை அடைந்து கர்வமடைந்திருந்தேன். சந்திர சூரியர் திசை மாறினாலும் உன் மனம் மாத்திரம் மாறாது என்று நம்பியிருந்தேன். ஆனால் இன்று உன் நடத்தையைக் கண்டதும், நான் எண்ணியிருந்ததெல்லாம் வீண் என்று விளங்கிவிட்டது. முன்னோர்கள் 'பெண்களின் அன்பு தண்ணீரைப் போன்றது' என்று சொன்னது பொய்யாகவில்லை. எங்கு பள்ளமிருக்கிறதோ அங்கு தான் தண்ணீர் நிற்கும்" என்றான்.

குலீனா மேலும் அழுதாள். அவளுக்கு எழுந்த கோபமெல்லாம் துக்கமாக மாறியது. அவள் தனனைத் திடப்படுத்திக் கொண்டு "இந்த சந்தேகத்தை நான் எப்படித் தீர்ப்பது?" என்று கேட்டாள்.

"ஹரதயாலின் ரத்தத்தால்?"

"என் ரத்தத்தால் தீர்க்க முடியாதா?"

"உன் ரத்தத்தால் என் மனப் புண் மேலும் அதிகரிக்கும்"

"வேறு வழியே கிடையாதா?"

"இல்லை"

"இது உங்களுடைய கடைசி தீர்மானமா?"

"ஆமாம். கடைசித் தீர்மானம் தான். இதோ இந்தத் தட்டில் பீடாயிருக்கிறது; உன் சதித்துவத்தின் பரீக்ஷைக்காக இதிலிருந்து ஒன்றை ஹரதயாலுக்கு உன் கையால் கொடுத்துச் சர்ப்பிடவை. ஹரதயாலுடைய உயிர் அவன் உடலை விட்டு நீங்கிய கணமே என் மனதில் உள்ள சுமையும் நீங்கிவிடும்."

ராணி வெறுப்புடன் வெற்றிலைத் தட்டின் பக்கம் போய்ப் பார்த்தாள். பிறகு அவன் பக்கம் வந்தாள்.

'ஹரதயாலுடைய உயிரை வாங்கிவிடுவதா? நிரபராதி, உண்மையான வீரனின் ஹத்தியால் என் சதித்துவத்தைக் காண்பிப்பதா? என்னைச் சகோதரி என்று நினைப்பவனுடைய ஹத்தியால் என் முகத்தைக் கருப்பாக்கிக் கொள்வதா? அந்தப் பாதகம் யாரைச் சேரும்? நிரபராதியின் கொலைக் குற்றம் வீணாகுமா?...அடி நிர்ப்பாக்கியவதி குலீனா! இன்று பதிவிரதா தர்மத்தின் முடிவைக் காண்பிக்க வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட கடினமான பரிக்ஷையின் மூலம்! இல்லை. அம்மாதிரி பாபத்தைச் செய்யமாட்டேன். அவர் ஏன் அப்படிச் சந்தேகப் படுகிறார்? கேவலம் தட்டு மாறி விட்டதற்காகவா? இல்லை வேறு ஏதாகிலும் இருக்கலாம். இன்று ஹரதயால் காட்டில் என் கணவரைச் சந்தித்தான். அவர் அவன் இடுப்பிலிருந்த உடைவாளைப் பார்த்திருக்க வேண்டும்...என்ன ஆச்சரியம்! ஹரதயால் வேண்டுமானால் ஏதாகிலும் தவறுதலாக நடந்துகொண்டிருக்கலாம். நான் என்ன தப்புச் செய்தேன்? ஏன் மீது இவ்வளவு பெரிய குற்றத்தை ஏன் சுமத்த வேண்டும்? கேவலம் தட்டுகள் மாறியதற்காகவா? அடா கடவுளே! நான் யாரிடம் என்மனதில் இருப்பதைச் சொல்வேன்? 'நீர்தான் எனக்குத் துணை. என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும், நான் இந்தப் பாபத்தைச் செய்ய மாட்டேன் என்று நினைத்தாள்.

"ராஜா, உங்களுடைய புத்தி ஏன் இவ்வளவு கீழ்த்தரமாக மாறியது? நீர் என்னைக் கொண்டு ஹரதயாலுடைய உயிரை வாங்க எண்ணுகிறீர்? உங்களால் அவனிடமிருந்து அதிகாரத்தைப்பெற முடியாவிட்டால் ஏன் உள்ளதை உள்ளபடிச் சொல்லக்கூடாது? ஆண்கள் சண்டை செய்வதில்லையா? ஏன் உங்கள் கையினால் அவன் தலையை வெட்டக் கூடாது? என்னைக்கொண்டு அந்த வேலையை முடித்துக் கொள்ள எண்ணுகிறீர். என்னைக் கண்டால் வெறுப்பாகவோ, களங்கமாகவோ உங்கள் கண்களுக்குத்தென்பட்டால் காசிக்கோ பிருந்தாவனத்திற்கோ அனுப்பி விடுங்கள். நான் மறு பேச்சின்றி போய் விடுகிறேன். ஆனால் கடவுளுக்காக என் தலை மீது அவ்வளவு பெரிய பாதகச்சுமையை

சுமற்றாதீர்கள். நான் ஏன் உயிருடன் இருக்கவேண்டும்? எனக்காக வாழ்க்கையில் இனி ஒரு நன்மையும் இல்லை. இனி நான் இறப்பதுதான் நல்லது. நான் என் உயிரை வேண்டுமானாலும் தியாகம் செய்துவிடுகிறேன். ஆனல் இந்தப் பாதகம் மாத்திரம் எனக்குவேண்டாம்" என்று பலவாறாக யோசித்தாள்.

"இந்தப்பாதகம் செய்து தான் ஆகவேண்டும். இதைப்போல் மகா பாதகம் வாழ்க்கையில் எப்பொழுதும் செய்ததில்லை. ஆனால் கட்டாயம் இதைச் செய்தே தீரவேண்டும். பதிவிரதா தன்மைக்கு 'ஹானி வந்திருக்கிறது. அதைக்கட்டாயம் வராமல் தடுக்கவேண்டும். வேறு யாருடைய விஷயமாகயிருந்தாலும், என் உயிரைக் கொடுத்தாகிலும் ஹரதயாலைக் காப்பாற்றி விடுவேன். ஆனால் இந்த விஷயம் என்னுடையதாகவும், மிகவும் சோதனையாகவுமிருக்கிறது. அதனால் கட்டாயம் நான் இந்தப்பாதகத்தைச் செய்தே தீர்வேன். செய்தபிறகு ஆநந்தமாக ஆடிப்பாடிக்கொண்டிருக்க வேண்டும், இல்லாவிட்டால் அப்படிச் செய்ததும் வீணாகி விடும். எப்படியும் செய்தாக வேண்டும். ஆனால் எப்படிச் செய்வது?' என்று முன்னுக்குப் பின் முரணைக் கனவு கண்டு கொண்டிருந்தாள். சட்டென்று திடுக்கிட்டு 'இல்லை,என் கையால் அவனைத் தொடவும் மாட்டேன். விஷ பீடாவையும் கொடுக்க மாட்டேன். எனக்காக அவன் விஷ பீடாவையும் தின்று விடுவான். என் மானத்தைக் காப்பாற்றுவதற்காக அவன் "முடியாது" என்று சொல்லவே மாட்டான். ஆனால் நான் என் மானத்திற்காகவோ அல்லது வேறு சுகத்திற்காகவோ ஹரதயாலுக்கு விஷபீடா கொடுக்கமாட்டேன். என்னை இனிமேல் என் கணவர் கேட்டால் "முடியாது" என்று தான் சொல்லுவேன்" என்று நினைத்தாள்.

4

ஹரதயாலுக்கு, ராஜனுக்கும் ராணிக்கும் நடந்த சம்பாஷணை ஒன்றும் தெரியாது. நள்ளிரவில் வேலைக்காரி ஒருவள் அழுதுகொண்டே வந்து அவனிடம் எல்லாச் செய்திகளையும் சொல்லிவிட்டாள். அவள் வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு ராணியுடன் மஹாலுக்குப் போயிருந்தாள். விஷயங்களை மறைந்திருந்து கேட்டு அவனிடம் வந்து சொல்லிவிட்டாள். ஹரதயால் ராஜாவைக் கண்ட உடனேயே சந்தேகித்தான். மேலும் வேலைக்காரி சொன்னதைக் கேட்டதும் தான் நினைத்தது 'சரி' என்று பட்டது. அவன் அச் சம்பவத்தால் தன் உயிரைத் தியாகம் செய்யச் சித்தமானான்.

ஹரதயால் புந்தேல் கண்டத்தின் வீரர்களுக்குத் தலைவனைப் போலிருந்தான், அவனுடைய ஒரு சொல்லால் மூன்று லக்ஷம் புந்தேலியர்கள் உயிரைத் தியாகம் செய்யக்கூடச் சித்தமாயிருந்தனர். ஓரச்சில் உள்ளவர்கள் அவன் சொல்லுக்கு அடிமையாகயிருந்தனர். ஜுஹார் ஸிங் வெளிப்படையாக, அம்மாதிரி நடந்துகொண்டிருந்தால் கட்டாயம் வெட்கப்பட்டிருப்பான். புந்தேல் வம்சத்தினர்கள் தங்கள் சத்துரு யாராகயிருந்தாலும் பார்ப்பதில்லை. வெற்றி—தோல்வி இவையே அவர்களுக்குத் தேவையானது. அவர்கள் எப்பொழுதும் யுத்த களத்திலேயே வாசம் செய்பவர்கள் ரத்த தாகம் மாத்திரம் எப்பொழுதும் அடங்குவதே யில்லை. ஆனால் அச்சமயம் ஹரதயாலுடைய ரத்தம் ஒரு பெண்ணிற்குத் தேவையாகயிருந்தது. மேலும் அவன் காதருகில் யாரோ ஒரு நிரபராதி பெண்ணுக்காக உன் ரத்தத்தைக் கொடுப்பதால் உன் கீர்த்தி போய் விடாது என்று சொல்லுவது போலிருந்தது.

"நான் அவரைக் கொன்று ராஜ்யத்தை அடைய எண்ணுகிறேன் என்று நினைக்கிறார் போலிருக்கிறது. ராஜ்யத்தின் பொருட்டு கொலை, வஞ்சகம் பிறரை ஏமாற்றுதல்—எல்லாம் நல்லதென்று நினைத்திருக்கிறார். ஆனால் அவருடைய எண்ணங்களெல்லாம் என் உயிரை வாங்கி விடுவது தான். இந்தச் சமயம் என் உயிரைத் தியாகம் செய்து அவரது மனோநிலைமையை மாற்ற வேண்டும். அதுதான் என் கடமை. அவருடைய மனதில் கவலையை உண்டு பண்ணி விட்டு நான் உயிர்வாழ எண்ணுவேனாகில் என்னைப்போல் முட்டாள்தனம் படைத்தவர் வேறில்லை என்ற பட்டம் தான் வாங்கிக்கொள்ள வேண்டும். இந்தச் சமயம் பின் வாங்குவதில் பிரயோஜனமில்லை. சந்தோஷமாக விஷபீடா சாப்பிட்டு விடுவேன். இதை விட மேலாக சுத்த வீரனுக்கு வேறு பெருமை கிட்டுமா?" என்று எண்ணினான்.

யுத்த களத்தில் எதிரிகள் பலமாகத் தாக்கும் சமயம் தன் உயிரைத் துச்சமாக நினைப்பது மிகவும் கடினமான விஷயம். உண்மையான வீரன் ஹரதயால் அன்று தன் உயிரை தருணமாக மதித்துத் தியாகம் செய்ய முன் வந்தான்.

மறு நாள் அதி காலையிலேயே ஹரதயால் காலைக் கடன்களை முடித்துக்கொண்டான். வேட்டைக்குப் போகும் சமயம் உடுத்திக்கொள்ளும் உடை அணிந்து. ராஜா ஜுஹார்ஸிங் இருக்குமிடத்திற்கு வந்தான். ராஜா ஜுஹார் ஸிங்கும் அதி காலையிலேயே தூக்கம் விழித்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தான். திடீரென்று ஹரதயால் உள்ளே வந்ததால் அவன் திடுக்கிட்டு விட்டான். ஹரதயாலையும் தாம்பூலத் தட்டையும் மாறி மாறிப் பார்த்தான் மனதினுள்ளேயே பலவிதமாக எண்ணினான்.

சிறிது நேரம் மௌனமாக இருந்து தன்னைத் திடப்படுத்திக் கொண்டு "எங்கே போகப் புறப் பட்டாய். ஹரதயால்?" என்று கேட்டான்.

ஹரதயாலுடைய முகம் பிரகாசமாயிருந்தது. அவன் சிரித்துக்கொண்டே, "நேற்று நீர் இங்கு வந்தீர்கள். அந்த சந்தோஷத்தால் நான் இன்று வேட்டைக்குப்போகிறேன், கடவுள் உங்களை அற்புதமான வசீகர மனிதராகச் சிருஷ்டி செய்திருக்கிறார். உங்கள் கையினால் வெற்றி 'பீடா' கொடுங்கள்" என்று சொல்லி வெற்றிலைத் தட்டை ஜுஹார் ஸிங்கின் அருகில் எடுத்துவைத்து கையை நீட்டினான்.

ஹரதயாலின் புன்னகையான முகத்தைப் பார்த்து ஜுஹார் ஸிங்கிற்கு மேலும் கலவரமுண்டாயிற்று! "துரோகி, துஷ்டன், என் மானத்தை மண்ணோடு மண்ணகச் செய்தும் இவன் மனம் ஆறவில்லையா? என்னிடம் வெற்றி பீடாவா கேட்கிறாய்? ஆமாம் இது வெற்றி பீடா தான்— ஆனால் உன்னுடைய வெற்றியல்ல, என்னுடையது!" என்று மனதில் நினைத்துக்கொண்டு பீடாவைக் கையில் எடுத்துக் கொண்டான். சிறிது நேரம் யோசித்தான். பிறகு ஹரதயாலிடம் அதைக் கொடுத்து விட்டான். ஹரதயால் தலை வணங்கி அதை பெற்று கண்களில் ஒத்திக்கொண்டான். நான்கு பக்கங்களிலும் பார்த்து விட்டு பீடாவை வாயில் போட்டுக்கொண்டான்.

உண்மையான வீரன் தன் திறமையைக் காண்பித்துவிட்டான். விஷம் மிகவும் கடுமையானதாகயிருந்தது. தொண்டையிலிருந்து கீழே இறங்கியதும் முகத்தில் சாவின்களை உற்பத்தியாகியது. மேலும் கண்கள் புஞ்சடைந்தன. இருகரங்களையும் குவித்து ஜுஹார் ஸிங்கிற்கு வந்தனம் செய்தான், பிறகு ஒரு பெருமூச்சு விட்டு விட்டு கீழே உட்கார்ந்து விட்டான். அவன் நெற்றியில் வியர்வையின் முத்துக்கள் நிறைந்தன. மூச்சு சற்று வேகமாக வந்து கொண்டிருந்தது. ஆனால் அவன் முகத்தில் புன் சிரிப்பின் களை தாண்டவமாடியது.

ஜுஹார் ஸிங் உட்கார்ந்த இடத்தை விட்டு நகரவேயில்லை. அவனுடைய முகத்தில் வெற்றிக்குறி தென்பட்டது, ஆனால் பாசம் என்னும் குறியைக் காண்பித்தக் கண்கள் மாத்திரம் அவனை மீறிநதிப் பிரவாகத்தை வெளிக்கிளம்பின.

குணமடைந்த சந்தோஷம்

ஜம்மி வெங்கட்ரமணய்யாவின் "லிவர்க்யூர்" தான் இக்குழந்தையை ரக்ஷிக்க முடியும்.

ஜம்மி'ஸ் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு "லிவர்க்யூர்" சிறந்த நிவாரணியென பிரக்யாதி பெற்ற டாக்டர்களால் கருதப் படுகிறது. சென்ற 36ஞூ காலமாக இக்கொடிய வியாதி யினின்றும் ஆயிரக் கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது.

அபாயகரமான போலி மருந்து களைக்கண்டு ஏமாறாதீர்கள்.

ஜம்மி வெங்க்ட்ரமணய்யர் & சன்ஸ். 1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

நெ. 48, பெரிய தெரு, கும்பகோணம்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூடு பல்பொடி

I. D. L. H. மெடிகேட்

பல வியாதிகளைத்தடுக்கவும், குணப்படுத்தவும்

ஊக்கம்.உற்சாகம் ஊட்ட | ஜீஞ்சப் | அஜீர்ண.பித்த சமனி

உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்

கவனிக்கு போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ் (உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன ராஜ லக்ஷ்மிக்கு மட்டும் ஸ்ரீ காந்தனிடம் மட்டிலாத ப்ரேமை. அவன் தன்னுடன் சகஜமாக நடந்து கொள்வதையே அவள் கோருகிறாள்.

"நீ பர்மாவுக்குப் போக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாய், அது எனக்குத் தெரியாதா என்ன? நான் தடுத்துவிடுவேன் என்று யோசிக்கிறாயாக்கும்?"

'இல்லை, சொல்லப் போனால், நான் போவதால் உனக்கு வேறு விஷயத்தில் ஊக்கம் அதிகமாகும. ஆனால் அதற்காக அல்ல—இந்த சின்ன விஷயங்களைப் பற்றியெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க உனக்கு அவகாசமிருக்குமோ என்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.''

ராஜலக்ஷ்மி வாய் பேசாமல் அசைவற்று உட்கார்ந்திருந்தாள். ஆனால் உள்ளத்திலிருந்து வெளியேறிய பெருமூச்சுகளை அடக்கி என்னிடமிருந்து மறைக்க அவள் கொஞ்சம்கூட முயலவில்லை. ஆனல் அவள அப்படிச் சிறிது நேரம் தான் இருந்தாள். பிறகு மிருதுவான குரலில் "இதற்குப் பதில் சொல்லி நான் குற்றம் செய்யமாட்டேன். நீ போ, நான் உன்னைக் கொஞ்சமகூடத் தடுக்கவில்லை'' என்று சொல்லி மேலும் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும் "நான் இங்கே வந்திருக்காவிட்டால் நான் உன்னை எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாக்கிவிட்டேன என்பது எனக்குத் தெரியவே போவதில்லை. இந்த இருள் பிரதேசத்தில் பெண்கள் இருக்கலாம், ஆண் பிள்ளைகள் இருக்கவே முடியாது. இங்கே வேலையில்லாமல், ஒரு லட்சியமுமில்லாமல் இருப்பது ஆத்மஹத்தி செய்து கொள்வதற்குச் சமானமாகும். இதை நான் கண் கூடாகக் காண்கிறேன்'' என்றாள்

"யாராவது உனக்கு அதை உனக்கு எடுத்துச்சொல்லிக்காட்டினார்களோ?'' என்று நான்கேட்டேன்.

"இல்லை, நானே தான் பார்த்தேன். தீர்த்த யாத்திரை செய்கிறேன், ஆனால் நான் கடவுளைக் காணவில்லை. அதற்குப் பதிலாக உன்னுடைய ஏக்கம் தட்டிய முகத்தைத்தான் இரவு பகலாகப் பார்க்கிறேன் எனக்காக நீ எல்லாவற்றையும தியாகம் செய்துவிட்டாய், பாக்கி ஒன்றுமில்லை''

இது வரையில் என் உள்ளத்தில் ஏதோ ஒரு கொதிப்பு இருக்கத்தான் இருந்தது. ஆனல் அவளுடைய குரலில் அப்பொழுது தென்பட்ட எடுத்துரைக்க முடியாத ஏக்கத்தைக் கேட்டதும் நான் முற்றிலும் மனமிழந்து விட்டேன்.

"நீ என்ன குறைவாகவா தியாகம் செய்திருக்கிறாய் லக்ஷ்மி? கங்காமாடி உனக்குத்தான் அவ்வளவு சௌகரியமான தகுந்த இடமா?'' என்றேன்; உடனே வெட்கத்தால் குன்றிப் போனேன். ஏனென்றால் யோசிக்காமல் நான் உளறிவிட்ட அந்த விஷயம் வெகு புத்திசாலியான அவளுக்குத் தெரியாமவில்லை. ஆனல் அவள்என்னை மன்னித்துவிட்டாள். பேச்சின்நன்மை தீமை, சந்தர்ப்பாசந்தர்ப்பங்களை கவனித்து. பொழுதை வீணுக்குவது, அப்பொழுதுஅவளுக்குமுடியாத காரியம் என்று எனக்குத் தோன்றிற்று.

"எனக்கும் கங்காமாடி தகுதியான இடம் இல்லை தான். எல்லோருக்கும் அது தெரியாது. ஆனல் உண்மையில்நான்ஒன்றையும் தியாகம் செய்யவில்லை என்பது நீ அறிந்திருக்க வேண்டிய விஷயம். கல்போன்று ஒரு சுமையை உலகம் என்மேல் சுமத்திற்று. அதை நான் தள்ளமுடியுமா என்ன? முடியாது! விவரம் தெரிந்த நாள் முதல் உன்னிடம் நான் ஈடுபட்டிருக்கிறேன். ஆகையால் நான் தியாகம் செய்த ஒரு சிறிதிற்கு எவ்வளவு மடங்கு அதைப்போல அதிகமான ஈடு ஏற்பட்டிருக்கிறது, அது உனக்குத் தெரியாதா?''

எனக்கு பதில் சொல்ல முடியவில்லை. என் உள்ளம் என்னிடம் 'மறந்து விட்டாய், நிரம்ப மறந்து விட்டாய், அது தெரியாமல் நீ தொல்லைப் படுகிறாய்' என்றது.

ராஜலக்ஷ்மி அந்த இடத்தில் என்னைக் குத்திக்காட்டி, "உன் நன்மைக்காகவே இதை உன்னிடம் சொல்ல வேண்டாமென்றே இருந்தேன். ஆனல் இன்று நிறுத்த முடியவில்லை. புண்யம் சம்பாதிப்பதற்காக நான் உன்னை உபேக்ஷை செய்யக்கூடும் என்று நீ சுலபமாக எண்ணியது தான் எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. கோபம் கொண்டு நீ கிளம்பிப் போவதற்கு முன்பு ராஜலக்ஷ்மிக்கு இகத்திலும் பரத்திலும் உன்னைப் பெறுவதைக்காட்டிலும் மேலான லாபம் கிடையாது என்று ஒரு நினைப்புகூட உனக்கு ஏற்படவில்லையா?'' என்று சொன்ன பொழுது ராஜலக்ஷ்மியின் கண்களிலிருந்து கணணீர் தாரை தாரையாக வழிந்தது.

வார்த்தை சொல்லி அவளை எப்படி சமாதானப்படுத்துவது என்று தெரியாமல் அவளது வலது கையை என் கையில் எடுத்துக்கொண்டேன். இடது கையால் அவள் தன்கண்ணீரைத் துடைத்துக்கொண்டுவெகுநேரம மௌனமாகஉட்கார்ந்திருந்தாள். அதன் பிறகு "எல்லோரும் சாப்பிட்டாய் விட்டதா என்று பார்த்து விட்டு வருகிறேன். நீ தூங்கு'' என்று சொல்லி விட்டு அவள் மெதுவாகக் கையை விலக்கிக் கொண்டு வெளியே போய் விட்டாள். அவளைப் பிடித்திழுதது உட்கார வைத்துக் கொள்ள முடிந்திருக்கும். ஆனல் நான் அப்படிச் செய்யவில்லை. அவளும் மறுபடி திரும்பி வரவில்லை. நானும் எவ்வளவு நேரம் தூக்கங் கொள்ளாமல் படுத்துக் கிடந்தேன் அவளை பலவந்தப் படுத்தி நிறுத்துவதால் என்ன பயன் என்று யோசித்துக் கொண்டு ஒரு நாளும் நான் ஒரு நிர்ப்பந்தமும் செய்ததில்லை; நிர்ப்பந்தம் முழுவதும் அவள் சார்பிலிருந்து தான். அவளே இன்று கட்டை அவிழ்த்து எனக்கு விடுதலையளித்து தன்னையும் மீட்டுக்கொள்ள விரும்பினால் நான் செய்வதென்ன இருக்கிறது?

அதிகாலையில் எழுந்ததும் முதல் வேலையாக அவள் கட்டிலைப் பார்த்தேன்; ராஜலக்ஷ்மி இல்லை. இரவு வெகு நேரம் கழித்து வந்தாளா அல்லது அதிகாலையில் எனக்கு முன்னால் எழுந்து வெளியே போய்விட்டாளா என்று என்னால் அறிய முடியவில்லை. வெளிப் பக்கம் போய்ப் பார்த்தேன். அங்கே ஒரே கோலாகலமாயிருந்தது. ரதன் கெட்டிலிலிருந்து சூடான

தேத்தண்ணீர் தயாரித்துக்கொண்டிருந்தான். சிறிது தூரத்தில் ராஜலக்ஷ்மி தின்பண்டங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தாள். சன்னியாசியின் விரக்தி நிறைந்த பார்வையுடன் வஜ்ரானந்தன் அவற்றை ஒரே பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தான். நான் வந்ததைக் கண்டதும் ராஜலக்ஷ்மி தலைக்கு முக்காடிட்டுக் கொண்டாள். வஜ்ரானந்தன் தடபுடலாக எழுந்து "அண்ணு வாருங்கள், என்ன இவ்வளவு தாமதம்?'' என்றான்.

ராஜலக்ஷ்மி ஒரு தட்டில் சிற்றுண்டியை வைத்து என்னிடம் அனுப்பி ரதனைப்பார்த்து, 'உன் பாபுவுக்குத் தேனீர் கொடு!'' என்றாள்.

அப்பொழுது எட்டு மணி, வெளியே வந்து உட்கார்ந்தேன். சரீரத்தில் உபாதை ஒன்றும் இல்லாததால் நகைப்பு கேலியெல்லாம் கிளம்பின. ராஜலக்ஷ்மி முதல்நாள் இரவு நடந்து கொண்டதற்கும இப்பொழுது நடந்து கொண்டதற்கும்பொருத்தமே இல்லை. அவள் எவ்வளவோ உள் வேதனையுடனும் ரோஷத்துடனும் வெளிக்கு அந்தமாதிரி நடந்து கொண்டாள் என்பதில் எனக்குச் சந்தேக மேற்படவில்லை. உண்மையிலேயே இரவின் அந்த ஆழ்ந்த இருளின் மறைவில் நடந்த சிறு சம்பவங்களை இந்த் பட்டப் பகல் வேளையில் நினைத்துப் பார்த்து வெட்கமும் அடைந்தேன், ஆவலும் கொண்டேன்.

முதல் நாள் போல அன்றென்றும் வீட்டில் விசேஷமில்லை. அப்படியிருந்தும் நடு நடுவே கூப்பிட்டும் கூப்பிடாமலும் பலர் பகல் முழுவதும் போஜனம செய்து கொண்டே இருந்தார்கள். பிற்பகலில் மறுபடியும தேனீர் சாப்பிட்டேன், வீட்டுக் கைக்காரியங்கள் முடிந்ததும் சிறிது நேரம் ராஜலக்ஷ்மி என் அறைக்குள் வந்தாள்.

"அக்கா, வரவேண்டும்!'' என்றான் வஜ்ராநந்தன்.

ராஜலக்ஷ்மி அவனைப் பார்த்துக் கொண்டே "சன்னியாசிக்கு பாதபூஜை முடிந்து விட்டது போலிருக்கிறது. அதுநான் இவ்வளவு உத்சாகம்!'' என்றாள்.

"நீங்கள் சொல்வது சரி, உலகத்திலிருக்கும் எல்லா ஆனந்தங்களைக காட்டிலும் பஜநாநந்தமும் போஜனநந்தமும் தான் சிரேஷ்டமானவை, சன்னியாசிக்கு இரண்டாவதுதான் மிகவும் சிலாக்யம் என்று சாஸ்திரம்''

"அதாவது உன்னைப்போன்ற சன்னியாசிக்கு!''

"அதுவும் வாஸ்தவம் தான். நீங்கள் குடும்பம் வகித்து நடத்துவதால் தான் இந்த உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.''

இப்படியே கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்தோம். சமையல்காரன் வந்து சமையல் தயாராகிவிட்டதாகச் சொன்னான்.

ராஜலக்ஷ்மி அவனை அனுப்பி விட்டு எங்களைப் பார்த்து "நீங்கள் இருவரும் காலையிலே போய் விடாதீர்கள். நான்மிகவும்களைத்துப்போயிருக்கிறேன்'' என்றாள்.

அவள் களைத்துத் தான் போயிருந்தாள். இருவரும் மௌனமாக எழுந்து வெளியே போனோம்.

மறுநாள் காலை ஆநந்தன் புறப்படுவதற்கு தயாரானான். யாராவது வீட்டைவிட்டு புறப்பட்டால் ராஜலக்ஷ்மி எப்பொழுதுமே தடுப்பாள். இன்று தடுக்கவில்லை. அவன் புறப்படும் சமயத்தில் அவன் அருகில் சென்று மருதுவான குரலில "ஆநந்தா, எப்பொழுது திரும்பி வருவோம்?'' என்றாள்.

நான் அருகில் தான் இருந்தேன். சன்னியாசியினுடைய கண்களில் கண்ணீர் பொங்குவதைப்பார்த்தேன். நிமிஷத்தில் அவன் தன்னை அடக்கிக் கொண்டு சிரித்த முகத்துடன் "வருவதேது, அக்கா! எப்பொழுதாவது நேர்ந்தால் வருகிறேன்'' என்றான்

"உண்மைதானா?''

"நிச்சயம.''

சன்னியாசியாக இருந்தும் இருவருக்கும் நமஸ்காரம் செய்தான்

பிறகு ஆனந்தன் மெதுவாக வீட்டை விட்டு வெளியேறினான்.

(தொடரும்)

ஸங்கீத சிந்தாமணி ... ரூ. 3
திராவிட கானம் ... ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை ரூ. 3
முழு விபரமான கேட்லாக் இனம். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும
எம். எஸ். ராமுலு & கோ,
28 6, எஸ்ப்ளனேட் :: மதராஸ்





(மேல்) 1. கும்பகோணத்தில் ஸ்ரீ ஆதி குமபேஸ்வர ஸ்வாமி கோவிலின் கும்பாபிஷேகவிழா மிகச் சிறப்பாக நடந்தது அதை நடத்தி வைத்த திருவாவடுதுறை ஆதீன கர்த்தர். 2. ஆதீனகர்த்தர் வைபவத்தைக் காண மேலே ஏறிச் செல்கிறார். (அடி.) பொற்றுமரைக் குளத்திலிருந்து ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோபுரத் தோற்றம். (பி. என். எ.)

சில நீதிக் கதைகள்

★

ஸ்ரீ எ. எஸ். பி. அய்யர்

ஐ. ஸி. எஸ்: எழுதியது

★

பிரசங்கியும் ஸர்வதேச மஹா சபையும்

'ஊழல்கள் நிரம்பிய இந்த சர்வதேச மஹாசபை நமக்கு வேண்டவே வேண்டாம். நமக்கு தேசங்கள் க்ஷேமத்துடனிருந்தால் போதும். ஒவ்வொரு தேசமும் தன் வேலையைச் சரிவரச் செய்தால் போதும். இந்தியர்களல்லாதவர்கள் ஒருவரும் நமக்கு புத்தி புகட்டவேண்டியதில்லை' என்று மலையாள தேசத்தைச் சேர்ந்த பிரசங்கியார் ஒருவர் கல்கத்தாவில் ஒரு பிரசங்கம் செய்தார். அந்த பிரசங்கத்தைக் கேட்டவர்கள் பலத்த கரகோஷம் செய்தனர். ஒரு வருஷம் கழித்து மறுபடியும், அதே பிரசங்கியார் கல்கத்தா சென்றார். தன்னுடைய பேசும் திறமையைக் காட்ட அவர் பல கூட்டங்களைக் கூட்ட எண்ணினார். அவர் எங்கு போனபோதிலும் 'வங்காள தேசத்தவர்களைத் தவிர வேறு ஒருவரும் எங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டியதில்லை. ஒவ்வொரு மாகாணமும் தன் காரியங்களைச் சரிவர கவனித்துக்கொண்டால் போதும்' என்று ஜனங்கள் பதில்சொல்லி அனுப்பிவிட்டனர். அதிக கோபத்துடன்பிரசங்கியார் சென்னை நகரத்திற்குச் சென்றார். தன்னுடைய சொந்த மாகாணமாகிய சென்னை மாகாணத்தின் தலைமை நகரமாகிய சென்னையில் அவர் பிரசங்கம் செய்ய ஆசை கொண்டார். 'மலையாள தேசத்தைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து பிரசங்கம் செய்ய வேண்டியதில்லை. அந்தந்த ஜில்லாவிலிருப்பவர்கள் அந்தந்த ஜில்லாவின் நன்மையைக் கவனித்துக் கொண்டால் போதும்' என்று அவரிடம் சென்னை வாசிகள் பதில் கூறினர். அதிக வெட்கத்துடன் அந்தப் பிரசங்கியார் கள்ளிக்கோட்டை சென்றார். தன்னுடைய சொந்த ஜில்லாவின் முக்கிய பட்டணமாகிய கள்ளிக்கோட்டையில் தன் சாமர்த்தியத்தைக் காட்ட உத்தேசித்து பிரசங்கம் செய்யத் தொடங்கினார். 'வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வந்து பேசவேண்டியதில்லை; ஒவ்வொரு கிராமத்திலுமுள்ளவர்கள் தங்கள் கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபட்டால் நன்மை ஏற்படும்' என்று பேச ஆத்திரப்பட்டுக்கொண்டிருந்த அந்த பிரசங்கியாரிடம் கள்ளிக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் கூறிவிட்டனர். அவமானத்துடன் அந்த பிரசங்கியார் தன் கிராமத்திற்குத் திரும்பிச் சென்றார். 'தனது கிராமத்தில் பிரசங்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர் செய்துகொண்டிருக்கும் போது, 'எங்களுக்கு ஒருவரும் நற்புத்தி புகட்ட வேண்டியதில்லை. தன்னுடைய கடமையை அறிந்து கொள்ளக்கூடிய சக்தி ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கிறது. தன் மூளையைச்செலுத்தி ஒவ்வொரு மனிதனும் தன் வேலையைக் கவனித்துக்கொள்ளட்டும்' என்று அந்த கிராம வாசிகள் பதிலளித்தனர்.

வேதாந்தியும் குடியானவனும்

'இந்த பூமியின் மீது நீ வாழ்வதனால் பயனென்ன? நீயும் மரமும் ஒன்று. தத்துவத்தில் ஒரு அணுவேனும் உனக்குத் தெரியுமா?' என்று கர்வம் பிடித்த வேதாந்தி ஒருவன் குடியானவனைப் பார்த்துக் கேட்டான்.

'சமூக வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு என்னாலான உதவியை நான் செய்துகொண்டேயிருக்கிறேன். வேதாந்தத்தின் சகாயமில்லாமல் நான் உயிர் வாழ முடியும்; உணவின்றி உன்னால் உயிர் வாழ முடியுமா? உனக்கு "கல்லும் மண்ணும்" என்னும் கதை தெரியாது போலிருக்கிறது' என்று குடியானவன் பதிலளித்தான். தெரியாது. அந்தக் கதையைச்சொல் பார்க்கலாம்" என்று வேதாந்தி சொன்னான்.

'ஒரு நாள் கல்லுக்குக் கர்வம் அதிகமாகப் போய்விட்டது. உடனே அது தன்னருகிலிருந்த மண்ணிடம் தன் பிரதாபத்தைச் சொல்லிக்கொண்டது. 'நான் கெட்டியாயிருக்கிறேன். சுத்தமாயிருக்கிறேன்; அழகாயிருக்கிறேன். எனக்கு அழிவில்லை. நீயோ அழுக்கடைந்த வஸ்துவாயிருக்கிறாய்; பார்ப்பதற்கு விகாரமான உருவமுள்ள வஸ்துவாயிருக்கிறாய்; எளிதில் அழிந்து போகும் தன்மையுடையதாய் நீ இருக்கிறாய்' என்று கல், மண்ணைப் பார்த்து சொல்லிற்று. 'உயிருடன் வாழும் பிராணிகளுக்கெல்லாம் ஆகாரமான காய் கறிகளை நாங்கள் உற்பத்தி செய்து கொடுக்கிறோம். உன்னால் என்ன பிரயோஜனம்? உனக்கு பலம் இருந்து என்ன பயன்? பலமில்லாமல் போன போதிலும், விளை பொருள்கள் விளைவதற்கு நான் தகுந்தவனாக இருக்கிறேன்' என்று மண் பதிலளித்தது"

'நீ கூறிய கதைக்கும் நான் சொல்வதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? கற்களினால் நாம் பெரிய கோவில்களையும் வீடுகளையும் கட்டி 'ஜனங்கள் தங்கும்படி செய்யலாம். எப்போதும் ஜனங்கள் நிழலில் வசிக்கும்படி செய்யலாம். 'இரண்டு விதமான நிழல்கள்' என்னும் கதையைச் சொல்கிறேன் கேள். ஒரு ஆலமரம் தேக்கு. மரத்தைப் பார்த்து, "நீ ஒரு பிரயோஜனமற்ற மரம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்குவதற்கு வேண்டிய நிழலை நான் தினந்தோறும் கொடுத்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிற்று.

"நான் எப்பொழுதும் நிரந்தரமான நிழலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய மரம் உபயோகமற்றது. என்னுடைய மரத்தையோ உலகிலுள்ளோர் அனைவரும் விரும்புகின்றனர். என்னுடைய மரத்தைக் கொண்டு ஜனங்கள், வீடு கட்டிக்கொள்கின்றனர். காற்று, வெய்யில், மழை முதலியவைகளினால் உபத்திரவம் ஏற்படாமல், ஜனங்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்கின்றனர். உன் மரத்தைக்கொண்டு வீடு கட்ட முடியுமா? நீ பார்ப்பதற்குப் பெரிய மரமாக இருப்பதனால், உனக்கு என்னமோ நல்ல பெயர் கிடைத்துவிடுகிறது. ஜனங்கள் என்னையே அதிகமாக உபயோகப்படுத்திக்கொள்கின்றனர்" என்று தேக்கு மரம் சொல்லிற்று. அதைக் கேட்டு ஆல மரம் வெட்கித் தலை குனிந்து கொண்டது" என்று வேதாந்தி சொன்னான்.

'முடிவாக நீ என்ன சொல்கிறாய்' என்று குடியானவன் கேட்டான். 'நாம் இரண்டு நிழல்களைப் போன்றவர்கள். ஆல் மரத்தின் நிழலைப்போல், நீ மனிதனுடைய உடலுக்கு வேண்டிய உணவைக் கொடுக்கிறாய். நான் தேக்கு மரத்தைப் போல் மனதிற்கு அமைதியை உண்டுபண்ணுகிறேன். மண்ணைப்போல் நீ ஆகாரத்தைக் கொடுக்கிறாய். வீடு கட்ட கல் உதவுவதைப் போல், நான் முக்தியை அடையும் மார்க்கத்தைக் காட்டுகிறேன்" என்று வேதாந்தி எடுத்துக் கூறியதை குடியானவன் ஆமோதித்தான்.

உங்களால் ஒரு பையனை இதுபோல சுத்தமாக வைத்திருக்க முடியாது.—

அழுக்கு அபாயமானது!

அவனுக்கு லைப்பாய் முறையைப் போதியுங்கள் — அழுக்கைப் பற்றிச் சஞ்சலப் படவேண்டாம்

அழுக்குப் படாமல் நெருப்பை எழுப்புவதோ, அல்லது கூடாரத்தைச் சுத்தமாக ஒழுங்கு படுத்தி அமைப்பதோ எப்படி ஒரு பெரிய ஆரோக்யமான பையனால் முடியும்? கொஞ்சங்கூட அழுக்குப் படாமல் அவன் எப்படி பள்ளிக்கூடமோ, அல்லது உங்களுக்காக கடைத் தெருவுக்கோ போக முடியும்?

ஆமாம்; அழுக்கு அபாயமானதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். டாக்டர்களும் கூடத்தான். சகலவிதமான அழுக்குகளிலும் கிருமிகள் இருக்கின்றன வென்பதும், அவைகள் அடிக்கடி கடுமையான வியாதிகளுக்குக் காரணமாய் இருக்கின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் ஏன் சஞ்சலப்பட வேண்டும்— லைப்பாய் முறை பாதுகாக்க இருக்கும்போது. கிருமி நாசன லைப்பாய் ஸோப்பினால் அடிக்கடி முறை தவறாமல் சுத்தம் செய்து கொள்ள அவனுக்குக் கற்பியுங்கள். அதன் இறுகிய நுரையில் பிரத்யேகமாய் அமைந்துள்ள ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய வஸ்து கிருமி அபாயத்தை சீக்கிரமே போக்கி விடும.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது லைப்பாய் அது ஒரு நல்ல வழக்கம்

L. 34-169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

மத்ய கிழ்த்திசை படை அணிவகுப்பு

மத்ய கீழ்த் திசையில் இருக்கும் இந்தியத் துருப்புகளின் அணி வகுப்பை மன்னர்பிரானின் சகோதரரான க்ளஸ்டர் கோமகன் சமீபத்தில் பார்வையிட்டார்.

உண்மையை அறிதல்

இரண்டு பெரிய மடாதிபதிகள் எப்பொழுதும் சண்டையிட்டுக் கொண்டே இருந்தனர். அவர்களிருவரில் யார் பெரியவர் என்பதைப் பற்றியே அவர்கள் சதா சண்டை பிடித்துக் கொண்டிருந்தனர். தங்களுடைய சிஷ்யர்களின் முன்னேற்றத்தை அவர்கள் கருதியதாகத் தெரியவில்லை. தங்கள் மதத்தின் அபிவிருத்திக்காகச் செய்யவேண்டிய காரியங்களையும் அவர்கள் செய்யவில்லை. அநாவசியமாக வீண் சச்சரவுகளில் ஈடுபட்டு அவர்கள் தங்கள் காலத்தைக் கழித்து வந்தனர். உயர்ந்த பீடத்தில் அமர்த்தி மரியாதை செய்தல், முதன் முதலில் பிரசாதம் முதலியவைகளை வழங்குதல முதலிய விஷயங்களைக் குறித்து அவர்கள் வாக்குவாதம் செய்தனர். அந்த மரியாதைகளை முதன் முதலில் அடைவதற்குத் தகுந்த யோக்கியதையைக் குறித்து பேசிப் பேசி அவர்கள் சலிப்படைந்தனர்.

அருகிலிருந்த கோவிலில் ஒரு மஹான் வசித்து வந்தார். அந்த இரண்டு மடாதிபதிகளும் அந்த மஹானிடம் சென்றனர். 'கற்றறிந்த பெரியாரே! பக்ஷபாதமில்லாமல், நியாயத்தை எடுத்துக் கூறுவதில் தங்களுக்கு ஈடாக ஒருவரையும் சொல்ல முடியாது. எங்களிருவரில் யார் தெய்வத்தன்மையில் சிறந்தவர் என்பதைக் கண்டிப்பாகத் தாங்கள் ஆலோசித்துச் சொல்ல வேண்டும்' என்று அவர்கள் அந்த மஹானைக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் கூறிய வார்த்தைகளைக் கேட்ட மஹான் சிரித்தார்.

'உங்களிருவரில், எவர் மற்றவர் தன்னைவிட பக்தியில் மேலானவர் என்று ஏற்றுக் கொள்கிறாரோ, அவரே மேலானவர் என்பதில் சந்தேகமில்லை' என்று மஹான் சொன்னார். ஒரே குரலில், ஒரே சமயத்தில் இருவரும் மஹான் கூறியபடியே கூறினர். மஹானுடைய அபிப்பிராயத்தை அவர்கள் கேட்டனர். 'நீங்கள் கூறியதிலிருந்தே உங்களுக்கு உண்மை தெரிந்திருக்கும். இருந்த போதிலும், கோவிலில் நாளைக்கு நடக்கப் போகும் உற்சவத்திற்கு நீங்களிருவரும் சூரியோதயத்தின் போது வந்து சேருங்கள். நான் உங்களுடைய சச்சரவைத் தீர்த்து வைக்கிறேன்' என்று அந்த மஹான் மடாதிபதிகளிடம் கூறினார்.

அதற்கடுத்த நாள், சூரியோதயத்தின் போது அவர்கள் இருவரும் கோவிலுக்குச் சென்றனர். உற்சவம் நடந்துகொண்டிருந்தது. அங்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். அந்த மஹான் கோபுரத்தின் உச்சியை அடைந்து, அங்கிருந்த ஒரு குறுகிய இடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர் எங்கே கீழே விழுந்து விடப் போகிறாரோ என்று ஜனங்கள் பயந்து நடுங்கினர். மஹானுடைய உயிருக்கு ஆபத்து நேரிட்டு விடுமோ என்று பயமடைந்த மடாதிபதிகளும், கீழே இறங்கி வந்து விடும்படி அவரை வேண்டிக் கொண்டனர். அவரும் கீழே இறங்கி வந்தார். அவர் அப்படி கோபுரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டதின் நோக்கமென்னவென்று, மடாதிபதிகள், மஹானைக் கேட்டனர். 'கடவுளுக்கு அருகிற் சென்று முக்தியடைவதற்குத் தான்' என்று அவர் பதிலளித்தார். 'என்ன மூடத்தனமான எண்ணம்; உயரப் போனதினாலேயே ஒருவன் கடவுளின் அருகில் சென்று விட முடியுமா? கோபுரத்தின் மீது ஏறிச் செல்லும் காலத்தை கடவுளைத் துதிப்பதில் கழித்திருந்தாலும் புண்ணியமாவது கிடைத்திருக்கும்" என்று இரண்டு மடாதிபதிகளும் கூறினர். "மடாதிபதிகளே! எப்போதும் முக்தி மார்த்திலேயே நாட்டத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் உங்களுக்குள் மரியாதை, ஆசனங்கள், உயர்ந்த பீடங்கள் முதலியவைகளை முதலில் பெறும் விஷயத்தைக் குறித்து ஏன் சச்சரவேற்பட்டதோ தெரியவில்லை, உங்களுடைய சித்தாந்தப்படியே, கோபுரத்தின் உச்சிக்குச் சென்றால், கடவுளின் அருகில் போகக்கூடும் என்று நான் நினைத்தேன்" என்று மஹான் பதிலளித்தார். அதைக் கேட்டு வெட்கமடைந்து மடாதிபதிகள் தலை குனிந்துகொண்டனர். அத்தகைய அழிந்துபோகக் கூடிய சாதாரண உலக விஷயங்களைக் குறித்து அவர்கள் சண்டை செய்வதை ஒழித்து விடுவதாகச் சொல்லி விட்டு, அந்த மடாதிபதிகள் மஹானிடம் விடைபெற்றுச் சென்றனர்.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ்.

இன்றைக்கும் உங்கள் இன்ஷ்யூரன்ஸ் மிக அவசியமே!

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் என்றுமே ஒரு முக்கியமான விஷயம். தற்சமயம் அது நமக்கு ஜீவாதாரமானது. சொற்ப வருவாயில் என்ன செய்வதென்று தயங்க வேண்டாம். அதிலேயே உங்களுக்குப் போதுமான இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பைத் தேடிக்கொண்டு, வருங்கால வறுமைக் கவலையில்லை என்ற மன நிம்மதியை அடையலாம். உங்கள் சக்திக்கு அநுசரணையான இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புத் திட்டம் வகுக்கிறோம்.



யுனைடெட் இந்தியா

பிராவிடெண்டு அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

"யுனைடெட் இந்தியா பில்டிங்" எஸ்பிளனேட், மதராஸ்.

FOR FIRE & MOTOR CAR INSURANCE:

CONSULT

UNITED INDIA FIRE & GENERAL INSURANCE CO., LTD.,

The "Streatly" 5, Mcnicholl Road, Chetput. (Temporary Office)

Phone : 4241. :: Post Box. 1207. :: Grams : "UNIGEN"

கிடையாது. சொல்லப்போனால் நீ அடிமையே அல்லவென்றல்லவா நான் வெகுகாலமாக நினைத்து வருகிறேன். நீங்களெந்த விதத்திலும் எங்களுக்கு எள்ளளவுகூடக் குறைந்தவர்களல்ல!''

ராஜலக்ஷ்மியின் கண்கள் இரண்டும் உடனே கலங்கி விட்டன.

''அது எனக்குத் தெரியும். இந்த விஷயத்தை உன்னிடமிருந்து கற்றேன் என்பதும் எனக்குத் தெரியும். உன்னைப் போலவே எல்லோரும் உலகத்தில் இருந்து விட்டால் எல்லாப் பெண்கள் வாயிலிருந்தும் இந்த வார்த்தை வரும். யார் உயர்ந்தவர்கள், யார் தாழ்ந்தவர்கள், என்ற பிரச்னையே இருக்காது.

''அதாவது இதை எல்லோரும் சத்தியம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும?''

''ஆமாம்!''

அப்பொழுது நான் சிரித்துக்கொண்டு ''நல்ல வேளையாக உலகத்தில் மீற்ற பெண்களெல்லாம் உன்னைப்போல எண்ணவில்லை. உங்கள் குலம் இவ்வளவு ஈனமான மனப்பான்மை கொண்டுள்ளது உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்றேன்.

என்னுடைய கேலியை ராஜலக்ஷ்மி கவனித்தாளோ என்னமோ தெரியாது. ஆனால் மிகவும் சகஜமான குரலில் ''ஆனால் அவர்கள் மத்தியில் ஒரு ஈனமும் தெனபடவில்லையே?'' என்றாள்.

''இருக்கலாம்! நாங்கள் எஜமானர்கள் நீங்கள் அடிமைகள் என்ற உணர்ச்சி இந்தத் தேசத்தில் பெண்களுக்கு தலைமுறை தலைமுறையாக மனதில் வேரூன்றிப் போய்விட்டதால் இப்பேர்ப்பட்ட ஈனமும்கூட உங்கள் கண்களில் படுவதில்லை. இந்தப் பாபத்தால் தான் உலகத்தில் மற்றெல்லா தேசத்துப் பெண்களுக்கெல்லாம் அதிகமாக நீங்கள் சிறுமைபட்டு விட்டீர்கள் என்று தோன்றுகிறது''

ராஜலக்ஷ்மி உடனே திடமாக உட்கார்ந்து கொண்டு இரண்டு கண்களும் ஜ்வலிக்க ''இல்லை! அதனால் இல்லை. உங்கள் தேசத்துப் பெண்கள் தங்களைத்தாமே சிறுமைபடுத்திக்கொள்ளவில்லை, நீங்கள்தான் அவர்களை ஈனம் என்று சிறுமைப்படுத்துகிறீர்கள். நீங்களும சிறுமை கொண்டு விடுகிறீர்கள்; இது தான் உண்மை!'' என்றாள்.

பேச்சு திடீரென்று இப்படிப் புது வழியில் திரும்பிற்று. அதில் தொக்கி நின்ற மறைபொருளும் கொஞ்சம் கொஞ்சம் எனக்கு விளங்கிற்று உண்மையில் அந்த விஷயத்தில் அவ்வளவு உண்மை மறைந்திருந்தது எனக்குக் கூடத் தெரியவில்லை.

''நீ அந்த மனிதனுடன் ஏதோ தமாஷ் செய்துகொண்டிருந்தாய். ஆனால் அவர் சொன்னவற்றை கேட்டதும் எனக்கு எவ்வளவு விஷயங்கள் புதிதாத் தென்பட்டன என்பது உனக்குத் தெரியுமா?''

''தெரியாது!'' என்று நான் சொன்னவுடனே அவள் ''தெரியாததற்கும் காரணம் இருக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தை அறிந்து கொள்வதில் ஒரு மனிதனுக்கு எந்த நிமிஷம் முதல் உள்ளத்தில் ஆவல் குறைகிறதோ அது முதல் அவன் கண்களும் கட்டப்பட்டு விடுகின்றன. இவ்வளவு நாள் நீ சொன்ன பொழுதெல்லாம் உண்மையில் நமது தேசத்தில் துக்கம் இவ்வளவு அதிகமாக இருக்கிறதா? நமது சமூகம் இவ்வளவு பயங்கரமாக அதை எல்லாம் கவனிக்காமல் இருக்கிறதா? அப்படியிருந்தால் அதன் நடுவில் மனிதர்கள் வசிக்க முடியுமா?' என்றெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தேன்'' என்றாள்.

நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு அவள் பதட்டத்துடன் 'இவ்வளவு அறிந்திருந்தும் நீ தான் என்ன செய்தாய்? ஒரு பொழுதும் அவர்கள் மத்தியில் வசித்ததில்லை. அவர்கள் சுக துக்கங்களை அனுபவித்ததில்லை. தனியாக நின்று கொண்டு வெளி சமூகத்துடன் சேர்ந்து அவர்கள் கஷ்டங்கள் நிவர்த்தி ஆகாதவை என்று மட்டும் அறிந்தாய? பெரிய மனிதர்கள் உயர்ந்த உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழிருக்கும் ஏழை மக்கள் அரை வயிற்றுச் சோறு தின்பதைப் பார்த்து இந்த துக்கத்திற்கு முடிவேயில்லை என்று ஒரு நிமிஷம் நினைத்து விட்டு அதை முற்றிலும் மறந்து விடுகிறார்கள். அதே போலத்தான் நீயும்'' என்றாள்.

''உன்னுடைய தர்க்கம் நியாய சாஸ்திரத்திற்கு அவ்வளவு பொருத்திமாக இல்லை. இருந்தாலும் நான் கேட்கிறேன். தேசத்தைப் பற்றி இதற்கு மேல் எனக்கு ஒன்றும் தெரியாது என்று நீ எப்படி அறிந்தாய்?''

''எப்பிடியிருக்க முடியும்? உன்னைப் போல சுயநலக்காரன் உலகத்தில் வேறு யாரும் இல்லையா? தங்களுடைய சொந்த சௌகரியத்திற்காக ஓடி ஆடிக்கொண்டிருக்கிறவர்களுடைய வீட்டு சமாசாரம் எப்படித் தெரியும்? உன்னைப்போலவே சமூகத்தைத் தூற்றிக்கொண்டு திரிகிறார்கள். அவர்களுக்குச் சமூகத்தில் பற்றும் கிடையாது. அதை அவர்கள் நிராகரிக்கிறார்கள். தங்களுடைய சமூகத்தையும் நன்றாக அறிவதில்லை, பிறர் சமூகத்தையும் அறிய முடிவதில்லை!''

''அப்புறம்'' என்றேன்.

''அதற்கப்புறம் பிற சமூக நிலைமையைக் கண்டு நீங்கள் 'நமது பெண்கள் வீட்டில் கட்டுண்டு கிடக்கிறார்கள், இரவும் பகலுமாக ஊழியம் செய்கிறார்கள் என்றும் அவர்களைப் போல கஷ்டப்படுபவர்களும் பீடிக்கப் படுகிறவர்களும், ஈனமானவர்களும் வேறெங்கும் கிடையாது' என்றும் சொல்லுகிறீர்கள். ஆனால் சிறிது நேரம் எங்கள் நினைப்பை விட்டுவிட்டு உங்களைப் பற்றியே நினைத்துப் பாருங்கள். உங்களையே கொஞ்சம் உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அப்பொழுது எங்காவது ஏதாவது பிசகிருந்தால் அது கண்ணில் படும். அதற்கு முன்னால் படாது.''

''அதற்கப்புறம்.''

(தொடரும்.)

சுத்த சவரன்

தங்கத்திலிருந்து

வீகம்ஸீ நகைகள் செய்கிறார்கள்

VEECUMSEE
CHABILDOSS & SONS
JEWELLERS & DIAMOND MERCHANTS
ESTABLISHED 1895
CHINA BAZAAR ROAD, MADRAS

கிழவனின் உயில்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளவனுமான மார்க்கபந்து பிள்ளைக்கு...லொக்...சேர வேண்டியது...லொக்...அவ்வளவுதான்...லொக்...''

உயிலை எழுதி முடித்தவுடன் வக்கீல் வடிவேலிடம் தன் பீஸை வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

அவர் போய் மறு நிமிஷமே வடிவேல் ஆத்திரத்துடன் என் மேல் சீறி விழுந்தான்.

''நீங்கள் இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை, அந்த சமயத்தில் நான் ஒன்றும் பேச முடியாது என்ற தைரியம் தானே உங்களுக்கு?...ஹூம்... நான் நூறு ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கும் பொழுது, ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள அந்த ஓட்டு வில்லை வீட்டை உங்களுக்கென்றே எழுதிக்கொண்டு விட்டீர்களே, இது தர்மமா, அடுக்குமா?''... ரொம்பவும் அக்கிரமக் கொள்ளையாக இருக்கிறதே!... என்று பொருமினான்.

''தம்பி, வீணாக ஏன் அலட்டிக்கொள்ளுகிறாய்?...நீ அடித்த கொள்ளைக்கு நான் எடுத்துக்கொண்ட பங்கு ரொம்ப ரொம்ப சொற்பம். உன் தமையனிருந்திருந்தானானால், உனக்கு எவ்வளவு கிடைத்திருக்கும் என்பதை யோசித்துப்பார்...உன் தந்தையின் சொத்துக்களை எல்லாம் உனக்கு ஒருவனுக்கே எழுதி வைத்ததற்கு, எனக்குப் பிரதியாக. இந்த வெகுமதியாவது வேண்டாமா?......இன்னென்று...நீ இப்பொழுது செய்திருக்கும் காரியம் எவ்வளவு அபாயகரமானது என்பதும், நியாயமற்றதென்பதும் உனக்குத் தெரிந்திருக்கவேண்டும்... விஷயம் வெளியானால், அப்புறம் உன் கதி என்னவாகும் என்பதை நீ அறிய வேண்டும்... இந்த ரகசியத்தை வெளியிடுவதும், இடாததும் என்கையிலல்லவா இருக்கிறது!......என்றேன்.

நான் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் வடிவேலுவைக் கதி கலங்க வடித்து விட்டன.

''நீங்கள் உங்கள் இஷ்டப்படியே அந்த வீட்டை அனுபவித்துக் கொள்ளுங்கள். ரகசியத்தை மாத்திரம் எக்காரணத்தைக் கொண்டும் தயவு செய்து வெளியிட்டு விடாதீர்கள்!'' என்று என் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். நானும் 'சரி' யென்று வாக்குக் கொடுத்தேன்.

''கேட்டாயா, தம்பி, கதையை?... நாம் இப்பொழுது குடியிருந்து வரும் வீடுதான் நான் பத்து நிமிஷங்களில் சம்பாதித்தது...'' என்றார் மார்க்கபந்து பிள்ளை.

''உங்கள் சிரமத்திற்குத் தகுந்த கூலிதான், அப்பா!'' என்றான் தனயன் தீனதயாளு.

CATARACT
and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested.
½ Dram Re. 1 4. 1 Dram Rs. 2
ULCERINE
A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4
For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from:
DADHA & Co., P. T. Madras.

சூதகம் நின்றிருந்தால்
3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

இனி கவலை இல்லை!
கலியாண ஆபீஸ்
உங்களுக்குகந்த பெண்ணோ, மாப்பிள்ளையோ தேவையா? இன்றே ஜாதகமும், ஸ்டாம்பும் அனுப்புங்கள்.
விவரங்களுக்கு:
MATRIMONIAL BUREAU,
588, High Road, Triplicane, MADRAS

1 மணியில் வாலிபம்!
ரமணவிலாசினி
வடிகா
காம சக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத்தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோட், மதராஸ்

22 காரட், டி. சி. என்.
ரோல்ட்கோல்ட் வளையல்கள்
அசல் தங்க வளையல்களைப்போல்

எப்பொழுதும் நிறம் மாறாமல் இருக்கும். 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சைஸ் வரையில் ஒரே விலைதான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணா 8. விலாசம்:-
டி. சி. நாகலிங்கப்பா & Co
பார்க் டவுன் போஸ்ட், மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

தரனு நீ ஸரி தைவமு கானரா ரகுவர!

சரணம்

1. ஸ்ரீ தாஜவந்தன! ஸிந்து பந்தன!
ஸ்ரீ தசரத நந்தன! ச்ரிதஹ்ருத்ஸ்யந்தன!

2. பாப விமோசன! பங்கஜலோசன!
ப்ராபகுடகு யோசனு பக்த பாலன!

3. ஸால விதாரண! ஸர்வலோகாவன!
பாலய சந்த்ரானன! பதித பாவன!

4. இந்திரா பாக்யமா! இன குலோத்தமா!
சந்தமு கனுபிம்புமா ஸத்தா மாத்ரமா!

5. பாதாரவிந்தமு பாவன கந்தமு
நீ தய ப்ருந்தமு நித்யானந்தமு

6. வாகீச ஸன்னுத! த்யாகராஜார்ச்சித!
நாகசயன! பாலித நத! ஸுசரித!

II

ரகுவர! —ரகுவம்சத்தில் உதித்த உத்தமனே!
தரனு —இவ்வுலகில்
நீ ஸரி தைவமு —உனக்கு சமமாயுள்ள தெய்வத்தை
கானரா —காணவில்லையடா
ஸ்ரீத! —ஸகல ஐச்வர்யங்களையும் அளிப்பவனே!
அஜவந்தன! —ப்ரஹ்மதேவனால் வணங்கப்பட்டவனே!
ஸிந்து பந்தன! —சேதுவில் அணைகட்டியவனே!
ஸ்ரீ தசரத நந்தன! —தசரத சக்ரவர்த்தியின் மைந்தனே!
ச்ரிதஹ்ருத்ஸ்யந்தன! —அண்டின அடியார்களின் மனதில் வாசம் செய்பனே!

பாபவிமோசன! —அடியார்களின் பாபங்களை போக்கடிப்பவனே!
பங்கஜ லோசன! —தாமரை கண்ணா!
பக்த பாலன! —பக்தர்களை ரக்ஷித்தருள்பவனே!
ப்ராபகுடகு —உன்க்ருபை கிடைக்கப்பெற்று உய்வதற்கு
யோசனு —எவ்விதம் உன்னை பஜிப்பதென்று அதேயோசனையுள்ளவனாக இருக்கிறேன்

ஸால விதாரண! —ஏழு ஸால விருக்ஷங்களையும் ஒரே பாணத்தால் துளைத்தவனே!
ஸர்வலோக அவன! —உலகனைத்தையும் காத்து ரக்ஷிப்பவனே!
சந்த்ர ஆனன! —பூர்ண சந்திரன் போன்ற முக வனப்பைக் கொண்டவனே!

பதித பாவன! —பாபிகளை பரிசுத்தர்களாகச் செய்பனே!
பாலய —என்னை ரக்ஷித்தருள்வாய்
இந்திரா பாக்யமா! —லக்ஷ்மீ நாயகனே!
இனகுல உத்தமா! —சூர்ய குலத்தில் உதித்த உத்தம புருஷனே!
ஸத்தா மாத்ரமா! —மாயா மனுஷ்ய ஸ்வரூபியே!
சந்தமு கனுபிம்புமா —உன் தரிசன விசேஷத்தை எனக்குக் கொடுத்தருள்வாய்

பாத அரவிந்தமு —உன் திருவடித் தாமரைகள்
பாவன கந்தமு —ஹ்ருதய பூர்வமாக பூஜிக்கத் தகுந்த வஸ்துவாகும்
நீ தய ப்ருந்தமு —உன் கருணைப் பெருக்கு
நித்யானந்தமு —மேலான இன்பத்தை அளிக்க வல்லது
வாகீச ஸன்னுத! —பிரம்ம தேவனால் துதிக்கப்பட்டவனே!
த்யாகராஜார்ச்சித! —த்யாகராஜனால் பூஜிக்கப்பட்டவனே!
நாகசயன! —ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டவனே!
பாலித நத! —வணங்கிய மெய் அடியார்களை ரக்ஷித்தருளியவனே!

ஸுசரித! —உயர்ந்த ஸ்வபாவம் கொண்டவனே!
தரனு —இவ்வுலகில்
நீ ஸரி தைவமு —உனக்கு சமமாயுள்ள தெய்வத்தை
கானரா —காணவில்லையடா.

இனம்
பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, கல்ல சந்ததிக்கும் வழி
வைத்திய வித்தை
மதன மஞ்ஜரி பார்மஸி,
184 சைனு பஜார், மதருஸ்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்
ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி. குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.
CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, லிங்கிச்செட்டி நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களில் ஒன்றாகும். இக்கீர்த்தனத்தில் ஸ்வாமிகள் ஸ்ரீராமருடைய குணுதிசயங்களை வர்ணித்து அவருக்கு சமமான தெய்வம் வேறில்லையென நிரூபிக்கிருர்.

தூருநு நீ ஸரி:—'ஜய ஜய ஸ்ரீ ரகுராமா' என்ற கீர்த்தனத்தின் 10-வது சரணத்தில் "நீ ஸரி வேல்புலேது" என்று இது போன்றே தெரிவித்துள்ளார். ஸ்வாமிகளால இயற்றப்பட்ட 'ராம நீ சமான மெவரு' 'எந்துண்டி வெடலிதிவோ' மும மூர்த்துலுகும்' 'மதிலோன யோசன' இதர தைவமு" முதலான கீர்த்தனங்களிலும் இவ்வபிப்பிராயம் காணப்படுகிறது. மேலும்

மற்றுமோர் தெய்வமுண்டோ மதியிலா மானிடர்காள்!
உற்றபோதன்றி நீங்களொருவனென்றுணர மாட்டீர்
அற்றமேலொன்றறியீரவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த வெந்தை கழலிணை பணிமினீரே

என்ற இதே அபிப்பிராயம் கொண்ட தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிய பாசுரம் கவனிக்கத்தக்கது.

ஸிந்து பந்தன:—ஸ்ரீ ராமபிரான் சமுத்திரத்தைத் தாண்டி லங்கை செல்வதற்கு தர்ப்ப சயனத்திலிருந்து சமுத்திரராஜனைக் குறித்து பிரார்த்தித்தும் வராதது கண்டு அவன் மேல் கோபங்கொண்டு பாணத்தைப் பிரயோகம் செய்ய எடுக்க, அப்பொழுது சமுத்திர ராஜன் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு வானர வீரனை நளன் மூலமாக தன் மேல் அணை போடும்படி தெரிவித்தார். இதையே இங்கு குறிப்பிடுகிருர். இச்சந்தர்ப்பத்தை ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்த காண்டத்தில் விரிவாகக் காணலாகும்.

ஸால விதாரண:—வாலியை வதைக்க ஸ்ரீராமன் வல்லவரோ என ஸுக்ரீவன் சந்தேகித்து ராமரை ஏழு ஸால விருக்ஷங்களையும் ஒரே அம்பினால் துளைக்கும்படி ஏவ, ஸ்ரீராமன் அவ்விதமே செய்து சுக்ரீவனின் சந்தேகத்தை நிவர்த்தி செய்தார். வால்மீகி ராமாயணம் கிஷ்கிந்தா காண்டத்தில் இந்த வீரஸாற்றின் விவரம் காணத்தக்கது. இதையே ஸ்வாமிகளும் இங்கு குறிப்பிட்டுள்ளார்.

சந்தமு கனு பிம்புமா:—'நீ முத்து மோமுஜு'பவே என்ற கீர்த்தனத்தில் இது போன்ற பிரார்த்தித்துள்ளார்.

பாதாரவிந்தமு:—பகவத் சரணகமலங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள ப்ரேமையை வெளியிடுகிருர். இதே போன்று குலசேகராழ்வார் தெரிவித்துள்ள.

நாஸ்தா தர்மே நவஸு நிசயே நைவ காமோப போகே
யத்யத்பவ்யம் பவது பகவன் பூர்வகர்மானுரூபம்
ஏதத் ப்ரார்த்யம் மம பஹுமதம் ஜன்ம ஜன்மாந்தரேபி
த்வத் பாதாம் போருஹ யுககத நிஸ்சலா பக்தி ரஸ்து!

மேலே காணப்படும் ச்லோகம் கவனிக்கத்தக்கது.

IV

ராகம் வராலி — ஆதி தாளம்

(39-வது மேள ஜன்யம். ஆ. ஸகிகம பதநிஸ
அவ. ஸம்பூர்ணம்)

பல்லவி

தா பா தாமா	பாகா மாபா	மதா பதபம	கா ; நீஸா
தா ரு நீ . ஸரி	தை .	வ . மு	கா ன ரா
; காரி கா	மா ; கமத	பா ; ; ;	; ; ; ;
ர கு வ	ர . . .		

சரணம்

ஸா ; நிதபா	பகபம பா ;	பதநித நீ ;	ஸ்ரிக்ரி ரிஸ்ஸா
ஸ்ரீ தா . ஜ	வக் . த . ன	ஸீதி . . . டி து	பக் . . . த . ன
காரி க்மா	காரிஸ்ா ரி	; ஸ்நி ஸ்ரி ஸ்நி	தபபம கமபா
ஸ்ரீ . . .	த சரத	நந் . தனச்ரித	ஹருத்ஸ்யந் . தன

(மற்ற சரணங்களையும் இது போன்றே பாடவும்.)

இந்தியா கவர்ன்மெண்டில் வைத்திய பட்டமும் ஸன்னதும் பெற்ற
ஸ்வைத்தியரத்ன பண்டிட்
யு. ராமநாத் சாஸ்திரியாருடைய

(Examiner in Medicine & Clinics.)

(Govt. Diploma Examination, Etc)

(Sastriar in Govt. Medical Dress)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, கீல்பிடிப்பு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஸித்த மகரத்வஜம்

தங்கம் சேர்ந்த தாதுபுஷ்டி நர்வைன் டானிக். 30 மாத்திரைகள் சீசா 1-க்கு ரூ. 5. வி. பி. வேறு.

ஆனந்த படை நிவாரிணி

இதை மேலுக்கு உபயோகிக்க எரிச்சல் இல்லாமல் எவ்விதமான படைகளையும் திரும்பிவராமல் இருக்கும்படி உடனே போக்கிவிடும். சீசா 1-க்கு அணு 12. வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

அழகு, ஆரோக்யம், ருசி, ஸுவாஸனை இவைகளை அளிக்கும், உயர்த்தர பற்பொடி இது ஒன்றுதான். எங்கும்கிடைக்கும், கேட்லாக் இனும்.

வைத்திய ஸித்தாச்ரமம்,
25-B. யதோத்காரி கீழ மாடவீதி,
சின்ன காஞ்சீவரம்.

ஜயவசிகரணி
அத்ருஷ்ட தாயத்து

கிரஹசார தோஷத்தால் ஏற்படும்எல்லா கஷ்டங்களும் நீங்கி, தொழில்விருத்தி குடும்ப சுகம் முதலிய நன்மைகள் ஏற்படும்.
விலை ரூ. 2-8-0 வி. பி. 0-7-0.
காந்தி ஜோசியர், திருத்தணி.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

விதியின் முன்னே சதி நிற்காது

ஜாநகீ பரிணயம்

ஏழாம் அங்கம்

மஹாமஹோபாத்யாய
ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார்

கி. பி. பதினேழாம் நூற்றுண்டில் தஞ்சாவூர் ராஜ சபையில் விளங்கிய மஹா பண்டிதர்களான மஹா கவிகளுள் இந்த ஜாநகீ பரிணய நாடகம் எழுதிய ராமபத்ர தீக்ஷிதரும் ஒருவர். இவர் பிறந்தது கும்பகோணத்துக்கு ஸமீபத்திலுள்ள கண்டரமாணிக்கம் என்னும் கிராமத்தில். பிற்காலம் ஸஹாஜிராஜபுரம் என்னும் (திருவிசை நல்லூர்) ஸர்வ மான்னிய அக்ரஹாரத்தில் வஸித்து வந்தார். இவர் தென்னுட்டில் வியாகரண ஸம்பிரதாய குலபதியான சொக்கனுத தீக்ஷிதருடைய சிஷ்யனும் மாப்பிள்ளையும் ஆவார். இவர் பூர்வாச்ரமத்தில் பால கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற கிருஷ்ணுநந்த ஸரஸ்வதிகளிடம் வேதாந்த பாடம் கேட்டவர். இவருடைய ராம பக்திக்கு எல்லை கிடையாது. ஸாஹித்யத்திலும் வியாகரணத்திலும் பல கிரந்தங்களை இவர் எழுதியிருக்கிருர். இவருடைய கவிதை நடை வெகு ஸரஸமானது. இங்கு மொழிபெயர்த்திருப்பது கடைசியான ஏழாமங்கத்திலுள்ள சில பாகங்களேயாம். ஒவ்வொரு அங்கத்திலும் கதைப் போக்கில் ரஸமான ஒரு கல்பனையைக் காணலாம்.

சூர்ப்பணகை வருகிருள்

சூர்ப்ப:—(துக்கத்தால் மாரடித்துக் கொண்டு) ஹா! ஆர்ய ராவணு! ஹா! ஆர்ய கும்பகர்ணு! ஹா! வத்ஸ மேகநாதா! ஐயோ நீங்கள் போய் விட்டீர்களே! ஹா! தேவாந்தகா! ஹா! நராந்தகா! ஹா! கும்பா! ஹா! நிகும்பா! நீங்களும் அக்ஷகுமாரனேடு இறந்து விட்டீர்களே! ஐயோ! பாக்கியமிழந்த நான் என்ன செய்வேன்? முன்பு ஹநுமானுடைய வால் நெருப்பால் லங்கா பட்டணம் கொளுத்தப்பட்டாற் போல இந்தத் துக்கத் தீயால் என் உள்ளம் கொளுத்தப்படுகிறதே! (கோபத்துடன்) நான் பெண் பிள்ளையானுலும், என்னுல் முடிந்த வரையில், ராக்ஷஸ குல சத்ருக்களான அந்த ராம லக்ஷ்மணர்கள் விஷயத்தில் ஏதாவதொரு பதில் அபகாரம் நடத்தி விடுகிறேன். (முன் புறம் பார்த்து) ஓ! குமார விபீஷணனுடைய மந்திரி ஸம்பாதி, புஷ்பக விமானத்துடன் ஸுக்ரீவனுடைய பாசறையினுட் புகுந்து நிற்கின்றுனே! இவனன்றே குமார விபீஷணனை எதிரி பக்கம் சேரும்படி தூண்டி விட்டு லங்கையையே அழித்தவன். விபீஷணன் ராக்ஷஸ வம்சத்திற்கே விரோதமாக எப்பொழுதும் நடக்கிறபடியால், இவனுக்கு லங்காராஜ்யம் கிடைத்ததில் எனக்குக் கொஞ்சமும் ஸந்தோஷமில்லை.

(ஸம்பாதி வருகிருன்)

ஸம்பாதி:—(வியப்புடன்) ஸ்ரீ ராகவனுடைய புஜ பராக்ரமத்தை நான் என்னென்று சொல்வேன்! இவர், கடலில் அணைகட்டி லங்கை வந்து போரில் ராவணனைக் கொன்ருரே! இதிருக்கட்டும், தன்னைச் சரணமடைந்த விபீஷணனுக்குத் தாம் முன்பு பிரதிக்ஞை செய்தபடி ராவணனை அழித்து லங்கா ராஜ்ய லக்ஷ்மியைத் தந்தருளினுரே! என்னே! இவருடைய சரணுகதவாத்ஸல்யம்! (பக்கத்தில் வெகுதூரத்தில் சூர்ப்பணகையைப் பார்த்து விட்டு) ஓ! சூர்ப்பணகை, இவள் ஏதோ கலக்கமடைந்தவளாகக் காணப்படுகிருள், வேறென்ன. தர்மாத்மாவான விபீஷணனுக்கு ராஜ்யம் கிடைத்தது இந்தக் குரூரைக்குப் பிடிக்காதிருக்கலாம். இருக்கட்டும். அடுத்துச் சென்று வினவுகிறேன், அடீ சூர்ப்பணகே! நீ மனவருத்த முற்றவளாகக் காணப்படுகின்றுயே. ஏன்?

சூர்ப்ப:—(மனத்துள்) எங்களைச் சேர்ந்த அனைவரும் இறந்தும், நீ ஏன் உயிருடன் இருக்கின்றுய் என்றுதான். (வெளிப்படையாக) ராவணனை வென்ற தன் நாதன் ராமனைக் காண ஸீதை புறப்பட்டு வருகையில் நான் எதிரில் வந்தேன். அப்பொழுது சேவகர்கள் "மூக்கறையாள் இவள்" என்று என்னைத் துரத்திவிட்டார்கள்.

ஸம்பாதி:—நியாயம் தானே! நீ மூக்கறுபட்டவள். ஆகையால் தான் உன்னை விரட்டியடித்தார்கள். புறப்படுகையில், மூக்கறுபட்ட மனிதரைக் காண்பது வரப்போகும் கஷ்டத்துக்கு அறிகுறி என்று சகுனசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. இது ஸீதை விஷயத்திலும் பலித்ததே! தனது நாதனைக் காண மிகுந்த ஆவலுடன் வந்த ஸீதையைப் பார்த்து ஸ்ரீ ராகவன் வெகு கொடுமையாக பேசினுர், இது நீ எதிரில் தோன்றியதின் பலன் தான். உடனே ஸீதை அக்கினியில் பிரவேசித்தாள். அக்னிபகவானே ஸீதையைத் தாங்கி வந்து "இவள் மிகத் தூயவள்" என்று சொல்லி ஸ்ரீராமனிடம் ஸமர்ப்பித்தான்.

சூர்ப்பா:—இருக்கட்டும். இப்பொழுது ராமன் என்ன செய்யப் போகின்ருன்?

ஸம்பாதி:—வேறு என்ன? சிங்கம் யானையைக் கொல்வதுபோல ராமன் ராவணனைக் கொன்றுவிட்டார். புடம் வைத்தெடுத்த தங்கக் கலனையொப்ப மாசற்று விளங்கும் ஸீதா தேவியை அருகில் அமர்த்திக் கொண்டார்.

சூர்ப்ப:—(மனத்துள்) இப்பொழுது தெய்வம் ராமனுக்கு அநுகூலமாகவும், ராவணனுக்கு பிரதிகூலமாகவும் தீர்ந்திருக்கிறது. நான் என் செய்வது?

ஸம்பாதி:—இப்பொழுது ஸைன்யங்களுடன் புஷ்பக விமான மேறி அயோத்திக்கு புறப்படப்போகிருர். தாம் வரும் செய்தியை முன்னதாகவே அறிவிக்க வேகமாகச் செல்லுமாறு அனுமானை அனுப்பப் போகிருர். (என்று சொல்லி விட்டு ஸம்பாதி சென்ருன்)

சூர்ப்ப:—(ஆலோசனையுடன்) அனுமான் அயோத்தி போவதற்குமுன் நான் ஒரு ரிஷி வேஷம் பூண்டு அயோத்தி சென்று பரதனிடம் ராமலக்ஷ்மணர்களைப் பற்றி ஒரு அப்பிரியமான வார்த்தையைச் சொல்லி துக்கப்படச் செய்து, அந்தப் பரதனையும், அவன் தம்பி சத்துருக்கனனையும் நெருப்பில் விழும்படிச் செய்துவிடுகிறேன். இப்படிச் செய்தால், என் இரு ஸஹோதரர்கள் கொல்லப்பட்டதற்கு இது ஒரு மாதிரி பரிஹாரமாகக்கூடும்.

(சென்ருள்)

இரண்டாம் காக்ஷி

சத்ருக்கனன் பின் தொடர, பரதன் வருகிருன்.

பரதன்:—வத்ஸா! சத்துருக்கனு! நமது மதனி ஸீதா தேவியை அபஹரித்துப் போன அரக்கனை அழிக்க யுத்த யாத்திரைக்குப் புறப்படப் போகும் நமக்கு உதவி செய்ய நாம் அழைத்து இவ்விடம் வந்திருக்கும் பல தேசத்திய அரசர்களையும் ஏற்றவாறு நீ உபசரிக்க வேண்டும். நானும், அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளை ஆர்ய பாதுகைகளின் முன்புறம் வைத்து நிவேதனம் செய்துவிட்டுப் பிறகு பண்டாரத்தில் சேர்ப்பிக்கின்றேன்.

சத்ரு:—ஆர்யா! இவ்விரண்டு காரியங்களும் முன்பே செய்து முடிந்துவிட்டனவே!

பரதன்:—ஆம். ஆம். நினைவு வருகிறது. "நம் தகப்பனுருக்குப் பிரிய புத்திரரான ஆர்யரை (ராமனை) எப்பொழுது காண்பேன்" என்ற கவலையே என் மனத்தில் ஓயாது வளருவதால், செய்த காரியங்களும் மறக்கப் படுகின்றன. ஐயோ! என்ன செய்வேன். ஆகையால் வத்ஸா! நீயே ஒவ்வொரு காரியத்தையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

சத்துரு:—அவ்வாறே செய்கின்றேன்.

பரதன் (நினைந்து, மனச் சோர்வுடன்):—வத்ஸா! நாம் சித்திரக்கூடத்தில் ஆர்யரைக் கண்டோமே! என் ஆர்யர் புதிய பர்ணசாலையில் புலித் தோல் மீது வீற்றிருந்தாரே! அவருடைய தலையில் கருத்த ஜடையும், அறையில் சுத்தமான மரவுரியும், கையில் ஒளிர்ந்த ஸ்படிக மாலையும் இருந்தனவே! அப்பொழுது ஆர்யரின் உடலில் தனித்ததொரு சோபை திகழ்ந்ததே! சத்துருக்னு ஆர்யரின் அந்நிலைமை என் அகத்தைவிட்டு அகலவில்லையடா. (பெரும் துயரத்துடன்) வத்ஸா! நம் ஆர்யர் உலகமனைத்திலும் செங்கோல் செலுத்தும் சிறுடையவரன்ருே. அத்தகைய ஆர்யர், பூச்சியும் புழுவும், முள்ளும் நிறைந்த காட்டில் காலால் நடந்து திரிகின்ருரே! புளிப்பும், கசப்பும், துவர்ப்புமுள்ள பழங்களன்ருே என் ஆர்யருக்கு உணவுப் பொருள், மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்து விழுந்து துர்நாற்றம் வீசும் சுவையற்ற கஷாய ஜலமன்ருே என் ஆர்யருக்குக் குடி தண்ணீர்! மேடும் பள்ளமுமான வெறும் கட்டாந்தரையிலன்ருே என் ஆர்யர் படுக்கின்ருர். (மூர்ச்சித்து விழுகின்ருன்.)

சத்ரு:—அண்ணு! மனம் தேறுக. நம் ஆர்யரின் அந்தக் கஷ்ட தசையை நாம் எண்ணலுமாகாது. தேவரீர், மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளவேணும் நாம் வரவழைத்த அரசர்களனைவரையும் அவரவர் நாட்டுக்குத் திருப்பியனுப்பி விடலாம். நம் இனிய தோழன் குஹன் ஒரு பத்திரிகை அனுப்பியிருக்கிருன். அதில் நம் ஆர்யரின் செய்திகள் வரையப்பட்டிருக்கின்றன.

பரதன்:—ஆர்யரின் செய்திகளை அவ்வப்போது தெரிந்து கொண்டு எனக்குப் பத்திரிகை மூலம் அறிவிக்கும்படி குஹனிடம் சொல்லியிருந்தேன். ஸீதாபஹார விஷயம்கூட நமக்குக் குஹனுடைய கடிதத்தால் தானே தெரிய வந்தது. இப்பொழுது பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிருன்? பத்திரிகையைப் படி.

பாகிஸ்தான் எதிர்ப்பு தினம்



பம்பாய் சௌபாத்தியில் பாகிஸ்தான் எதிர்ப்பு தினம் சென்ற ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது ஸ்ரீ வீர ஸவர்க்கார் தலைமை வகித்துப் பேசினார். (பி. என் கே.)

சத்ரு:—"நம் ஆர்யர் தன்னைச் சரணமடைந்த ஸுக்ரீவனுக்காக, அவன் தமையனான இந்திரபுத்ரன் வாலியை யுத்தத்தில் மாய்த்து ஸுக்ரீவனுக்கு வானர ராஜ்ய பட்டாபிஷேகம் செய்தருளினார். பிறகு ஸுக்ரீவன் ஸீதையைத் தேட வானர ஸேனையை திசைகள் தோறும் அனுப்பினான். அதன் மூலம் தேவி லங்கையிலிருப்பது தெரிய வந்தது. உடனே ஸமுத்திரத்தில் அணை கட்டி அதன் வழியாக வானர ஸேனையுடன் சென்று லங்கையை முற்றுகையிட்டிருக்கின்றார்" (என்று படித்துவிட்டு) அண்ணா, பிறகு வானரர்களுக்கும், அரக்கர்களுக்கும் பெரிய யுத்தம் நடந்திருக்குமென்று நினைக்கிறேன். ஏனெனில்—ஒரு தினம் பெரும் காற்று வீசிற்றல்லவா? இது ஏதோ அசுபக் குறியான அவகேடு என்று நினைத்து, இதற்குப் பரிஹாரம் செய்யும்படி நம் குலகுருவுக்குச் சொல்லியனுப்பினேன். அவர் "இது அபசகுனம் அன்று. லங்கையில் நடக்கும் யுத்தத்தைக் காணக் கருடன் அங்கு போய்விட்டுத் திரும்பிச் சென்றான். அவனுடைய சிறகு காற்று இது. ஆகையால், சிறிதும் பயப்பட வேண்டாம்" என்று மறுமொழி சொல்லியனுப்பினார்.

(திரைக்குள்):—என் மித்திரர்கள் மரித்தனர். என் சத்ருக்கள் ஜயித்தனர். இந்த வியஸனத்தைப் பொறுக்க என்னால் முடியவில்லை. தவம்புரிய ஹிமய மலை செல்கின்றேன்.)

பரதன்:— (செவிசாய்த்து) வத்ஸா! அதோ பார்! இந்தக் கிழவி யார்? துறவி போல் காணப்படுகின்றாள். இவளுடைய வார்த்தையிலிருந்து யாரோ இருவர் போர் புரிந்ததாகவும், அதில் ஒருவர்க்கு வெற்றியும், மற்றவர்க்குத் தோல்வியும் ஏற்பட்டிருப்பனவாகவும் தெரியவருகிறது.

மூன்றாம் காட்சி

கிழத்தாபஸி வேஷத்துடன் சூர்ப்பணகை வருகின்றாள்.

சூர்ப்ப:—என் தோழர்கள் தோற்றனர். என் எதிரிகள் வென்றனர். இத் துயரம் என்னால் பொறுக்கவொண்ணாது. நான் தவம் செய்ய ஹிமாசலம் செல்கின்றேன்.

பரதன்:— வத்ஸா! இவள் யார்? எங்கிருந்து வருகின்றாள். வினவுக. ஒரு ஸமயம் இவள் முகமாக நம் ஆர்யரின் யுத்தச் செய்தி தெரியவந்தாலும் வரலாம்.

சத்ரு:—தாபஸியாரே! நீர் யார்? எங்கிருந்து வருகின்றீர்?

சூர்ப்ப:—(பயத்துடன், மனத்துள்) ஐயோ! இங்கேயும் வந்துவிட்டானா என் காதையும் மூக்கையும் அறுத்த அந்த க்ஷத்ரியச் சிறுவன்? (நன்கு கவனித்துப் பார்த்து) இவன் லக்ஷ்மணனல்லன். அவனைப்போலிருக்கும் அவன் தம்பி சத்ருக்னன் இவன். (மூக்கைத் தடவிப் பார்த்து) நான் தாபஸி வேஷம் போட்டபோது நல்ல வேளை, மூக்கு இருக்கிறது. ஆகையால், மூக்கறையாள் உச்சரிக்கும் தெளிவற்ற எழுத்துக்களைக் கேட்டு இவன் என்னைப் பரிஹஸிக்க முடியாது. (வெளிப்படையாக) என்ன கேட்கின்றாய்?

சத்ரு:—நீர் யார்? எங்கிருந்து வருகின்றீர்? என்று வினவுகின்றேன்.

சூர்ப்ப:—(மனத்துள்) நான் ராவணனுடைய தங்கை. லங்கைத் தீவிலிருந்து வருகின்றேன். (வெளிப்படையாக பெருமூச்சுவிட்டு, வியஸனம் நடித்து) நான் யாரோ, எங்கிருந்தோ வருகின்றேன்.

பரதன்:— (மனத்துள்) இவளோ தாபஸி. இவளுக்கு ராக்ஷஸர்களிடம் பக்ஷபாதம் இராது. இவள் மிகவும் வருந்துகிறாள். என் ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் ஏதாவது க்ஷேமக் குறைவு ஏற்பட்டிருக்குமோ? அல்லது இவள் மனம் வருந்த வேறு காரணம் இருக்கலாம். (வெளிப்படையாக) தாபஸியாரே! உமது பெயர் என்ன?

சூர்ப்ப:— (மனத்துள்) எனக்கு என் தகப்பனார் வைத்த பெயர் சூர்ப்பணகை என்பது. இப்பொழுது எனக்குச் செய்கை மூலம் கிட்டிய பட்டப் பெயரோ மூக்கறையாள் என்பது. (வெளிப்படையாக) ரிஷ்யமூக பர்வதவாஸிகளான ரிஷிகள் என்னைப் பர்ணதினி. (இலையை உண்பவள்) என்று அழைப்பார்கள்.

பரதன்:—நீர் ஏன் துயரப்படுகின்றீர்?

சூர்ப்ப:— என் நண்பர்களுடைய வீழ்ச்சியும், என் எதிரிகளின் எழுச்சியும் தான் என் துக்கத்துக்குக் காரணங்கள்.

சத்துரு:—உமக்கு நண்பர்கள் யார்? சத்துருக்கள் யார்?

சூர்ப்ப:—(மனத்துள்) அரக்கர்கள் அன்பர்கள்; வானரர்கள் விரோதிகள்; (வெளிப்படையாக) வானரர்கள் வேண்டியவர்கள், ராக்ஷஸர்கள் வேண்டாதவர்கள்.

பரதன்:—(மனத்துள்) ஐயோ! நம் ஆர்யரைச் சேர்ந்தவர்களுக்குக் கெடுதி என்பதைக் கேட்கப் பயமாயிருக்கிறதே! (வெளிப்படையாக) நீர் ரிச்யமூகமலையில் தானே இருக்கின்றீர். யுத்தம் அந்த மலையிலா நடந்தது?

சூர்ப்ப:—இல்லை, இல்லை. யுத்தம் லங்கையில் தான் நடந்தது. எனக்குத் தோழியான ஒரு ஸ்திரீ வானரம், மூலம். ஸுக்ரீவன் அங்கதன், ஹனுமான் முதலியவர்கள் ராக்ஷஸர்களால் கொல்லப்பட்டனர் என்று தெரிந்துகொண்டேன்.

சத்துரு:—தாபஸியாரே! ராம லக்ஷ்மணர்களுடைய செய்தி என்ன?

சூர்ப்ப:—வேறு என்ன? மாயாவிகளான ராக்ஷஸர்களுடைய முன்னிலையில் என்ன நடக்குமோ அதுதான் நடந்துவிட்டது. ராக்ஷஸர்கள் மனித வேஷம் பூண்டுகொண்டு, 'நாங்கள் உங்கள் உதவிக்காகப் பரதனால் அனுப்பப்பட்டோம்" என்று சொல்லி ஏமாற்றி வானர ஸைன்னியத்தினுட் சென்று, ராத்திரி உறங்கும் போது எல்லோரையும் கொன்றுவிட்டனர்.

பரதன்:—ஹா, ஆர்யா! ராமா! ஹா! வத்ஸா! லக்ஷ்மணா! (மூர்ச்சையடைந்தான்)

சத்ரு:—ஹா! என்னே! இவ்வாறு ஆர்யர்களுக்கு நேர்ந்துவிட்டதே!

சூர்ப்ப:—ஐயோ! உங்களுக்கு அப்பிரியமான செய்தியைச் சொல்லிவிட்டேனே! நீங்கள் யார்? ஆறுதலை அடையுங்கள்.

சத்ரு:—இவர் ஆர்ய பரதர். நான் இவருடைய தம்பி சத்ருக்னன்.

சூர்ப்ப:—(மனத் துடிப்பை நடித்துக் கொண்டு) ஐயோ! நீங்கள் ராமலக்ஷ்மணர்களுடைய தம்பிகளா? ஐயோ! நான் அழிந்து போனேன்: உண்மையானாலும் அப்பிரியத்தைச் சொல்லலாகாது என்பதன்றோ பெரியோர் பேச்சு. இது தெரிந்தும் இவ்வாறு கூறி விட்டேனே! எனக்கு நரகம்தானே இனி புகலிடம். (அழுகிறாள்)

சத்ரு:—தாபஸியாரே! ஸீதையின் கதி என்ன?

சூர்ப்ப:—ராமலக்ஷ்மணர்களுடைய மரணத்தைக் கேட்டு மனமுடைந்து ஸீதை தூக்கிட்டுக் கொண்டு உயிரை விட்டாள்.

பரதன்:—ஹா ஸீதாதேவி! நீ குலப்பெருமைக்குத் தக்கபடி நடந்துகொண்டாய். நான் செய்யவேண்டியது என்ன? ஒன்றுமே புரியவில்லையே.

சத்ரு:-நாம் லங்கை சென்று. போர் புரிந்து அந்தச் சத்ருவைக்கொன்று பழிக்குப் பழி வாங்கிவிடுவோம்..

சூர்ப்ப:—(மனத்துள்) இக்காரியம் முன்னரே முடிந்துவிட்டது. (வெளிப்படையாக) இப்பொழுது இது ஏற்றதன்று. உங்களுக்கு உதவிசெய்பவர் கிடையா. ஆகையால். "துக்கப்படுபவர் செய்ய வேண்டியது இது" என்று ஸீதை காட்டிப் போன வழிதான் நமக்குக் கதி.

பரதன்:—ஐயோ! இந்தப் பதினான்கு ஆண்டுகளிலும் ஒவ்வொரு க்ஷணமும் எனக்குக் கற்பகாலம் போல நீண்டிருந்ததே! ஒரு மாதிரி இவ்வாண்டுகளைக் கழித்தேனே! இன்று என் ஆர்யர் வரவேண்டிய நாளாயிற்றே! அவர் வந்ததும் அவருடைய திருவடித்தாமரையைக் காணலாமென்றிருந்தேனே! எனது அபிலாஷை என்னும் மரம் முறிந்து விட்டதே!

சூர்ப்ப:—(மனத்துள்) அழகு வாய்ந்த ராமனைக் காமுற்ற எனது அபிலாஷையும் மூக்கும் வெட்டுண்டுபோயின. (வெளிப்படையாக) வத்ஸா! மனம் தேறுக. இனி ராமனைக் காண்பது ஏது?

சத்ரு:— (பேர்வாவுடனும், துக்கத்துடனும்) என் ஆர்யருடைய சரத்கால சந்திரனையொத்த முகத்தையும், தாமரையிதழ்போன்ற நீண்ட கண்களையும், மரதகத்தூண்களுக்கு நிகரான கைகளையும், லக்ஷ்மி கைத்தாமரைப் பூவுக்கு ஒப்பான திருவடிகளையும் எங்கு நான் எவ்வாறு என்று காண்பேன்? (மூர்ச்சித்தான்.)

சூர்ப்ப:—(மனத்துள்) நான் இத்தனை அவயவங்களையும் நேரில்தான் பார்த்தேன். பார்த்தும் என்ன? என் இஷ்டம் பூர்த்தியாகவில்லையே.

பரதன்:—நான் ஆர்யரின் ஆக்ஞைப்படி பதினான்கு வருஷகாலம் மணி பாதுகைகளை ஆராதித்து அரசியல் நடத்திவந்தேனே! பதினான்கு வருஷம் சென்றதும் திரும்பி வந்து ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லி என் ஆர்யர் என்னைப் பாராட்டிச் சீராட்டித் திருப்பியனுப்பினாரே! ஐயோ ஆர்யர் திரும்பி வரவில்லையே. துக்கம் தாங்கமுடியவில்லையே. அக்கினிப்பிரவேசம் செய்துவிடுகிறேன்.

சத்ரு:—இப்பொழுது நமக்கு வேறு பரிஹாரம் ஏது? (கை கூப்பிக் கொண்டு) ஆர்ய ராமன் ஆர்ய லக்ஷ்மணனைக் கூடவே கூட்டிக்கொண்டு போனாற் போல, அக்னியில் விழும் தேவரீரும், அக்னியில் விழ எனக்கும் அநுமதி தந்தருளி என்னையும் கூடவே அழைத்துப் போக வேணும்.

சூர்ப்ப:—(ஸந்தோஷத்துடன். மனத்துள்) எனது ஆரம்பமே இதற்காகத் தானே.

சூர்ப்ப:— வத்ஸா! பரதா! நீ ஆலோசித்ததுதான் இந்த சோகத்துக்குப் பரிஹாரம். வத்ஸா! சத்ருக்னா உனது ஆலோசனையும் மிகச் சிறந்தது. ஸுக்கிரீவாதிகளுடைய மரணத்தால் ஏற்பட்ட துயரம் என்னை

தேச பக்தர் ஞாபகார்த்தமாக



மயிலாப்பூர் ரானடே ஹாலில் காலஞ் சென்ற ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் ஞாபகார்த்தமாக அவரது முதல் சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அச்சமயம ஸர் அல்லாடி க்ருஷ்ணஸ்வாமி அய்யர் தலைமை வகித்தார்.

எரிக்கிறது. நான் இனித் தவம் புரிய விரும்பவில்லை. உங்களுடன் நானும் அக்னிப் பிரவேசம் செய்யப் போகின்றேன்.

பரதன்:— வத்ஸா! முடிந்து போகும் தருவாயிலிருந்த இந்த ரகு குலத்தை ரிஷ்ய ஸ்ருங்கமா முனிதளிர்த்து வளரச்செய்தார். இது அறிய வேண்டாம். நீ உயிருடனிருந்து தர்ப்பண ஜலத்தால் பிதுருக்களைத் திருப்தி செய்துகொண்டு இவ் வம்சத்தைத் தழைக்கச் செய்வாயாக.

சூர்ப்ப:-(மனத்துள்) ஐயோ! என் மனோரதம் பாதிதான் பலிக்கப்போகிறது. (வெளிப்படையாக) வத்ஸா! பரதா! உன்னைப் போலவே சத்துருக்கனும் தாங்கொணாத் துயரம் அடைந்திருக்கிறான். ஆகையால் இந்த ஸமயம் உன் பேச்சு பயன்படாது.

சத்துரு:—அண்ணா! பிரிய புத்திரர்களான நீங்கள் இறந்த பிறகு, பாலனான நான் கொடுக்கும் தர்ப்பண ஜலத்தால் பித்ருக்கள் ஒருக்காலும் திருப்திப்படமாட்டார்கள். தேவரீருக்கு முன்னதாகவே நான் நெருப்பில் விழுவேன்.

சூர்ப்ப:—சத்ருக்னா! விறகும் நெருப்பும் தயாரிக்கு.

பரதன்:—ஐயோ கஷ்டம் கஷ்டம தாயே! கௌஸல்யா தேவீ! பெருத்த துக்க ஸமுத்திரத்தில் நீ முழுகி விட்டாயே! அடி கைகேயி! சந்திர ஸூர்யர்களுள்ளளவு நீ அபகீர்த்திச் சேற்றில் அழுந்திக்கிட, அம்மா! ஸுமித்ரே! இவ்வாறு துக்கப்படவா நீ இரு பிள்ளைகளைப் பெற்றாய்! அடி பாவி மந்தரே! கூனி! அநர்த்தங்களனைத்துக்கும் ஆதி காரணமான நீ எல்லா நகரங்களையும் ஏகாங்கியாய் அனுபவிக்க வேணும்.

சத்ரு:— அண்ணா வீணில் புலம்ப வேண்டாம். நான் சென்று விறகும் நெருப்பும் தயார்செய்கிறேன் (சென்றான்)

பரதன்:—என் தகப்பனார் நான்கு பிள்ளைகளைப் பெற்று ரகு குலத்தை வளரச் செய்தார். அவரே ஆர்யராமனை அரண்யத்துக்கு அனுப்பி விட்டு அந்தக் குலத்தையே அழித்து விட்டாரே!

சத்ரு:— (திரும்பி வந்து) அண்ணா! அஜாரவாயிலில் உலர்ந்த கட்டைகளை அடுக்கித் தீ மூட்டி விட்டேன்.

பரதன்:—ஸந்தோஷம்.

சூர்ப்ப:—(மனத்துள்) எனக்கு மிகவும் ஸந்தோஷம். (வெளிப்படையாக) எழுந்திருங்கள். தீயில் விழுவோம்.

(புறப்பட்டனர்)

பரதன்:-தாபஸியாரே! எனது குலகுருவான வஸிஷ்ட பகவானிடம் என் விண்ணப்பத்தை நீர் சென்று தெரிவிக்க வேண்டும்.

சூர்ப்ப:—(மனத்துள் ஆனந்தத்துடன்) நல்ல வேளை. இது வியாஜமாக நான் அக்னியில் விழாமல் வெளிச் சென்றுவிடலாமல்லவா. (வெளிப்படையாக) என்ன?

பரதன்:—"என் குலகுருவே! என் ஆர்யர் வராமையால் நானும் சத்ருக்னனும் துயரம் பொறுது தீயில் விழப் போகிறோம். தேவரீர் மனுமஹாராஜனைப்போல இந்தப் பார்த்தலத்தைப் பரிபாலிக்க வேண்டும். எங்கள் தாய்மார்கள் எங்களை எண்ணி ஏங்காதிருக்குமாறு அவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். எங்களுக்கு உத்தமலோகம் கிடைக்கும்படி அருள்புரிய வேண்டும்" என்பதுதான் என் விண்ணப்பம்.

சூர்ப்ப:—(மனத்துள்) என் மனோரதம் பலிக்கும் போலிருக்கிறது. (வெளிப்படையாக) நான் சென்று தெரிவிக்க வேண்டுமா? மஹர்ஷி, இவையனைத்தையும் தாமே அறியுமாற்றலுள்ளவரல்லவா? (அக்னியை ப்ரதக்ஷிணம் பண்ணுகிறாள்.)

சத்ரு:— தாபஸியாரே! அண்ணாவின் விண்ணப்பத்தை சீக்கிரம சென்று தெரிவித்து வாருங்கள். முதன் முதலில் நாங்களிருவரும் அக்னிப் பிரவேசம் செய்கிறோம்.

சூர்ப்ப:—(மனத்துள்) இவர்களுடைய தீர்மானம் மிக்க உறுதி கொண்டுவிட்டது. இங்கே நானிருந்து செய்யவேண்டிய காரியமொன்றும் பாக்கியில்லை. (வெளிப்படையாக) உங்களுடைய வேண்டுகோளை மறுக்கக் கூடாது. அதிலும் விசேஷித்த இந்த நிலையில். (சென்றாள்.)

நான்காம் காக்ஷி

(திரைக்குள்:— என்வத்ஸை ஸீதை, தகப்பனாரின் கட்டளைப்படிக் காட்டுக்குத் சென்ற பர்த்தாவை அனுஸரித்துக் கூடவே சென்றாள் என்ற செய்தி காதில் விழுந்தது. ஐயோ இவள் வனவாஸ துக்கத்தை எப்படி ஸகிப்பாள் என்று கவலையுடனும் வருத்தத்துடனுமிருக்கும் பொழுதே, அவளை ராவணன் அபஹரித்துக்கொண்டு போய்விட்டான் என்ற இடிபோன்ற செய்தி என் காதில் விழுகிறதே!).

பரதன்:—ஓ! ஹோ! ஜனக மஹாராஜன் வருகின்றாரே! இவரைக் கண்டு பேசாமல் அக்கினிப்பிரவேசம் செய்வது உசிதமன்று.

ஜநகன்:—(வந்து) ஈதென்ன விபரீதம்! பரதனும் சத்ருக்னனும் நெருப்பில் விழ நெருங்கிய அக்னியை பிரதக்ஷிணம் செய்கின்றார்களே! (வேகமாக நடந்து அருகு செல்கின்றார்.)

இருவரும்:— ஆர்யஜநகமஹாராஜரே! இது எங்களுடைய கடைசி நமஸ்காரம். ராமலக்ஷ்மணர்களை ராக்ஷஸர்கள் கொன்றுவிட்டார்கள், ஸீதையும் நான்று உயிரை விட்டுவிட்டாள். ஆகையால் நாங்கள் அக்கினிப் பிரவேசம் செய்யப் போகிறோம்.

ஜநகன்:—ஹா,ஹா,ஹா, கஷ்டம் ஐயோ கஷ்டம் வத்ஸே! ஸீதை உன்னுடையவும் ஊர்மிளையினுடையவும் பர்த்தாக்கள் தீர்க்காயுஸ்ஸுக்களாய் ஜயசீலர்களாய் விளங்குவார்கள் என்று பல ஜோஸியர்களும் சொல்லியிருந்தார்களே! ஐயோ! இது பொய்த்துப் போயிற்றே.எனது துர்ப்பாக்கியமன்றோ இதற்குக் காரணம், பரதா! நீ தமையனுக்கு உதவி செய்ய பலதேசத்திய ராஜாக்களுடன் புறப்படப் போவதாகக் கேட்டு ஸந்தோஷம் கொண்டேனே! இது வீணாயிற்றே. பரதா! நீங்கள் விழ மூட்டிய இந்த அக்னியில் நான் விழுந்து எனது துயரத்தை நீக்கிக் கொள்கிறேன்.

பரதன்:—முதலில் நெருப்பில் விழுவது என் பங்கு. என் ஆர்யன் இங்கு வரக் காணாமையால் என் மனோரதம் நிறைவேறவில்லை. ஆகையால், நான் இந்த ஜடையுடனும் இந்த மரவுரியுடனும் அக்னியில் குதிக்கின்றேன்.

ஜநகன்:—ஐயோ! பரதன் பேச்சு உள்ளத்தை உருக்குகிறதே!

(திரைக்குள்:—ஸ்ரீ ராமன் ராவணனைக் கொன்றார். ஸீதா தேவியை மீண்டும் அடைந்தார். ரிஷிகளும், தேவர்களும் கொண்டாடுமாறு புகழைப் பெற்றார்; இவ்வாறு காரியங்களைச் செய்து முடித்த ஸ்ரீ ராகவன் ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் புஷ்பக விமானம் ஏறி வருகிறார். ஏ பரதா! நெருப்பில் விழ வேண்டாம்,)

சத்துரு:—(பார்த்து) யார் இந்தப் பிரம்மசாரி? பிரியமான செய்தியைத் தெரிவிக்கின்றாரே!

ஜநகன்:—(மகிழ்ச்சியுடன்) வத்ஸா! பரதா அவஸரப்படாதே. சுபமான வாக்கு காதில் விழுகிறது.

இப்பிரசித்திபெற்ற மெழுகு தழும்பின்றி குணப்படுத்தும்.

ஒவ்வொரு வீட்டிலும் ஜாம்-பெக் இருக்கவேண்டும்.

எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் வீட்டில் விபத்துகள் ஏற்படும். குழந்தைகள், முழங்காலில் காயம், சிராய்ப்பு, தீப்புண் மூலம்ஓயாமல்தொந்திரவளித்துவரும். இவை கடும் வியாதியாக மாறலாம். இதனால்தான் ஜாம்-பெக் உடனே தடவவேண்டும். ஜாம்-பெக்கிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை சத்துக்கள் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்தைக் குறைத்து, சீழ் வடிதலை நிறுத்திவிடும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.



எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

நவ நாகரீகம்

★

சட்டை கை

★

காசினி எழுதியது

* * * சில நாட்களுக்கு முன் ஒரு நாள் மத்தியானமாக நாங்கள் எல்லாரும் எங்காத்துக் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மாலினி, நளினி தேவி, பங்கஜம் எல்லோரும் வந்திருந்தார்கள். ஏதேதோ ஊர் வம்பை அளந்து கொண்டிருந்தோம் என்று வைத்துக் கொள்ளேன்! இப்படி நாங்கள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது, தன்னைக் கொஞ்ச நேரமாகவே பங்கஜம் உற்று நோக்குவதை கவனித்த மாலினி:—'என்ன விசேஷம்! சட்டையை மாத்திப் போட்டிருக்கேனு? அல்லது கிழிஞ்சே போச்சா?' என்று கேட்டாள்.

'அப்படி நான் கவனிக்கும்படியான விசேஷம் எதுவுமே இல்லை! இந்த 'கிளாஸ்-ஸ்லீவ்ஸ்' எப்படி இப்படித் தூக்கி நிற்கிறது என்று யோசித்தேன்; அவ்வளவு தான்!' என்றாள்.

'ஆமாம்; இதுக்கு எதுக்காக 'கிளாஸ்-கை' என்ற பேர் வந்ததாம்? யாருக்காவது தெரியுமோ? என்று நளினிதேவி கேட்டாள்.

'இந்தக் கை மேல்பக்கம் தூக்கி, பட்டிப் பக்கம் சுறுங்கி, பார்வைக்கு அடி சுறுங்கின கண்ணாடி டம்ளர் மாதிரியில் இருக்கோ இல்லையோ? இதனால் தான் 'கிளாஸ்' அதுதான் டம்ளர் கை என்று இதுக்குப் பேர் வந்தது!' என்றேன்.

'என் கேள்விக்கு யாரும் பதில் சொல்லமாட்டேன் என்கிறீர்களே? இது ஏன் இப்படித் தூக்கி நிற்கிறது? என் சட்டையையும் இப்படித்தானே வெட்டச் சொன்னேன்; மாலினி பிளவுஸ் கைபோல் ஏன் தோள் பக்கம் இப்படித் தூக்கி நிற்கவில்லை?' என்று பங்கஜம் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டாள்.

'இந்தச் சட்டைக்கு பாட் வைத்திருக்கும்; அதுதான் இப்படி நிறுத்தினல் போல் தூக்கி நிற்கிறது!' என்று நான் சொன்னேன். இது மாலினிக்குப் புரியாமல் போகவே, விவரித்துச் சொன்னேன்.

இந்தச் சட்டை தைக்கத் துணி கொஞ்சம் கூடவே வேண்டும். 'மாட்கி யார்' வெட்டுச் சட்டை மாதிரியில் முக்கால் கஜத்தில் தைக்கமுடியாது. சட்டையை அளவெடுத்து, தோள் வெட்டி, தோள் பக்கம் கை பொருந்தும் இடத்தையும் சீராக் வெட்டிக்கொள்ள வேண்டும். பிறகு இந்தச் சுத்தளவுக்கு மேல் நாலைந்து விரல் அதிகம் விட்டுக் கைத்துணி எடுக்க வேண்டும். இது சதுரமாக இருக்க வேண்டும். இதைக் குறுக்கே மடிக்க வேண்டும். மடித்த நீட்டுத்தான் கையின் நீளம். மடித்ததால் ஏற்படும் கீழ் பக்க நீளத்தை சரியாக வெட்டி மெல்லிய பட்டி தைக்கலாம். அகலமான பட்டியும் தைக்கலாம். மேல் பக்கத்தை தோளுடன்பொருத்த வேண்டும். அதிகம் இருக்கும் நீளத்தை தோள் நடுப்பக்கம் சுறுக்கம் பிடிக்க வேண்டும். கீழ்ப்பக்கமும் பட்டி தைக்கு முன் தோளுடன் பொருந்தி இருக்கும்படி இரண்டு மூன்று சுறுக்கம். அதாவது டாட்ஸ் கொடுக்க வேண்டும். சரிந்து சேருவதினல், தோள் பக்கம் அப்படி புஸ் என்று தூக்கி நிற்கும். இன்னும் இஷ்டமானல் கெட்டித் துணியை நாலாக மடித்து நாலு விரல் அகலத்துக்கு வட்டமாக வெட்டி மூனு நாலு தையல் போட்டு சட்டையின் உள் பக்கம் தோள் கையில் மேல் பக்கம் பொருத்தலாம். இது கை தூக்கி நிற்க ஒத்தாசையாக இருக்கும். இவ்விதமான கை இப்போ ரொம்பவும். நாசூக்காக எண்ணப்படுகிறது.

'மாலினி சட்டையைத் தையல்காரன் நன்ருகத்தான் தைத்திருக்கிருன். ஆனல் இதை இப்போ பாஷன் என்று நான் ஒப்பமாட்டேன்!' என்ருள் நளினி தேவி.

'ஏன்? இது தானே இப்போ எல்லாருக்கும் மோசாக இருக்கிறது? இந்தக் கையில் ஒரு விசேஷம் பார்த்தீர்களோ? கை சத்தே நீளமாகவே இருக்கு இல்லையா?' என்ருள் பங்கஜம்.

'என் சட்டைக்கை அதிக நீளமாகவா இருக்கு?' என்ருள் மாலினி.

'சட்டைக்கை சரியான அளவாகத்தான் இருக்கு. பங்கஜம் இந்த தினுசுச் சட்டைக் கைகள் என்று பொதுவாகச் சொன்ஞள். சதுரத் துணியைக் குறுக்கே மடிப்பதினல் கொஞ்சம் நீளம் கூடத்தானே இருக்கும்?' என்றேன்.

'எதுக்காக மாலினி சட்டை: சரியான பாஷன் இல்லை?' என்று பங்கஜம் விடாமல் கேட்டாள்.

'அதுவா? வெயில் நாள்களில் பட்டுச் சட்டை பாஷன் இல்லை: வெயில் உஷ்ணம் தெரியாமல், குளிர்ச்சியாக இருக்கும் துணிப் புடவை, சட்டை உடுத்திக் கொள்ளுவதுதான் சௌகரியத்துக்கும் ஏற்றது; பாஷனும் கூட; சரிதானே?' என்றேன்.

'நீங்கள் சொல்லுவது சரியாக இல்லாமலும் இருக்குமோ? நான் நினைத்ததைச் சொல்லி விட்டீர்கள்! இந்த நாளிலே மெல்லிய குளிர்ச்சியான துணி ஆடைபோடுவாளா? இப்படி உஷ்ணத்தை உண்டாக்கும் கெட்டிப் பட்டுச் சட்டையும், கொர்ஞட்டுப் புடவையும் உடுப்பார்களா?" என்ருள் நளினி.

"சட்டை புதிதாக இப்போதான் வந்தது! புடவை வண்ணன் வந்த பாடில்லை!" என்று மாலினி சாக்குச் சொன்னுள். ஆனல் நளினி தேவி இதெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் இல்லை என்று தள்ளிவிட்டாள். வெயிலுக்குத் துணி ஆடை என்பது, நாகரீகம், சௌகரியம்; இரண்டும்சேர்ந்த ஒரு நல்ல பாஷன் இல்லையா?

அறை மணக்க

வெயில் என்றது ஞாபகம் வருகிறது. சில சமயங்களில் சாமான்கள் அதிகம் இருப்பதினுலும். அடைத்து வைத்திருந்ததினுலும் இன்னும் எத்தனையோ காரணங்களினுலும் அறையில் ஒருவித மக்கல் வாசனை உண்டாகிறது. இல்லையா? இல்லை; ஏதாவது ஒரு பொருள் சிந்தி விடுவதாலும், பக்கத்து வீடுகளில் இருந்தும் சில வாசனைகள் அறையில் ஏற்படுவதில்லையா? இந்த சமயத்தில் யாராவது வந்துவிட்டார்கள்; அல்லது வரப்போவது தெரிந்து வாசனையை போக்கவேண்டி இருந்தால் ஒரு நொடியில் சுலுபமாக இதைச் செய்து விடலாமாம்.

அறையில் இருக்கும் மின்சார விளக்கின் பல்பின் மேல் கொஞ்சம் வாசனை திரவியம் அல்லது யூட்டிகொலோன் போன்ற வாசனைத் தண்ணீரைத் தடவி, விளக்கை ஏற்றி விட வேண்டும். எரியும் விளக்கில் நிமிஷமாகச் சூடு ஏற, வாசனை அறை எங்கும் வியாபித்து, துர்கந்தத்தை நீக்கி, கம் என்று கமழும். அத்தரைத் தடவலாம்; 'ஸெண்டு'களைத் தடவலாம். அறையில் வாஸில்வைத்திருக்கும் பூக்கள், ஒன்றின் வாசனை உள்ள 'ஸெண்டைத்' தடவினல் அந்தப் பூ அப்படிக் கமழுகிறது என்ற உணர்ச்சி உண்டாகும். மின்சார விளக்கு இல்லாவிட்டால் பழைய வழக்கத்தை அனுசரித்து கொஞ்சம் சாம்பிராணி, அல்லது மட்டிப்பால் புகை போடலாம். இப்படி அறையைக் கமழச் செய்ய நளினிதேவி சொன்னமாதிரியில் முதலில் ஒரு மக்க வாசனை இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. டிராயிங் ரூமில் வாஸில், ரோஜாப்பூவை வைத்து, அத்தரை விளக்கில் தடவினல் இனிமையான வாசனை ஏற்படும்.

நாற்பது வருடங்களாகப் பிரசித்தி பெற்ற

லோத்ரா — அர்க்கா — அமிருதா

கர்ப்பாசய ரோக நிவாரணி — ஜ்வர நிவாரணி — ரத்தசுத்தி திராவகம்

ருது சூலை, அகால பஹிஷ்டை, ருதுசிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைப்படுவது, வெண்ரத்தப்போக்கு. கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுவி விடுதல், மூர்ச்சை, சந்தானமில்லாமை, உப்பசம் முதலிய சகலவிதமான வியாதிகளைப்போக்கி ஸ்திரீகளுக்கு புத்திர சந்தான பாக்கியம் கொடுக்கும்

முறைக் காச்சல், குளிர்க்காச்சல், மலை ஜ்வரம், விஷஜ்வரம், நீடித்த காலமாயுள்ள புராண ஜ்வரம், விஷபடிசம் என்கிற இன்புளூயன்ஸா ஜ்வரம், மலேரியா ஜ்வரம் சன்னிபாத ஜ்வரம் கபஜ்வரம், பித்தஜ்வரம், வாதஜ்வரம் முதலிய சமஸ்த ஜ்வரங்களையும் கண்டிக்க இது ஓர் வஜ்ராயுதம் போன்றது

பலஹீனம், அஜீரணம், மலபந்தம், மந்தபுத்தி, பித்தரோகம், கால் கை கண் எரிச்சல், தலைவலி, சுவப்பனஸ்கலிதம், மனோவியாகூலம், க்ஷயம் முதலிய சகல விதமான வியாதிகளை போக்கி மனிதருக்கு தேக ஆரோக்கியத்தைக் கொடுக்கும் திவ்விய ஔஷதம்.

கேசரி குடீரம் லிமிடெட்,

இராயப்பேட்டை மதறஸ்.

மதுரா பிராஞ்சு:

2, ஜடாமுனிவர் கோவில் தெரு, மதுரை ஸிடி.

எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

சித்திரமும் சிருங்காரமும்

★

"ஸ்காட்லண்ட் யார்ட்" — மிதவும் ஸ்வாரஸ்யமான படம் — பாங்கியைக் கொள்ளை யடிக்கச் சதி — காதல் வளர்ந்த விதம் — ஒரு பிரபல நடிகர் — ஜான் லோடரின் வாழ்க்கை விவரம் — ஆரம்பத்தில் யுத்த வீரர் — தற்போது சினிமா நடிகர் — மிகவும் ரஸமான சரிதை.

காதலா ? கோபமா ?

"ஸ்காட்லண்ட் யார்ட்" என்ற 20-ம் செஞ்சுரி பாக்ஸ் படத்தில் நடிக்கும் ஹென்ரி வில் காக்ஸனும் நான்ஸி கெல்லியும்

"ஸ்காட்லண்ட் யார்ட்"

இவ்வாரம் நியூ எல்பின்ஸ்டனில் 20-ம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியாரின் "ஸ்காட்லண்ட் யார்ட்." என்ற ஆங்கிலப் படம் காட்டப்படும். நான்ஸி கெல்லி, எட்மண்ட் க்வென். ஜான் லோடர் முதலியோர் இந்த அதி ஸ்வாரஸ்யமான படத்தில் நடிக்கின்றனர்.

எதிரி வெடிகுண்டு விமானங்களால் பாழாக்கப்பட்ட லண்டன்மா நகர்: எங்கு பார்த்தாலும் கார் இருள். டாகின் பரோல்ஸ் (ஹென்றி வில்காக்ஸன்) நல்ல ரூபவான்; கண்டோரை மயக்கும் தோற்றமுடையவன்: பல பாங்கிகளை கொள்ளையடிப்பதையே தன் தொழிலாகக் கொண்டவன்: திருட்டில் துணிச்சல் அதிகமுள்ளவன். அவனைத் துரத்துகின்றனர் ஸ்காட்லண்ட் யார்ட் துப்பறிபவர்கள். டாகின் அவர்களிடம் அகப்படக் கூடாதென்று ஸர் ஜான் லாஷர் (ஜான் லோடர்) என்ற பெரிய லேவாதேவிக்காரர் மாளிகையில்போய் ஒளிந்துகொள்கிருன். இன்ஸ்பெக்டர் கார்க் (எட்மண்ட் க்வென்) முயற்சி செய்தது வீணுகிறது!. ஸர் ஜான் லாஷர் நிரம்பவும் அழகு வாய்ந்தவர்.

ஸர் ஜானும் அவரது மனைவி லேடி ஸாண்ட்ரா (நான்ஸி கெல்லி)வும் பலமாகத் தர்க்கிப்பதை டாகின் மறைவிலிருந்து கேட்கிருன்: மறு நாள் தான் நார்வேக்கு யுத்த நிமித்தமாகப் போவது தன் மனைவிக்குத் திருப்தியாயிருக்கும் என்ற முறையில் ஸர் ஜான் அவளுடன் சம்பாஷித்து அவளை வருத்தப்படுத்துகிருர்.

டாகின் அவர்களிருவரையும் வழிமடக்கி ஸர் ஜானின் காரின் சாவியைக் கைப்பற்றியதுடன் லேடி ஸாண்ட்ராவின் "லாக்கெட்"டையும் எடுத்துக்கொள்கிருன் அதில் அந்த தம்பதிகளின் படம் இருக்கிறது.

பிறகு அவன் இன்பெக்டர் கார்க்கிடமிருந்து தப்பவும், தீரமாகக் காரியம் செய்யவும் உத்தேசித்து ராணுவத்தில் சேர்ந்து கொள்கிருன். அவன் பிரான்ஸுக்கு அனுப்பப்படுகிருன். டங்கர்க்கிலிருந்து பிரிட்டிஷ் படை வாபீஸான சமயத்தில் அவனுக்குத் தலையில் பலத்த காயமேற்பட்டு, உரு கண்டு பிடிக்க முடியாத விதத்தில் கிடக்கிருன்.

அவன் பிரிட்டிஷ் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்குக் கொண்டு போகப்படுகிருன். அவனுடைய சட்டைப் பையில் லேடி ஸாண்ட்ராவின் "லாக்கெட்" இருப்பதைக் காண்கின்றனர் அங்கு: உடனே அவன் தான் ஸர் ஜான் என்று அவர்கள் எண்ணி, படத்திலுள்ள ஸர் ஜானின் முக வெட்டிற்கேற்ப அவனுடைய முகத்தையும் அமைக்க ஏற்பாடு பண்ணுகின்றனர்: இதை ஒரு ரண சிகிச்சை மூலம் அவர்கள் செய்கின்றனர்.

இந்த சிகிச்சை காரணமாக டாகினின் வாழ்க்கை புது மாதிரியாக மாறிப் போகிறது. தனது கணவரின் குணம் மாறுபட்டிருப்பதாகக் கண்டு லேடி ஸாண்ட்ரா மிகவும் சந்தோஷிக்கிருள்: பிறகு இருவரும் மிகவும் நேசமாக வாழ்கின்றனர். ஸர் ஜானின் வாழ்க்கை விவரங்களைப்பற்றித் தனது அறியாமையை ஒளிக்க டாகின் ஏற்பாடு செய்கிருன்: அதிர்ச்சி காரணமாக மூளை கோளாறு ஏற்பட்டதே தான் பழைய விஷயங்களை மறந்துவிட்டதற்குக் காரணம் என்று டாகின் தெரிவிக்கிருன். பிறகு உண்மை ஸர் ஜான் காணுமற் போய்விட்டார் என்ற செய்தி பிரசுரமானது டாகினுக்கு அதிக திருப்தியைத் தருகிறது.

டாகின் ஸர் ஜான் என்று எல்லோராலும் பாவிக்கப்பட்டதால், பெரிய பாங்கியின் தலைமை அதிகாரியாகி விடுகிருன். ஒரு பாங்கியைக் கொள்ளையிடவும் அவன் தீர்மானிக்கிருன். இதற்காக அவன் தொடர்ந்த முயற்சி பலன் பெறுவதற்குள் நாஸி ஏஜண்டுகள் குறுக்கிடுகின்றனர். உண்மை ஸர் ஜான் ஜெர்மனியில் ரகசியப்போலீஸாரால் சிறை வைக்கப்பட்டிருப்பதாகவும், டாகின் ஜெர்மனிக்குப் பணத்தில் பெரும் பகுதியைக் கொடுக்கா விட்டால் அவனுடைய சூழ்ச்சியைப் பஹிரங்கப் படுத்தி விடுவதாகவும் அவர்கள் பயமுறுத்துகின்றனர். இதற்கு டாகின் சம்மதிக்கிருன்; ஆனல் கடைசியில் எப்படியாவது அவர்களை ஏமாற்றி விடுவது என்பதும் அவன் எண்ணம்.

ஸ்காட்லாண்ட் யார்ட் அதிகாரிகள் லேடி ஸாண்ட்ராவுக்கு சில தகவல்களைக் கொடுத்தது காரணமாக அவளுக்கு சந்தேகம் உதயமாகிறது: பிறகு அவள் புறப்பட்டுப் போகிருள்: ஜெர்மன் ரகசியப் போலீஸார் வசம் டாகின் சிக்கியிருப்பதை அவள் காண்கிருள். லேடி ஸாண்ட்ரா வருகையும் அவர்களுக்கு பயன்படுவதாகிறது: அவளிடம் டாகின் யார் என்று காட்டிக் கொடுத்து விடுவதாகவும் அவர்கள் பயமுறுத்துகின்றனர். தனது உயிரைப்பற்றி டாகின் அலக்ஷியமாயிருந்த போதிலும், லேடி ஸாண்ட்ரா தன்னிடம் கொண்ட காதலுக்குக் கெடுதி கூடாதென்று அவர்களுடன் உறவாட அவன் தயாராகிருன்.

மிகக் கெட்டிக்காரத்தனமாய் டாகின் இன்ஸ்பெக்டர் கார்க்குக்கு ஒரு செய்தியை அனுப்புகிருன்: இது சம்பந்தமாக பல பாங்கிகளைக் கொள்ளையடித்து அதிக பிரக்யாதி பெற்றவன் தான். தான் என்பதையும் அவன் வெளியிடும்படி நேரிடுகிறது. கார்க் உடனே ஸ்தலத்திற்கு வந்து சேருகிருன்: ஜெர்மன் ரகசியப் போலீஸார் முயற்சியைகார்க் பங்கமடையச் செய்கிருன்: கடைசியில் அவன் டாகின் என்பதையும் பஹிரங்கப்படுத்துகிருன். முதலில் லேடி ஸாண்ட்ராவுக்கு தன்னை ஏமாற்றியதற்காக டாகினிடம் கோபம் வந்த போதிலும், தன்னைக் காப்பாற்ற அவன் முயற்சித்ததற்காக அவனிடம் அத்யந்த நட்பு கொள்கிருள்.

* * * *

ஜான் லோடர்

பிரபல சினிமா நடிகரான ஜான் லோடரின் வாழ்க்கை பிரமிக்கத்தக்கது. ஒரு பிரிட்டிஷ் தளகர்த்தரின் புத்திரர்: பால்ய திசை யார்க்கில் கழிந்தது: பிதா தலைமை வகித்த படைபோன இடங்களுக்கெல்லாம் பிள்ளையும் போய் வந்தார். பதின்மூன்றும் பிராயத்தில் படிப்புக்காக ஈட்டன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார்.

1914-ம் வருஷத்தில் மஹா யுத்தம் ஆரம்பித்தபோது லோடர் இங்கிலாந்தின் மேற்குக் கோடியில் இருக்கும் ஸாண்ட் ஹர்ஸ்டுக்கு அனுப்பப்பட்டார். சிறிது காலம் அங்கு பயிற்சி பெற்ற பின்பு ராணுவத்தில் பதவி யேற்ருர். மறு வருஷம் காலிபோலியில் நடந்த யுத்தத்தில் கலந்து கொண்டார்: சண்டையிட்ட பிரிட்டிஷ் படையில் இவரை விட இளையவர் இல்லையாம், 1918-ம் வருஷம் வரை அத்ருஷ்டம் இவரைப் பின்தொடர்ந்து வந்தது. ஆனல் அந்த வருஷத்தில் பிரான்ஸில் இவர் கைது செய்யப்பட்டார். சமாதானம் ஏற்பட்டதும் சிறிது காலம் ஸ்தானீகர் காரியாலயத்தில் வேலை பார்த்தார்: பிறகு சில தொழில்களையும் நிர்வகித்து நடத்திருர்: பணமெல்லாம் போயிற்றே தவிர வேறு ஒன்றும் இல்லை.

கடைசியாகத் தம்மிடம் மிகுந்திருந்த நேர்த்தியான உடையை அணிந்துகொண்டு இவர் வெளியே ஒரு நாள் சென்றபோது, அலக்ஸாண்டர் கோர்டாவைச் சந்தித்தார். கோர்டாவின் கவனம் இவர் மீது விழுந்தது. ஒரு படத்தில் நடிக்க அழைப்பும் உடனே அளிக்கப்பட்டது. இதே படத்தில் இவருடன் முதன் முதலாக நடித்த மற்ருெருவர் மார்லீன் டிட்ரிஷ் என்ற நடிகை. இவ்வாறு காலக்கிரமத்தில் இந்தத் தொழிலே இவருக்கு ஸ்திரமாகி விட்டது. இங்கிலாந்தில் சில பிரிட்டிஷ் படங்களில் நடித்த பின்பு 1928-ல் ஹாலிவுட்டிற்கு இவர் வரவழைக்கப்பட்டார், இது வரை இவர் நடித்த பிரபல படங்கள் பல.

தேசீய யுத்த முன்னணி ஸ்தாபனம்

சென்ற 23-ம் தேதி மாலை சென்னை கவர்னர் மே. த. ஆர்தர் ஹோப் கோட்டை மைதானத்தில் தேசீய யுத்த முன்னணி இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். அச் சமயம் ஸர் ஹோப் பிரசிங்கம் புரிந்தபோது மேற்படி படம் பிடிக்கப்பட்டது.

சென்ற வார நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு திட்டம் வெளியிடுவதற்கில்லை.

இந்தியப் பாதுகாப்பு சம்பந்தமாக, துருப்புகள் அனுப்பப்பட்டுள்ள விவரங்கள் முதலியவற்றை வெளியிடுவது உசிதமல்ல. இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பு முழுதும் நம்முடையதாகும். இவ்வேலையில் எவ்வளவு தூரம் இந்தியர் ஒத்துழைக்க விரும்புகின்றனரோ அதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

* * * *

துருக்கிக் கப்பல் பலி

துருக்கிக் கப்பலான 'செவா செவாக்' (550 டன் எடையுள்ளது) கருங்கடலில் பல்கேரியப் பகுதியிலுள்ள வாஸிலிகோஸ் முனைக்கருகில் ஒரு ஸப்மரீனால் டார்பிடோ செய்யப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. தாக்கிய ஸப்மரீன் எந்நாட்டைச் சேர்ந்ததென்பது தெரியவில்லை. அத்துருக்கிக்கப்பலின் தலைவரும் மற்ற 9 மாலுமிகளும் உயிர் தப்பினர். இந்தக்கப்பல் பல்கேரியத் துறைமுகமான பர்காஸிலிருந்து இஸ்தாம்புலிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தது.

சென்ற ஐந்து நாட்களில் இரண்டு துருக்கிக் கப்பல்கள் டார்பிடோ வீச்சுக்குள்ளாயிருக்கின்றன.

* * * *

மிஸ்டர் ரூஸ்வெல்ட் கருத்து

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சில நிருபர்களிடம் தமது கருத்தை வெளியிட்டார்:—

இந்த யுத்தம் நீண்ட நாள் நடக்கப்போகிறது. ஒரு வாரம் அளவு கடந்த நம்பிக்கை கொள்வதும் மற்றொரு வாரம் ஒரேயடியாக நம்பிக்கை இழப்பதும் விவேகமல்ல; தனிப்பட்ட சம்பவங்களைக் கண்டு இவ்வாறு நடந்து கொள்வது சரியன்று. யு. எஸ். சர்க்கார் நல்லவை கெட்டவையாகிய இருவிதமான செய்திகளையும் பிரசுரிப்பர்.

நமது கப்பல்கள் நாச அளவு மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது.

நாம் வெற்றிபெற வெகு நாட்களாகலாம் ஆனால், நாம் இறுதியில் வெற்றி பெறுவோமென்பது நிச்சயம்.

* * * *

மகத்தான கப்பல் கட்டும் திட்டம்

அமெரிக்க வர்த்தகக் கப்பல் தினத்தன்று அமெரிக்க மக்களுக்கு அடியில் வரும் ரூஸ்வெல்ட் ஜனாதிபதி செய்தியை விடுத்தார்:—

உலக சரித்திரத்திலேயே மிக அதிகமான கப்பல்களை நாம் கட்டி முடிப்போம். இக்காரியம் சுமார் ஒரு வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வளவு கப்பல்களைக் கட்ட வேறு எந்த நாட்டினரும் எக் காலத்திலும் முயன்றதில்லை. இத்திட்டத்தை நாம் வெற்றிகரமாகச் செய்து முடிப்போமா என்று சிலர் சந்தேகித்தனர். ஆனால் இந்த அரிய அத்புதத்தைச்செய்து முடிப்போமென்று நான் இன்று உறுதி கூறுகிறேன். நமது கப்பல் கட்டும் சக்தி 500 சதத்திற்கதிகமாகவே உயர்ந்திருக்கிறது. ஆயினும். முக்கிய யுத்த தளவாடங்களையேற்றிச் செல்வதற்குப் போதிய கப்பல்கள் நம் வசமிராதது நெருக்கடியான நிலைமையாகும். அச்சு நாட்டு ஸப்மரீன்கள் ஏராள கப்பல்களை மூழ்கடித்துள்ளன. ஆனால், இப்பிரச்னையைச் சமாளிக்க நாம் முயன்று வருகிறோம். எதிரி ஸப்மரீன்களுக்குத் தப்பி நமது கப்பல்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்கின்றன; இனியும் அவ்விதம் அதிகமாகச் செல்லும்.

* * * *

ருஷ்ய யுத்தம்

ஸோவியத் ராணுவ அறிக்கை ஒன்று தெரிவிப்பதாவது:—

ஸோவியத் துருப்புகள் கெர்ச் தீபகற்பத்தைக் காலி செய்து விட்டன. ஸோவியத் ராணுவத் தலைவர்களின் உத்திரவின் பேரிலேயே இத்துருப்புகள் தம் தளவாட சாதனங்களுடன், கட்டுப்பாடாகப் பின்வாங்கின.

ஜெர்மன் ராணுவத் தலைமைக் கார்யாலயத்தினர் அறிவிப்பதாவது:—

கார்காவ் முனையில் ஜெர்மன் துருப்புகள் மிக்க கஷ்டத்திற்குள்ளாகின்றன. போர் கடுமையாக இருப்பதுமட்டுமன்றி உஷ்ணமும் வெகு அதிகமாயிருக்கிறது. சுமார் 85 டிகிரிவரை உஷ்ணமிருக்கிறது. ருஷ்யர் தினந்தோறும் புதிய புதிய டாங்குப் படைகளைப் போருக்கு அனுப்புகின்றனர்.

* * * *

கருங்கடலில் ரஷ்ய தளங்கள்மீது குண்டுவீச்சு

இப்போது ஜெர்மன் விமானங்கள் கூட்டங் கூட்டமாகச் சென்று கருங்கடலிலுள்ள ரஷ்யக் கடற்படை தளங்களைத் தாக்குகின்றன. இத்தாக்குதல்களில் ஜெர்மனியர் இதுவரை வெற்றி பெறவில்லை; கடுஞ் சேதமே அடைந்து வருகின்றனர். நாஸிகள் இவ்விமான தாக்குதல்களை மே 21-ம் தேதியாரம்பித்தனர். அப்போது 4 நாஸி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

* * * *

இந்தோ சீனாவில் படை திரட்டு வேலை

பல ஊழிய வர்க்கங்களுக்கு மாருக இந்தோ சீனாவிலுள்ள சுதேச மக்களிலிருந்து ஜப்பான் லக்ஷம் பேரைத் திரட்ட முயன்று வருகிறது. என்று இந்தோ சீனாவிலிருந்து கிடைத்த தகவல் கூறுகிறது,

* * * *

தென்னாப்பிரிக்கா ஆபத்து குறைந்தது

பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் நிருபர்களிடம் பின்கண்ட விதம் தெரிவித்தார்.

மடகாஸ்கரை நாம் பிடித்துவிட்டதால் தென்னாப்பிரிக்கா மீது ஜப்பான் நேர்முகமாகத் தாக்கும் ஆபத்துக் குறைந்துவிட்டது. தென்னாப்பிரிக்காவுக்கும் மடகாஸ்கருக்கு மிடையே வர்த்தக உறவு மீண்டும் ஏற்பட வேண்டும்.

அட்டைப் படம்

பிரபல ஆங்கில ஸினிமா நடிகை மாடிலீன் கரோல்.

பிரிட்டனில் டாங்கிப் பயிற்சி

சமீபத்தில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் எதிரிப் பிரதேசத்திற்குப் போய் அங்கு நாசகாரியம் செய்வதற்குரிய பலம் பிரிட்டிஷ்படைகளுக்கு பிரதிதினமும் அதிகரித்து வருவதாகக் கூறினர் இந்தப் படத்தில் பிரிட்டிஷ் "வாலண்டின்" டாங்கி ஒன்று யுத்த களத்தில் முன்னேறுவதைக் காணலாம்.

நகரில் ராஜப்பிரதிநிதி

(மேல்) 1. மே. த. ராஜப்பிரதிநிதி லார்ட் லின்லித்கோ சமீபத்தில் சென்னைக்கு வந்தபோது ஒரு ராணுவ உத்யோகஸ்தருடன் சம்பாஷித்தார். பக்கத்தில் ஸர் ஆர்தர் ஹோப் இருக்கிறார். 2. லார்ட் லின்லித்கோவை ஏ. ஆர். பி. அதிகாரிகள் வரவேற்கின்றனர்.

1. விமானப் படையெடுப்பு நேர்ந்த பின்பு காயமடைந்தவருக்கு சிகிச்சை யளிப்பதைப் பார்வையிடுதல். 2. பாதுகாப்பு ஏற்பாடு ஒன்றைக் கவனித்து வெளியே வருகிறார். 3. ஒரு கயிறு மூலம் கட்டிடத்திற்குப் போய் இதரரைத் தப்புவிக்கச் செய்யப்படும் முயற்சி. 4. ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர்கள் சிகிச்சை பெறும் காட்சி, (பி. பி. பி.)

இயற்கை வைத்திய நூல்கள்

டாக்டர் கே. லக்ஷ்மண சர்மா

பி. ஏ., பி. எல்., ஏன். டி., இயற்றியவை

மருந்தில்லா வைத்தியம்	0 4 0
பூர்ண சக்தி	0 4 0
உபவாஸ தத்வம்	0 4 0
பத்திய உணவு	0 2 0
குரு ரமண வசன மாலை	0 12 0

BOOKS ON NATURE CURE

By Dr. Sarma K. Lakshman B. A. B. L., N. D.

PRACTICAL NATURE CURE	4 0 0
FASTING CURE	0 6 0
PRANAYAMA	0 2 0

By Dr. L. Kameswara Sarma M. A., N. D.

NATURAL CURE OF EYE DEFECTS	0 8 0
DRUGLESS HEALING	0 6 0

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

சிறுவர் பகுதி

★

தங்கக் குடம்

★

கே. எஸ். ரத்னுபாய்

முன்னொரு காலத்தில் காளிங்காபுரம் என்னும் கிராமத்தில் இரு சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் பெயர் முருகன். இளையவன் பெயர் கந்தன். மூத்தவனாகிய முருகன் பரம ஏழை. தினப்படி உண்ண உணவின்றி பட்டினியால் வாடி வதங்கும் தன்மையுடையவன். இளையவனாகிய கந்தன் என்பவன் தனவந்தன். அவன் தரித்திரம் என்பது எப்படிப்பட்டது என்பது தெரியாமல் காலங்கழித்து வந்தான்.

ஒரு நாள் முருகனின் ஏழ்மைத்தனத்திற்கு ஒரு உபகாரம் செய்யும் பொருட்டு அருகிலிருந்த ஒரு ஊரில் இருந்து ஒரு பெரியார் வந்து, "அன்பா! எனக்கு அடுத்த ஊரில் பூந்தோட்டம் ஒன்று இருக்கின்றது. அத்தோட்டத்திற்கு மத்தியில் ஒரு கிணறு ஒன்று இருக்கின்றது. அதிலிருந்து நீர் மொண்டு செடிகளுக்கு விடுவதற்காக ஒரு குடம் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தால் உனக்குப் போதிய பொருள் கொடுக்கின்றேன். அதைக் கொண்டு நீ சுகமாக காலம் கழிப்பாயாக" என்றார்.

அதற்கு முருகன் ஒப்புக்கொண்டு, தன் வீட்டில் இருந்த ஒரு பொத்தற் குடமாகிய இரும்புக் குடத்தை எடுத்துக் கொண்டு, அப்பெரியாராகிய மகானின் தோட்டம் சென்று, அவரிடும் வேலைகளைத் தட்டாமல் பூந்தோட்டத்தை அலங்கரிப்பதும், கிணற்றிலிருந்து ஜலம் மொண்டு செடிகளுக்குப் பாய்ச்சுவதுமாக வேலை செய்யத் தலைப்படவே, அம்மகானும் அவனுக்கு வேண்டிய பொருளைக் கொடுக்க, அதைக்கொண்டு அவன் கஷ்டமின்றி தன் குடும்பத்தை நிர்வாகம் செய்ய வாரம்பித்தான்.

ஒரு நாள் முருகன், கிணற்றிலிருந்து நீர் சேந்திக் கொண்டிருந்தான். மகான் அந்தப் புரத்தில் நிஷ்டையில் இருந்தார். அச்சமயம் முருகனின் பொத்தற் குடமாகிய இரும்புக் குடம் தவறி கிணற்றில் வீழ்ந்துவிட்டது. என்ன செய்வான் பாபம்! அவ

னுக்கு நீந்திப் போய் அக்குடத்தை எடுக்கத் தெரியாது. அருகில் வேறு யாருமில்லை. அவன் மனம் பலவாறு சிந்தனை செய்யத்தொடங்கியது.

"எனக்கு பொத்தல் குடமாகிய இந்த இரும்புக்குடம் இதுவரை ஆகாரமளித்துக் கொண்டு வந்து, இப்பொழுது என்னை மோசம் செய்து விட்டு, கிணற்றில் வீழ்ந்து விட்டதே! ஐயோ! கடவுளே! இனி நான் எவ்வாறு பிழைப்பேன்? எனக்கு நீந்தவும் தெரியாதே. இனி நான் எவ்வாறு பிழைப்பேன்" என்று அக்கிணற்றின் மீது சாய்ந்து அழுது கொண்டிருந்தான்.

அச் சமயம் கிணற்றிலிருந்து அத் தோட்டத்து வனதேவதை, "ஓ குடியானவனே! உன் குடம் இதோ! இதைப் பெற்றுக் கொண்டு நீ காலம் கழிப்பாயாக" என்று ஒரு தங்கக் குடம் ஒன்றை நீட்டியது.

அதைக் கண்ட குடியானவன் தன் கண்ணுக்கு ஒரு தங்கக் குடமும் தன் செவிக்கு மேற் கூறிய குரலும் தான் கேட்டதே ஒழிய அவ்வனதேவதையின் ரூபம் தெரியவில்லை. ஆயினும் அவ்வதிசயத்தைக் கண்ட அவன் ஆச்சரியப் பட்டு, ஆத்திரப் படாமல் "இது என்னுடையது அல்லவே, என் குடம் இரும்பினால் செய்யப்பட்டது" என்றான்.

வனதேவதைக்கு குடியானவனிடம் இரக்கம் உண்டாகியது. தங்கக் குடத்தை நாம் கொடுத்தும் அது தன்னுடையது அல்ல என்று ஆத்திரப் படாமல் கூறிய அவனை மேலும் சோதிக்க எண்ணி ஒரு வெள்ளியினால்செய்த குடத்தைக் காட்டி, "குடியானவ முருகனே!

உன் குடம் இதோ. இதைப் பெற்று நீ காலத்தை சுகமாகப் கழிப்பாயாக" என்று வெள்ளிக் குடம் ஒன்றை அவன் முன் நீட்டியது.

அதற்கு முருகன், "இதுவும் என்னுடையது அல்லவே. என்குடம் இரும்பினால் செய்யப்பட்டது. ஆகவே, அக்குடம் ஒன்றே எனக்குப் போதுமானது. அதைக் கொண்டு, நான் முன்போலவே கூலி வேலை செய்து பிழைப்பேன். அதிலும் என் குடம் பொத்தல்களால் நிறைந்திருக்கும். அதை எடுத்துக்கொடுத்தால் தங்கள் கடாக்ஷத்தினாலும், புண்ணியத்தினாலும் நான் முன்போல் பிழைப்பேன்" என்றான் முருகன்.

இவ்வரிய சொற்களைக் கேட்ட வனதேவதை, உள்ளம் புகழ, "அவன் இரும்புக் குடத்தையே எடுத்து, இதுவா உன்னுடையது?" என்றாள்.

"இதுதான் என்னுடையது. இதை மட்டும் கொடுத்தால் நான் சுகமே காலங்கழிப்பேன்" என்று அதை வாங்கும் பொருட்டு கையை நீட்டினான். உடனே வனதேவதை அவன் முன் பிரத்யக்ஷமாகி, "அன்பா! ஆத்திரம் கொள்ளாமல் இருந்த உன் மனதை



உலகில் சிறந்த சரும ரோக நிவாரணி

தேமல், ரணம், புண் முதலியவற்றை ஜாம்-பெக் குணப்படுதும்.

சருமக் கோளாறுகள், காயங்கள் முதலியவற்றைத் திருப்திகரமாகக் குணப்படுத்த ஜாம்-பெக் உலகில் சிறந்த நிவாரணியாகும். வெட்டுக் காயம், ரணமுள்ள இடங்களில் இந்த அற்புத மெழுகைத் தடவுங்கள். வெகு சீக்கிரம் குணப்படுத்திவிடும். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகைச் சத்துக்கள் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்தைக் குறைத்து சீழ்வடிதலை நிறுத்திவிடும். ஜாம்-பெக் தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ 1 அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.